க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2015

மதிப்பீட்டு அறிக்கை

21 - பொருளியல்



ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2015

மதிப்பீட்டு அறிக்கை

21 – பொருளியல்



ஆய்வு அபிவிருத்திக் கிளை
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

முழுப் பதிப்புரிமையுடையது.

பொருளியல்

மதிப்பீட்டு அறிக்கை - க.பொ.த (உ.தர)ப் பரீட்சை - 2015

நிதி அனுசரணை

எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலை கல்விமுறையை மாற்றியமைக்கும் செயற்றிட்டம்
(TSEP-WB) **ஊடாக**

அறிமுகம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையானது இலங்கையின் உயர்மட்ட இரண்டாம் நிலைக் கல்வியின் இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையாகும். உயர்மட்ட இரண்டாம் நிலைக் கல்வியின் இறுதியில் மாணவர்களின் அடைவு மட்டத்தைச் சான்றுப்படுத்தல் இப் பரீட்சையின் முக்கிய நோக்காக இருந்த போதும் தேசிய பல்கலைக்கழகங்கள், வேறு கல்வி மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்கள், தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றுக்குத் தகைமையானோரைத் தெரிவு செய்தலும் இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெறுவதால் அடைவுப் பரீட்சையாகவும் தேர்வுப் பரீட்சையாகவும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தன்மையைப் பெறுகிறது. மேலும் மூன்றாம் நிலையில் தொழிலில் பிரவேசிப்பதற்கான தகைமையை சான்றுப்படுத்தும் பரீட்சையாகவும் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இப்போது இப்பரீட்சைக்காக 2015 ஆம் ஆண்டில் 210 340 வரையிலான பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 44851 வரையிலான தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இப்பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தைப் பெறுவதற்காக மாணவர்களும் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்காக ஆசிரியர்களும் பெற்றோரும் பெரிதும் முயற்சி செய்கின்றனர். இந்த மதிப்பீட்டு அறிக்கையை அவர்களின் அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவும் பொருட்டே இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இந்த மதிப்பீட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் பரீட்சையை எதிர்பார்த்திருப்போர், ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடப் பொறுப்புக் கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர், கல்வி ஆய்வாளர்கள் அனைவருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

இந்த மதிப்பீட்டு அறிக்கை I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

க.பொ.த (உ.தர) பொருளியல் பாடத்தின் நோக்கம், பாட அடைவு பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி I இல் அடங்கியுள்ளன. இப்பகுதியில் பாடத்திற்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, அவர்கள் தரங்களைப் பெற்றுள்ள விதம், மாவட்ட மட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகள் தரங்களைப் பெற்றுள்ள விதம், வகுப்பாயிடைக்கேற்ப புள்ளிகளின் பரம்பல் ஆகிய பாட அடைவு பற்றிய புள்ளிவிபரத் தகவல்களும் பொருளியல் பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றில் வினாக்கள் தெரிவு செய்யப்பட்ட விதம், அவ்வினாக்களுக்கும் அவ்வினாக்களின் பகுதிகளுக்கும் புள்ளிகள் பெற்றுள்ள விதம் என்பன பற்றி விரிவாகக் குறிப்பிடும் பாட அடைவு பற்றிய பகுப்பாய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளன. க.பொ.த (உ.தர)ம் - 2015 பரீட்சையில் பொருளியல் பாடத்தின் வினாப்பத்திரம் I, II என்பவற்றுக்கான வினாக்கள் அவ்வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடைகள் அளித்திருந்தமை பற்றிய தகவல்கள் இந்த அறிக்கையின் பகுதி II இல் அடங்கியுள்ளன. அதில் வினாப்பத்திரம் I, II என்பவற்றின் வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடைகள் அளித்தமை பற்றிய அவதானிப்புக்கள், முடிவுகள், பாட அடைவை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திக் கிளை மூலம் விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபட்ட பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்கள் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள், அவதானிப்புகள், கருத்துகள், ஆலோசனைகள், மரபு ரீதியான சோதனைக் கோட்பாடு (Classical Testing Theory) மற்றும் உருப்படித் துலங்கல் கோட்பாடு (Item Response Theory) என்பவற்றைப் பயன்படுத்தி பரீட்சார்த்திகளின் துலங்கல்களைப் பகுப்பாய்வு செய்தலினூடாகப் பெறப்பட்ட தகவல்கள் என்பன இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன.

வினாப்பத்திரத்திலுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கும்போது பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள், கற்றல்-கற்பித்தல் பணிகள் பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் என்பனவும் இந்த அறிக்கையின் பகுதி III இல் அடங்கியுள்ளன. பல்வேறு தேர்ச்சிகள், அத்தேர்ச்சி மட்டங்களை அணுகுவதற்கான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்கமைக்கும் விதம் என்பன தொடர்பாக இந்த அறிக்கையானது பெரிதும் துணை புரியும் என நம்புகின்றேன். **எதிர்காலத்தில்** தொகுக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பண்புத்தரத்தை மேம்படுத்தக் கூடிய பயன்தரும் கருத்துகள், ஆலோசனைகள் என்பவற்றை எங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கிய பிரதம பரீட்சகர்கள், மேலதிக பிரதம பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்கள், ஆர்வத்துடன் பங்களிப்பு வழங்கிய குழு உறுப்பினர்கள், பொறுப்புடன் கடமையாற்றிய இலங்கைப் பரீட்சைத் திணைக்கள அலுவலர்கள், பணிக்குழுவினர் ஆகியோருக்கும் இத்தொகுப்புக்கான நிதி அனுசரணை வழங்கிய எதிர்கால அறிவை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்விமுறைமையை மீளமைக்கும் செயற்றிட்டத்துக்கும் (TSEP - WB) எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார
பரீட்சை ஆணையாளர் நாயகம்

2015 யூன் 29
ஆய்வு அபிவிருத்திக் கிளை
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை,
பத்தரமுல்ல.

ஆலோசனை	:	டப்ளியூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார பரீட்சை ஆணையாளர் நாயகம்
நெறிப்படுத்தலும் ஒழுங்கமைப்பும்	:	கயாத்திரி அபேகுணசேகர பரீட்சை ஆணையாளர் (ஆய்வு அபிவிருத்திக் கிளை)
இணைப்பாக்கம்	:	மனோமி செனெவிரத்ன உதவிப் பரீட்சை ஆணையாளர்
பாட இணைப்பாக்கம்	:	ஹசன்தா குருப்பு உதவிப் பரீட்சை ஆணையாளர்
தொகுப்பு	:	வசந்த அதுகோரல சிரேஷ்ட விரிவுரையாளர் பொருளியல் புள்ளிவிபரவியல் கற்கைத் துறை பேராதனைப் பல்கலைக்கழகம் சிரேஷ்ட விரிவுரையாளர் காமினி வீரசிங்க பொருளியல் புள்ளிவிபரவியல் கற்கைத் துறை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
ஆக்கக் குழு	:	டபிள்யூ. லயனல் வீரசிங்க ஆசிரியர் சேவை கொ/ விசாகா வித்தியாலயம் டீ.ஜீ. சுகத் ஆசிரியர் சேவை மாறை / புனித தோமஸ் மகளிர் வித். மாதறை எம். ஜீ. தமரா டீ. காரியவசம் ஆசிரியர் சேவை கா / சங்கமித்தா மகளிர் கல்லூரி, காலி டப். ஏ. டீ. பியசிரி ஆசிரியர் சேவை கொ / ஆனந்தா கல்லூரி, கொழும்பு 10 எஸ். என். பீ. எம். எஸ். ரன்ஜன் ஆசிரியர் சேவை களு / மிரிஸ்வத்த தேசிய கல்லூரி, தொடங்கொட என். நிசாந்த ஆசிரியர் சேவை கொ / ஆனந்தா கல்லூரி, கொழும்பு 10
மொழிபெயர்ப்பு	:	திருமதி யூ. எல். எம் மின்னத்துள் ஹைரா உதவி பரீட்சை ஆணையாளர்
கணினி பக்க வடிவமைப்பு	-	எஸ். றஹீனா ஹாசிம் கணினி தரவுப் பதிவாளர்
முகப்பு அட்டை வடிவமைப்பு	-	வை. எஸ். அனுராதி அபிவிருத்தி அதிகாரி

உள்ளடக்கம்

பக்க எண்

பகுதி I

1. **பாடக் குறிக்கோள்களும் பாட அடைவு தொடர்பான தகவல்களும்**

1.1 **பாடக் குறிக்கோள்கள்** 1

1.2 **பாட அடைவு தொடர்பான தகவல்கள்** 2

1.2.1. இப்பாடத்துக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை **2**

1.2.2. பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் **2**

1.2.3. மாவட்ட அடிப்படையில் முதற் தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் **3**

1.2.4. வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் **4**

1.3 **பாட அடைவு தொடர்பான பகுப்பாய்வு**

1.3.1. வினாப்பத்திரம் I இன் அடைவு 5

1.3.2. வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம் 6

1.3.3. வினாப்பத்திரம் II இன் வினாக்களுக்கு புள்ளிகள் பெறப்பட்டுள்ள விதம் 6

1.3.4. வினாப்பத்திரம் II இன் அடைவு 7

பகுதி II

2. **வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்**

2.1 **வினாப்பத்திரம் I உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்** 9

2.1.1. வினாப்பத்திரம் I இன் கட்டமைப்பு 9

2.1.2. வினாப்பத்திரம் I 10

2.1.3. வினாப்பத்திரம் I இற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும் 17

2.1.4. வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை பற்றிய அவதானிப்புகள் 18

2.1.5. சதவீத அடிப்படையில் வினாப்பத்திரம் இல் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகளைத் தெரிவு செய்துள்ள விதம் 19

2.1.6. வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 20

2.2 **வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான விவரங்களும்**

2.2.1. வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு 21

2.2.2. வினாப்பத்திரம் II இற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 22

2.2.3. வினாப்பத்திரம் II இற்கு விடையளிக்கப்பட்ட விதம் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள் 66

பகுதி III

3. **விடையளிக்கும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்**

3.1 **விடையளிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்** 68

3.2 **கற்றல் கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்** 71

பகுதி I

1.0 பாடக் குறிக்கோள்களும் பாட அடைவும்

1.1 பாடக் குறிக்கோள்கள்

- ★ சமூகம் ஒன்றின் அடிப்படை பொருளாதார பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியாக பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவ்வடிப்படைப் பொருளாதார பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக பயன்படுத்தக்கூடிய மாற்று வழிகள் தொடர்பாக தெளிவான விளக்கமளித்தல்.
- ★ பொருளாதார எண்ணக்கருக்கள் மற்றும் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதன் மூலம், பிரயோகப் பொருளாதார பிரச்சினைகளையும் செல்நெறிகள் நிலைமைகளையும் பகுப்பாய்வு செய்வதற்குத் தேவையான திறன்களை வழங்குதல்.
- ★ பேரினப் பொருளியல் மாறிகளின் துலங்கள்கள் மற்றும் அவற்றுக்கிடையே நிலவும் இடைத் தொடர்புகளை விளங்கிக் கொள்ளச் செய்தல்.
- ★ சந்தையொன்றில் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தர்க்க ரீதியாக நடந்து கொள்ளும் முறைகளை விமர்சிக்க ஊக்குவித்தல்.
- ★ பொருளியல் ரீதியாக எண்ணுவதற்கு தேவையான தர்க்க ரீதியான சிந்தனைகளை உருவாக்குதல்.
- ★ பல்வேறு பொருளியல் எண்ணக்கருக்கள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணப்படுத்த சந்தர்ப்பம் வழங்குதல்.
- ★ சந்தை முறையொன்றில் பேரினப் பொருளியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையீடு செய்கின்ற முறைமை தொடர்பாக ஆராய்ந்து விமர்சனத்தில் ஈடுபடுத்துதல்.
- ★ நடைமுறையிலுள்ள பொருளியல் கொள்கைகளை விமர்சன ரீதியாகப் பகுப்பாயும் ஆற்றலை வழங்குதல்.
- ★ பொருளியல் அபிவிருத்தியில் பல்வகைத் தன்மையை சமநிலை ரீதியில் விமர்சிப்பதற்குத் தேவையான திறன்களை வழங்கல்.
- ★ பொருளியல் பாடத்தைப் பகுப்பாய்வு ரீதியில் விளக்குவதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளை வழங்குல்.
- ★ சர்வதேச வர்த்தகத்தினதும் மற்றும் நிதியினதும் முக்கியத்துவத்துக்கும் மற்றும் பூகோளமயமாதலுக்குமிடையிலும் உள்ள தொடர்பை எடுத்துக் காட்டுதல்.
- ★ இலங்கைப் பொருளாதாரத்தின் செயலாற்றுகை தொடர்பாக விமர்சன ரீதியில் நோக்குவதற்கான திறன்களை வளர்த்தல்.
- ★ சமூகத்தின் நல் இருத்தலுக்காகச் (Social well being) செயற்படுத்துவதற்குத் தேவையான அடிப்படையினை வழங்குதல்.
- ★ உயர் கல்விக்குப் பிரவேசிப்பதற்குப் பொருத்தமான அடித்தளத்தை வழங்குதல்.

1.2. பாட அடைவு தொடர்பான தகவல்கள்

1.2.1. பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை

மொழிமூலம்	பாடசாலை	தனிப்பட்ட	மொத்தம்
சிங்களம்	53481	6573	60054
தமிழ்	9053	1428	10481
ஆங்கிலம்	1928	805	2733
மொத்தம்	64462	8806	73268

அட்டவணை 1

1.2.2 பரீட்சார்த்திகள் தரங்கள் பெற்றுள்ள விதம்

தரம்	பாடசாலைப் பரீட்சார்த்திகள்		தனிப்பட்ட பரீட்சார்த்திகள்		மொத்தம்	சதவீதம்
	எண்ணிக்கை	சதவீதம்	எண்ணிக்கை	சதவீதம்		
A	8386	13.01	658	7.47	9044	12.34
B	8824	13.69	776	8.81	9600	13.10
C	15385	23.87	1571	17.84	16956	23.14
S	18232	28.28	2514	28.55	20746	28.32
F	13635	21.15	3287	37.33	16922	23.10
மொத்தம்	**64462**	**100.00**	**8806**	**100.00**	**73268**	**100.00**

அட்டவணை 2

1.2.3 **முதற்தடவையாகத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளால் தரங்கள் பெறப்பட்டுள்ள விதம் - மாவட்ட அடிப்படையில்**

மாவட்டம்	தோற்றியோரின் எண்ணிக்கை	அதி சிறந்த சித்தி (A) பெற்றோர்		விசேட திறமைச் சித்தி (B) பெற்றோர்		திறமைச் சித்தி (C) பெற்றோர்		சாதாரண சித்தி (S) பெற்றோர்		சித்தி பெற்றோர் (A+B+C+S)		சித்தி அடையாதோர் (F)	
		எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%
1. கொழும்பு	9585	1672	17.44	1314	13.71	2265	23.63	2543	26.53	7794	81.31	1791	18.69
2. கம்பஹா	5537	818	14.77	667	12.05	1144	20.66	1593	28.77	4222	76.25	1315	23.75
3. களுத்துறை	2745	372	13.55	393	14.32	628	22.88	738	26.89	614	22.37	2131	77.63
4. கண்டி	3543	380	10.73	428	12.08	835	23.57	1028	29.01	2131	77.63	614	17.33
5. மாத்தளை	874	68	7.78	89	10.18	221	25.29	264	30.21	642	73.46	232	26.54
6. நுவரெலியா	1206	136	11.28	184	15.26	292	24.21	302	25.04	914	75.79	292	24.21
7. காலி	2754	337	12.24	315	11.44	576	20.92	811	29.45	2039	74.04	715	25.96
8. மாத்தறை	1688	182	10.78	207	12.26	342	20.26	497	29.44	1228	72.75	460	27.25
9. அம்பாந்தோட்டை	1134	107	9.44	126	11.11	231	20.37	328	28.92	792	69.84	342	30.16
10. யாழ்ப்பாணம்	1120	121	10.8	134	11.96	300	26.79	322	28.75	877	78.3	243	21.70
11. கிளிநொச்சி	202	14	6.93	30	14.85	52	25.74	46	22.77	142	70.3	60	29.70
12. மன்னார்	203	18	8.87	28	13.79	59	29.06	59	29.06	164	80.79	39	19.21
13. வவுனியா	310	45	14.52	44	14.19	88	28.39	94	30.32	271	87.42	39	12.58
14. முல்லைத்தீவு	135	11	8.09	13	9.56	39	28.68	42	30.88	31	22.79	31	22.96
15. மட்டக்களப்பு	805	54	6.71	84	10.43	240	29.81	277	34.41	655	81.37	150	18.63
16. அம்பாறை	1068	79	7.4	131	12.27	273	25.56	328	30.71	811	75.94	257	24.06
17. திருகோணமலை	670	51	7.61	75	11.19	157	23.43	196	29.25	479	71.49	191	28.51
18. குருநாகல்	3194	355	11.11	400	12.52	684	21.42	910	28.49	2349	73.54	845	26.46
19. புத்தளம்	1515	151	9.97	207	13.66	383	25.28	445	29.37	1186	78.28	329	21.72
20. அனுராதபுரம்	1407	188	13.36	156	11.09	287	20.4	441	31.34	1072	76.19	335	23.81
21. பொலன்னறுவை	661	44	6.66	68	10.29	154	23.3	208	31.47	474	71.71	187	28.29
22. பதுளை	1684	126	7.48	168	9.98	366	21.73	524	31.12	1184	70.31	500	29.69
23. மொனராகலை	717	70	9.76	86	11.99	157	21.9	217	30.26	530	73.92	187	26.08
24. இரத்தினபுரி	2097	282	13.45	271	12.92	472	22.51	577	27.52	1602	7639	495	23.61
25. கேகாலை	1519	132	8.69	196	12.9	353	23.24	466	30.68	1147	7551	372	24.49
மொத்தம்	**46373**	**5813**	**12.54**	**5814**	**12.54**	**10598**	**22.85**	**13256**	**28.59**	**35481**	**76.51**	**10892**	**23.49**

அட்டவணை 3

1.2.4. வகுப்பாயிடை அடிப்படையில் புள்ளிகள் பெற்றுள்ள விதம்

வகுப்பாயிடை	மீடிறன்	சதவீத மீடிறன்	திரள் மீடிறன்	சதவீத திரள் மீடிறன்
91 - 100	107	0.15	73268	100.00
81 - 90	3087	4.21	73161	99.85
71 - 80	8264	11.28	70074	95.64
61 - 70	10505	14.34	61810	84.36
51 - 60	12134	16.56	51305	70.02
41 - 50	13543	18.48	39171	53.46
31 - 40	13019	17.77	25628	34.98
21 - 30	8953	12.22	12609	17.21
11 - 20	3419	4.67	3656	4.99
01 - 10	234	0.32	237	0.32
00 - 00	3	0.00	3	0.00

அட்டவணை 5

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையியின்படி 31 - 40 இற்கு இடையில் புள்ளிகள் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 13019 என்பதுடன் அது மொத்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் 18% ஆகும். 40 அல்லது அதனை விடக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 25628 ஆகும். அது மொத்தப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் 35% ஆகும்.

1.3 பாட அடைவு பற்றிய பகுப்பாய்வு

1.3.1 வினாப்பத்திரம் I இன் அடைவு



வரைபு 1 (இது RD/16/05/AL படிவத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

மேலே தரப்பட்டுள்ள வரைபின் அடிப்படையில் 02 ஆம் வினாவுக்கே கூடுதலான எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்துள்ளனர். அது கிட்டத்தட்ட 94% சதவீதம் ஆகும். அதேபோன்று 29, 45 ஆகிய வினாக்களுக்கு மிகக் குறைந்த எண்ணிக்கையான பரீட்சார்த்திகளே சரியாக விடையளித்துள்ளனர். அது கிட்டத்தட்ட 9% ஆகும்.

1.3.2. வினாப்பத்திரம் II இல் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விதம்.



இவ்வரைபின்படி, 'அ' பகுதியின் 01 ஆம் வினா அதிகளவான பரீட்சார்த்திகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதன் சதவீதம் 97% ஆகும். 'ஆ' பகுதியிலுள்ள 10 ஆம் வினாவினைக் குறைந்தளவான பரீட்சார்த்திகள் தெரிவுசெய்துள்ளதோடு அதன் சதவீதம் 18% ஆகக் காணப்படுகின்றது.

வரைபு 2 -(RD/16/02/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

1.3.3 வினாத்தாள் II இல் புள்ளிகள் பெற்றுள்ள விதம்



இங்கு 4 ஆம் வினாவுக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 20 ஆகும். இவ் வரைபின்படி அப்புள்ளிகளில் 76%-100% என்ற வீச்சில் அதாவது 16 தொடக்கம் 20 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோர் 9.3% ஆவர். அதேபோன்று 20 புள்ளிகளில் 0%-25% வீச்சில் அதாவது 0 முதல் 5 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டோர் 44% ஆவர்.

வரைபு 3 - (RD/16/02/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

1.3.4 வினாப்பத்திரம் II இன் அடைவு



வரைபு **4.1** : (RD/16/04/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)
உ-ம் : மேல் வரைபின்படி தகவல்களைப் பெறும் முறை பின்வரும் உதாரணத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது.
1 ஆம் வினாவின் (I) ஆம் பிரிவின் இலக்குதன்மை 86% உம் 4 ஆம் வினாவின் IV ஆம் பிரிவின் (ii) உபபிரிவின் இலக்குதன்மை 13% உம் ஆகும்.



வரைபு **4.2** : (RD/16/04/AL படிவத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.)

2 வினாக்களும் அவற்றிற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்களும்

2.1. வினாப்பத்திரம் I உம் அதற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்களும்

2.1.1. வினாப்பத்திரம் I இல் கட்டமைப்பு

நேரம் 02 மணித்தியாலங்கள் ஆகும்.

- ஐந்து தெரிவுகளைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும்.
- ஒரு வினாவிற்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

2.1.2. வினாப்பத்திரம் I

1. பின்வருவனவற்றில் சிற்றினப் பொருளியல் கூற்று எது ?
(1) கடந்த ஆண்டில் இறப்பரின் விலை 10% இனால் வீழ்ச்சியடைந்தது.
(2) கடந்த ஆண்டில் வேலையின்மை வீதமானது தொழிற்படையின் 5.8% ஆக இருந்தது.
(3) கடந்த ஆண்டில் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7% இனால் அதிகரித்தது.
(4) கடந்த ஆண்டில் பொதுவிலை மட்டமானது 4% இனால் அதிகரித்தது.
(5) கடந்த ஆண்டில் அரசாங்கத்தின் வரிவருவாய் 8% இனால் வீழ்ச்சியடைந்தது. (.....)

2. பொருளாதார முறைமையொன்றில் தீர்மானம் மேற்கொள்ளும் மூன்று முக்கிய குழுக்களாவன,
(1) வீட்டுத்துறையினர், வியாபார நிறுவனங்கள் மற்றும் வங்கிகளாகும்.
(2) வீட்டுத்துறையினர், வியாபார நிறுவனங்கள் மற்றும் அரசாங்கமாகும்.
(3) வியாபார நிறுவனங்கள், அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களாகும்.
(4) வியாபார நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களாவர்.
(5) வீட்டுத்துறையினர், அரசாங்கம் மற்றும் வங்கிகளாகும். (.....)

3. குறித்த ஒரு நடவடிக்கையின் அமையச் செலவானது
(1) அக்குறித்த நடவடிக்கையை மேற்கொள்ளும் அனைவருக்கும் சமமானதாக இருக்கும்.
(2) அந்நடவடிக்கையின் பணச்செலவு மற்றும் தியாகம் செய்யப்பட்ட வருமானம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்.
(3) அந்நடவடிக்கையின் பணச் செலவை மட்டும் உள்ளடக்கும்.
(4) அந்நடவடிக்கையினால் தியாகம் செய்யப்பட்ட வருமானங்களை மட்டும் உள்ளடக்கும்.
(5) அந்நடவடிக்கையின் நேரடி நன்மைகளை மட்டும் அளவிடுகிறது. (.....)

4. நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லையின் வழியே
(1) தொழினுட்ப மட்டமானது மாற்றமடையும்.
(2) ஒரு பொருளின் அதிக அளவினை மற்றொரு பொருளின் உற்பத்தியை விட்டுக்கொடுக்காமல் உற்பத்தி செய்ய முடியும்.
(3) உற்பத்தி வளங்கள் பூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை.
(4) கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்கள் பூரணமாகப் பயன்படுத்தப்படுகின்றன.
(5) பொருளாதாரத்தில் உற்பத்தி வினைத்திறனின்மை நிலவுகிறது. (.....)

5. வளங்கள் சகல பொருளாதார நடவடிக்கைகளிலும் ஒன்றுக்கொன்று பூரண பதிலீடாகக் காணப்படுமாயின் பின்வருவனற்றில் எது உண்மையாகும் ?
(1) சகல பொருள்களினதும் வெளியீட்டை அதிகரிக்க முடியும்.
(2) உற்பத்தி இயல்தகவு வளையி ஒரு நேர் கோடாகும்.
(3) சிறப்புத் தேர்ச்சியும் பரஸ்பர நன்மைதரும் வர்த்தகமும் உருவாகச் சாத்தியமில்லை.
(4) எந்த ஒரு நாடோ அல்லது நபரோ எந்தவொரு நடவடிக்கையிலும் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டிருக்க முடியாது.
(5) வளங்களின் அருமைத்தன்மை இல்லாமற் போய்விடும். (.....)

6. பின்வருவனவற்றுள் முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமொன்றின் **பண்பல்லாதது** எது ?
(1) கேள்வி, நிரம்பலை அடிப்படையாகக் கொண்ட விலைப்பொறிமுறை
(2) தனியார் சொத்துரிமை முறை
(3) சுய கரிசனையுடன் செயற்படும் வீட்டுத்துறையினரும் முயற்சியாளர்களும்
(4) சுதந்திரமான முயற்சியாண்மை
(5) மத்திய திட்டமிடல் முறைமை (.....)

7. பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பங்குபற்றலினளவு அதிகளவில் காணப்படுவது,
(1) சந்தைப் பொருளாதாரமொன்றிலாகும்.
(2) கட்டளைப் பொருளாதாரமொன்றிலாகும்.
(3) கலப்புப் பொருளாதாரமொன்றிலாகும்.
(4) சமூகச் சந்தைப் பொருளாதாரமொன்றிலாகும் (Social market economy).
(5) மரபுரீதியான பொருளாதாரமொன்றிலாகும். (.....)

8. நபரொருவரின் வருமானம் அதிகரிக்கும்போது பால்மாவுக்கான கேள்வியும் அதிகரிக்குமாயின், பால்மாவானது
(1) இழிவுப் பொருளுக்கான ஓர் உதாரணமாகும். (2) பொருளாதாரமல்லாப் பொருளுக்கான ஓர் உதாரணமாகும்.
(3) கிபன் பொருளுக்கான ஓர் உதாரணமாகும். (4) பொதுப் பொருளுக்கான ஓர் உதாரணமாகும்.
(5) சாதாரண பொருளுக்கான ஓர் உதாரணமாகும். (.....)

9. தரப்பட்ட காலப்பகுதியில் ஒரு போட்டிச் சந்தையில் 'சாதாரண பொருளொன்றின்' கேள்வி அதிகரிக்க நிரம்பல் வீழ்ச்சியடையுமாயின்,
(1) சமநிலை விலை வீழ்ச்சியடையும்; சமநிலைத் தொகை அதிகரிக்கும்.
(2) சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகை ஆகிய இரண்டும் அதிகரிக்கும்.
(3) சமநிலைத் தொகை அதிகரிக்கும்; சமநிலை விலை அதிகரிக்கலாம் அல்லது வீழ்ச்சியடையலாம்.
(4) சமநிலை விலை வீழ்ச்சியடையும்; சமநிலைத் தொகை அதிகரிக்கலாம் அல்லது வீழ்ச்சியடையலாம்.
(5) சமநிலை விலை அதிகரிக்கும்; சமநிலைத் தொகை அதிகரிக்கலாம், வீழ்ச்சியடையலாம் அல்லது மாறாதிருக்கலாம்.

10. சீனியும் கருப்பட்டியும் நுகர்வு நடவடிக்கைகள் பலவற்றில் ஒன்றுக்கொன்று பதிலீடாகக் கருதப்படும். எனவே, சீனியின் விலை அதிகரிக்கும்போது,

(1) கருப்பட்டிக்கான கேள்வி அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.
(2) கருப்பட்டிக்கான கேள்வி குறையும் என எதிர்பார்க்கலாம்.
(3) கருப்பட்டிக்கான கேள்வித் தொகை குறையும் என எதிர்பார்க்கலாம்.
(4) கருப்பட்டியின் விலை குறையும் என எதிர்பார்க்கலாம்.
(5) கருப்பட்டிக்கான கேள்வித் தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம். (.....)

11. தேங்காய்களுக்கான விலைக்கேள்வி நெகிழ்ச்சி –1.0 எனக் கருதுக. இந்நிலைமையில் தேங்காயொன்றின் விலை ரூபா 60 ஆகவுள்ளபோது கேள்வித் தொகையானது 500 தேங்காய்களாகும். கேள்வித் தொகை 600 தேங்காய்களாயின், தேங்காயொன்றின் விலை என்னவாக இருக்கும் ?

(1) ரூபா 30 (2) ரூபா 40 (3) ரூபா 50 (4) ரூபா 55 (5) ரூபா 60 (.....)

12. பின்வருவனவற்றுள் பொருளொன்றின் கேள்வி வளையியின் இடப்புற நகர்வுக்குக் காரணமாவது எது ?

(1) அப்பொருளின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
(2) அப்பொருளின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி.
(3) இணைப்புப் பொருளொன்றின் விலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி.
(4) பதிலீட்டுப் பொருளொன்றின் விலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு.
(5) எதிர்காலத்தில் விலை வீழ்ச்சியடையலாம் என்னும் எதிர்பார்க்கை. (.....)

13. பொருளொன்றின் சந்தைக் கேள்வி வளையி கீழ்நோக்கிய சரிவுள்ளதாயும் சந்தை நிரம்பல் வளையி மேல்நோக்கிய சரிவுள்ளதாயும் காணப்படும்போது உள்ளீடுகளின் விலைகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சியானது,

(1) சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகையினை அதிகரிக்கச் செய்யும்.
(2) சமநிலை விலை மற்றும் சமநிலைத் தொகையினை வீழ்ச்சியடையச் செய்யும்.
(3) நிரம்பல் வளையியை இடப்புறம் நகரச் செய்யும்.
(4) சமநிலை விலையை வீழ்ச்சியடையச் செய்வதுடன் சமநிலைத் தொகையை அதிகரிக்கச் செய்யும்.
(5) சமநிலை விலையை அதிகரிக்கச் செய்வதுடன் சமநிலைத் தொகையை வீழ்ச்சியடையச் செய்யும். (.....)

14. சிறிய நாடொன்றில் சீனிக்கான உள்நாட்டுச் சந்தைக் கேள்வி மற்றும் சந்தை நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுகின்றன.

$Q_d = 320 - 3P$ (கேள்வி)

$Q_s = -80 + 2P$ (நிரம்பல்)

அத்துடன் அந்நாட்டின் சீனிக்கான சந்தை சர்வதேச வர்த்தகத்திற்கு திறந்து விடப்படுவதாகவும் சீனியின் உலக விலை அலகொன்று ரூபா 60 எனவும் கருதுக. நாடு சர்வதேச வர்த்தகத்திற்கு திறந்து விடப்பட்டபின் சந்தைக்கு உள்நாட்டிலிருந்து நிரம்பல் செய்யப்படும் சீனியின் அளவு யாது ?

(1) 40 அலகுகள் (2) 60 அலகுகள (3) 80 அலகுகள்
(4) 100 அலகுகள் (5) 140 அலகுகள் (.....)

15. பெற்றோலுக்கான கேள்வி மிகவும் நெகிழ்வற்றதாகவும் நிரம்பல் மிகவும் நெகிழ்வுள்ளதாகவும் இருப்பதாகக் கருதுக. இந்நிலைமையில் பெற்றோல் மீது விதிக்கப்படும் ஓர் உற்பத்தி வரியானது,

(1) கொள்வனவாளர் மீது அதிக சுமையினை ஏற்படுத்தும்.
(2) விற்பனையாளர் மீது அதிக சுமையினை ஏற்படுத்தும்.
(3) கொள்வனவாளர் மற்றும் விற்பனையாளர் மீது சமமான சுமையினை ஏற்படுத்தும்.
(4) வரிசெலுத்துவோர் மீது முழுமையான சுமையினை ஏற்படுத்தும்.
(5) கொள்வனவாளர் மீதோ விற்பனையாளர் மீதோ சுமையினை ஏற்படுத்தாது. (.....)

16. பின்வரும் வரைபு விவசாயப் பொருளொன்றுக்கான போட்டிச் சந்தையில் கேள்வி, நிரம்பல் வளையிகளைக் காட்டுகிறது.



அரசாங்கம் இப்பொருளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் உற்பத்தியாளருக்கு, உற்பத்தி அலகொன்றுக்கு ரூபா 2 மானியம் வழங்கத் தீர்மானிக்கிறது. மானியத்தின் பின்னரான நுகர்வோன் மிகை,

(1) ரூ. 20 ஆகும். (2) ரூ. 80 ஆகும். (3) ரூ. 90 ஆகும்.
(4) ரூ. 160 ஆகும். (5) ரூ. 180 ஆகும். (.....)

17. சந்தைச் சமநிலை விலையை விடக் குறைந்த ஓர் உச்ச விலையை நிர்ணயித்து விதிக்கப்படும் உச்ச விலைக் கொள்கையின் விளைவானது, சந்தையில்

(1) மிகை நிரம்பலை ஏற்படுத்தும். (2) மிகைக் கேள்வியை ஏற்படுத்தும்.
(3) சமநிலை விலையை ஏற்படுத்தும். (4) நிரம்பலில் ஓர் அதிகரிப்பை ஏற்படுத்தும்.
(5) கேள்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். (.....)

18. உற்பத்திச் செயன்முறையில் ஒரு குறுங்காலம் என்பது,

(1) நிறுவனம் மேலதிகமாக வேலையாட்களை பணிக்கமர்த்த முடியாத காலப்பகுதியாகும்.
(2) உற்பத்தி செய்யப்படும் வெளியீட்டின் அளவு நிலையாகவுள்ள காலப்பகுதியாகும்.
(3) பெரும்பாலான உள்ளீடுகளுக்கு பற்றாக்குறை நிலவும் காலப்பகுதியாகும்.
(4) எல்லா உள்ளீடுகளும் நிலையாக இருந்தாலும் வெளியீட்டை மாற்றியமைக்கக்கூடிய காலப்பகுதியாகும்.
(5) சில உள்ளீடுகளின் அளவுகள் நிலையாகவுள்ளபோது ஏனைய உள்ளீடுகளின் அளவுகளை மாற்றியமைக்கக் கூடிய காலப்பகுதியாகும். (.....)

19. மொத்தச் செலவு (TC) மற்றும் மொத்த மாறும் செலவு (TVC) வளையிகளுக்கு இடையிலான நிலைக்குத்து இடைவெளியானது

(1) வெளியீடு வீழ்ச்சியடையும்போது குறைவடையும்.
(2) வெளியீடு வீழ்ச்சியடையும்போது அதிகரிக்கும்.
(3) எல்லைச் செலவுக்குச் (MC) சமனாகும்.
(4) மொத்த நிலையான செலவுக்குச் (TFC) சமனாகும்.
(5) சராசரி நிலையான செலவுக்குச் (AFC) சமனாகும். (.....)

20. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு செலவு மற்றும் கேள்வி வளையிகளை எதிர்நோக்கும் போட்டி உற்பத்தி நிறுவனமொன்று தனது வெளியீட்டை Q_1 இலிருந்து Q_2 ஆக அதிகரிக்குமாயின்,



(1) சாதாரண இலாபத்தை உழைக்கும்.
(2) இலாபத்தில் ஓர் அதிகரிப்பினை அனுபவிக்கும்.
(3) இலாபத்தில் ஒரு வீழ்ச்சியினை அனுபவிக்கும்.
(4) வருவாய்கள் அதிகரித்தாலும் செலவுகள் அதிகரிக்காது.
(5) செலவுகள் அதிகரித்தாலும் வருவாய்கள் அதிகரிக்காது.

(.....)

21. பின்வருவனவற்றில் தனியுரிமை போட்டிச் சந்தைகளின் **பண்பல்லாதது** எது ?

(1) ஒப்பீட்டளவில் இலகுவாக சந்தையில் உட்பிரவேசிக்கும் தன்மை
(2) வேறாக்கம் செய்யப்பட்ட பொருட்கள் காணப்படல்
(3) பொருளுக்கு குறிப்பிடத்தக்க அளவு விளம்பரம் காணப்படல்
(4) கொள்வனவாளரும் விற்பனையாளரும் அதிக எண்ணிக்கையில் காணப்படல்
(5) நிறுவனங்கள் பூரண நெகிழ்வுள்ள கேள்வி வளையிகளை எதிர்கொள்ளல் (.....)

22. பின்வருவனவற்றுள் பொருளாதாரமொன்றின் வருமானச் சுற்றோட்ட வரைபடத்தில் அரசாங்கத்திடமிருந்து நேரடியாக இடம்பெறும் பாய்ச்சலாக அமைவது எது ?

(1) வரிகள் (T) (2) ஏற்றுமதிகள் (X)
(3) சேமிப்புகள் (S) (4) மாற்றல் செலுத்தல்கள் (Tr.)
(5) முதலீட்டுச் செலவுகள் (I) (.....)

23. வர்த்தகச் சகடோட்டமொன்று வீழ்ச்சியடையும் கட்டத்தில்
(1) முதலீடு அதிகரிப்பதுடன் வெளியீடு வீழ்ச்சியடையும்.
(2) வேலையின்மை அதிகரிப்பதுடன் வெளியீடு வீழ்ச்சியடையும்.
(3) வேலையின்மை வீழ்ச்சியடைவதுடன் விலைமட்டம் அதிகரிக்கும்.
(4) வேலையின்மை வீழ்ச்சியடைவதுடன் வெளியீடு அதிகரிக்கும்.
(5) வேலையின்மை அதிகரிப்பதுடன் வெளியீடும் அதிகரிக்கும். (.....)

24. தற்போது இலங்கையின் மொத்த உள்நாட்டு மூலதனவாக்கத்தின் மிகப் பெரிய கூறாகவுள்ளது
(1) இயந்திர சாதனங்களும் உபகரணங்களுமாகும்.
(2) நிதிச் சொத்துக்களாகும்.
(3) பெருந்தோட்ட அபிவிருத்தி மற்றும் காணி அபிவிருத்தியாகும்.
(4) கையிருப்பு மாற்றங்களாகும்.
(5) கட்டடவாக்கமாகும். (.....)

25. செலவீட்டு வழியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிட
(1) கூலிகள், இலாபங்கள், அரசாங்க கொள்வனவுகள் மற்றும் தேறிய ஏற்றுமதிகள் என்பவற்றைக் கூட்ட வேண்டும்.
(2) கூலிகள், வாடகைகள், வட்டி மற்றும் இலாபங்களைக் கூட்ட வேண்டும்.
(3) நுகர்வு, முதலீடு, அரசாங்கக் கொள்வனவுகள் மற்றும் ஏற்றுமதிகளைக் கூட்ட வேண்டும்.
(4) நுகர்வு, முதலீடு, அரசாங்கக் கொள்வனவுகள் மற்றும் தேறிய ஏற்றுமதிகளைக் கூட்ட வேண்டும்.
(5) நுகர்வு, அரசாங்கக் கொள்வனவுகள், வரிகள் மற்றும் வட்டி வருவாய்களைக் கூட்ட வேண்டும். (.....)

26. தற்போது இலங்கையின் நடைமுறைச் சந்தை விலைகளில் கணிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி அண்ணளவாக
(1) 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். (2) 75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.
(3) 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். (4) 125 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.
(5) 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். (.....)

27. சமநிலை தேசிய வருமான மட்டத்தில் இயங்கும் பொருளாதாரமொன்றின் பின்வரும் பேரினப் பொருளியல் தரவுகளைக் கருத்திற் கொள்க.

வகை	ரூபா மில்லியன்	வகை	ரூபா மில்லியன்
நுகர்வுச் செலவு	5 000	இறக்குமதிகள்	1 200
வரி வருவாய்	1 000	ஏற்றுமதிகள்	980
அரசாங்கக் கொள்வனவு	1 500	சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி	8 000

இப்பொருளாதாரத்தில் முதலீட்டு மட்டத்தின் அளவு
(1) ரூபா 310 மில்லியன் ஆகும். (2) ரூபா 320 மில்லியன் ஆகும்.
(3) ரூபா 1 220 மில்லியன் ஆகும். (4) ரூபா 1 720 மில்லியன் ஆகும்.
(5) ரூபா 1 940 மில்லியன் ஆகும். (.....)

28.



மேலுள்ள வரைபடம் நேர்கோட்டு நுகர்வு வளையியொன்றைக் காட்டுகிறது.
தன்னிச்சையான நுகர்வு ரூபா 4 000 ஆயின், வளையியின் மீதுள்ள *B* புள்ளியில் மொத்த நுகர்வுச் செலவு யாது ?
(1) ரூபா 18 000 ஆகும். (2) ரூபா 17 000 ஆகும். (3) ரூபா 16 000 ஆகும்.
(4) ரூபா 14 000 ஆகும். (5) ரூபா 10 000 ஆகும். (.....)

29. மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும்போது இடம்பெறுமென பொருளியலாளர்கள் கருதுவது
(1) ஏற்றுமதிகள் அதிகரிக்கும் என்பதாகும்.
(2) இறக்குமதிகள் வீழ்ச்சியடையும் என்பதாகும்.
(3) தேறிய ஏற்றுமதிகள் நிலையாக இருக்கும் என்பதாகும்.
(4) தேறிய ஏற்றுமதிகள் அதிகரிக்கும் என்பதாகும்.
(5) தேறிய ஏற்றுமதிகள் வீழ்ச்சியடையும் என்பதாகும். (.....)

30. எதிர்பாராதவகையிலான உயர்மட்டப் பணவீக்க விலை அதிகரிப்பு ஏற்படும்போது அதன் மூலம் பெரும்பாலும் நன்மையடையும் குழு பின்வருவனவற்றுள் எது ?
(1) ஓய்வூதியம் பெறும் தொழிலாளர்கள்
(2) கடன் வழங்குநர்கள்
(3) சம்பளம் உழைப்போர்
(4) தாம் வேலைசெய்த காலத்தில் பணத்தைச் சேமித்து வைத்துள்ள தற்போது வயது முதிர்ந்த நபர்கள்
(5) கடன்பெற்றோர் (.....)

31. பொருளாதாரமொன்று நிறைதொழில் மட்டத்தில் உள்ளபோது பின்வருவனவற்றுள் எது கேள்வித் தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்தக்கூடும் ?
(1) பாதீட்டுக் குறைநிலையில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(2) தேறிய ஏற்றுமதிகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(3) தொழிற்சங்கங்களின் பலத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(4) மெய் வட்டி வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(5) பணநிரம்பலில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி (.....)

32. ஒரு வருட காலப்பகுதியில் நாடொன்றின் பணவீக்க வீதம் 12% ஆகும். அதே காலப்பகுதியில் பெயரளவு மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி 14% ஆகும். இக்குறிப்பிட்ட ஒரு வருட காலப்பகுதியில் நிகழ்ந்ததை பின்வருவனவற்றுள் எக்கூற்றுச் சரியாக விவரிக்கிறது ?
(1) பணநிரம்பல் 2% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது.
(2) பணநிரம்பல் 2% இனால் அதிகரித்துள்ளது.
(3) மெய் மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரித்துள்ளது.
(4) மெய் மொத்தத் தேசிய உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.
(5) பணத்தின் புழக்கச் சுற்றோட்ட வேகம் அதிகரித்துள்ளது. (.....)

33. 'அண்மிய பணம்' என்னும் எண்ணக்கருவினால் கருதப்படுவது,
(1) மூலதனப் பெறுமதிகள் அதிகளவில் தளம்பலுக்கு உட்படுவதனால் பணமாகக் கருதப்படமுடியாத நிதிச் சொத்துக்களாகும்.
(2) பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்படும் அதேவேளை பெறுமானத் திரட்டாகத் தொழிற்பட முடியாத திரவச் சொத்துக்களாகும்.
(3) பெறுமானத்திரட்டாகத் தொழிற்படும் அதேவேளை பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்பட முடியாத திரவச் சொத்துக்களாகும்.
(4) கேள்வி வைப்புகள் மீது வரையப்படும் காசோலைகளாகும்.
(5) கடன் அட்டைகளாகும். (.....)

34. தற்போது இலங்கையின் M_4 பணத்திரட்டின் மிகப் பெரிய கூறாக அமைவது
(1) பொதுமக்கள் வசமுள்ள நாணயம்
(2) பொதுமக்கள் பெயரிலுள்ள கேள்வி வைப்புகள்
(3) உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளில் பொதுமக்கள் வைத்துள்ள போலிப் பணம்
(4) வணிக வங்கிகளில் பொதுமக்கள் வைத்துள்ள போலிப் பணம்
(5) உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளில் பொதுமக்கள் வைத்துள்ள போலிப் பணம் (.....)

35. வணிக வங்கி முறைமையொன்றிலுள்ள வங்கிகள் தமது வைப்புகளில் 20% இனை காசொதுக்காகப் பேணுவதாகவும் இதில் ஒரு வங்கி ரூபா 200 மில்லியன் புதிய காசு வைப்பினை பெற்றுக்கொள்வதாகவும் கருதுக. புழக்கத்திலுள்ள பணத்தினளவில் மாற்றங்கள் ஏதும் ஏற்படாவிடின், புதிய வைப்பின் மூலம் வங்கி முறை உருவாக்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவு யாது ?
(1) ரூபா 160 மில்லியன் ஆகும். (2) ரூபா 200 மில்லியன் ஆகும். (3) ரூபா 800 மில்லியன் ஆகும்.
(4) ரூபா 1000 மில்லியன் ஆகும். (5) ரூபா 1200 மில்லியன் ஆகும். (.....)

36. மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் அரச பிணையங்களின் ஒரு திறந்த சந்தை விற்பனையின் விளைவாக பின்வருவனவற்றுள் எது ஏற்படலாமென எதிர்பார்க்கலாம் ?
(1) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகரிப்பு
(2) கடன்கள் மீது அறவிடப்படும் வட்டி வீதங்கள் அதிகரிப்பு
(3) வங்கிகளால் வழங்கப்படும் கடன்களின் அளவு அதிகரிப்பு
(4) தனியார் முதலீட்டுச் செலவினங்கள் அதிகரிப்பு
(5) பணநிரம்பல் அதிகரிப்பு (.....)

37. பின்வருவனவற்றுள் சந்தைத் தோல்வியைச் **சுட்டிக்காட்டாதது** எது ?
(1) தனியுரிமைகள் நிலவுதல்
(2) வளி மற்றும் நீர் அதிகளவில் மாசடைதல்
(3) தேசிய பாதுகாப்பு போன்ற அத்தியாவசிய சேவைகள் போதியளவில் நிரம்பல் செய்யப்படாமை
(4) பொதுப் பொருள்கள் போதியளவு காணப்படல்
(5) சமமற்ற வருமானப் பரம்பல் (.....)

38. நிறுவனமொன்று தனது உற்பத்தியின் போதேற்படும் வெளிவாரிச் செலவுகளைக் கருத்திற் கொள்ளாதாயின் போட்டிச் சந்தை சமநிலை வெளியீட்டின்போது பின்வருவனவற்றில் எது உண்மையாகும் ?

(1) விலையானது எல்லைச் சமூகச் செலவினை விட உயர்வாகும்.
(2) விலையானது எல்லைச் சமூகச் செலவை விடக் குறைவாக இருக்கும்.
(3) விலையானது எல்லைச் சமூகச் செலவுக்குச் சமனாகும்.
(4) எல்லை தனியார் செலவு, எல்லைச் சமூகச் செலவுக்கு சமனாகும்.
(5) எல்லை தனியார் செலவு, எல்லை சமூகச் செலவை விட உயர்வாகும். (.....)

39. ஒரு தூய பொதுப் பொருளானது

(1) சந்தைகளால் வினைத்திறனான வகையில் வழங்கப்படும்.
(2) நுகர்வில் போட்டித் தன்மை வாய்ந்ததாகவும் நுகர்விலிருந்து விலக்கப்படக்கூடியதாகவும் இருக்கும்.
(3) நுகர்வில் போட்டித் தன்மை அற்றதாகவும் நுகர்விலிருந்து விலக்கப்படக்கூடியதாகவும் இருக்கும்.
(4) நுகர்வில் போட்டித் தன்மை வாய்ந்ததாகவும் நுகர்விலிருந்து விலக்கப்படமுடியாததாகவும் இருக்கும்.
(5) நுகர்வில் போட்டித் தன்மை அற்றதாகவும் நுகர்விலிருந்து விலக்கப்படமுடியாததாகவும் இருக்கும். (.....)

40. இறைக் கொள்கையானது அரசாங்கம் பின்வருவனவற்றுள் எதனை நிர்ணயிப்பதுடன் தொடர்புடையது ?

(1) சந்தை வட்டி வீதங்கள் (2) பணநிரம்பல் வளர்ச்சி வீதம்
(3) வரிவிதிப்பும் அரசாங்க செலவீட்டு மட்டங்களும் (4) பணநிரம்பல்
(5) பணவீக்க வீதம் (.....)

41. தற்போது இலங்கை அரசாங்கத்தின் தனியொரு பெரிய வரி வருவாய் மூலாதாரமாக அமைவது

(1) பெறுமதி சேர் வரி (2) கம்பனி வருமான வரிகள்
(3) உற்பத்தி மீதான வரிகள் (4) இறக்குமதி வரி
(5) உழைக்கும்போது செலுத்தும் வரி (PAYE) (.....)

42. பின்வருவனவற்றுள் நாடுகளுக்கிடையிலான ஒப்பீட்டு நன்மையின் பிரதான காரணம் **அல்லாதது** எது ?

(1) தலைக்குரிய வருமானம் (2) காலநிலை
(3) ஊழியப் படையின் திறன்கள் (4) ஊழியர் ஒருவருக்கான மூலதனத்தின் அளவு
(5) புவியியல் இடஅமைவு (.....)

43. A மற்றும் B ஆகிய நாடுகளில் ஓர் அலகு வளச் சேர்க்கையினைக் கொண்டு உற்பத்திசெய்யப்படக்கூடிய ஈருருளிகள் மற்றும் உழவு இயந்திரங்களின் அளவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

பொருள்	நாடு A	நாடு B
உழவு இயந்திரம்	20	2
ஈருருளி	60	10

ஒவ்வொரு நாடும் தான் **ஒப்பீட்டு** நன்மையைக் கொண்டுள்ள பொருளில் சிறக்குமியல்பு அடைவதாகக் கொள்க. இங்கு பரஸ்பரம் நன்மையளிக்கும் வர்த்தகம் இடம்பெற வேண்டுமாயின் உழவு இயந்திரங்கள் மற்றும் ஈருருளிகள் இடையிலான பரிமாற்ற விகிதம்

(1) ஓர் உழவு இயந்திரத்திற்கு 3 ஈருருளிகளை விடக் குறைவாக இருக்க வேண்டும்.
(2) ஓர் உழவு இயந்திரத்திற்கு 3 இற்கும் 5 இற்கும் இடைப்பட்ட ஈருருளிகளாக இருக்க வேண்டும்.
(3) ஓர் உழவு இயந்திரத்திற்கு 2 இற்கும் 60 இற்கும் இடைப்பட்ட ஈருருளிகளாக இருக்க வேண்டும்.
(4) ஓர் உழவு இயந்திரத்திற்கு 6 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட ஈருருளிகளாக இருக்க வேண்டும்.
(5) ஓர் உழவு இயந்திரத்திற்கு 10 இற்கு மேற்பட்ட ஈருருளிகளாக இருக்க வேண்டும். (.....)

44. நாடொன்றின் வர்த்தகமாற்று விகிதத்தில் வீழ்ச்சி நிலைமையை ஏற்படுத்தவல்ல ஒரேயொரு விலைமாற்றச் சேர்க்கை பின்வருவனவற்றுள் எது ?

	ஏற்றுமதிகளின் சராசரி விலை	இறக்குமதிகளின் சராசரி விலை
(1)	வீழ்ச்சி	அதிகரிப்பு
(2)	வீழ்ச்சி	வீழ்ச்சி
(3)	அதிகரிப்பு	வீழ்ச்சி
(4)	அதிகரிப்பு	அதிகரிப்பு
(5)	மாறாது	வீழ்ச்சி

(.....)

45. நெகிழும் நாணய மாற்றுவீத முறையின்கீழ் பின்வருவனவற்றுள் எது ஐக்கிய அமெரிக்க டொலரின் ரூபாய் விலையினை அதிகரிக்கச் செய்யும் ?

(1) ஐக்கிய அமெரிக்காவின் பணவீக்க வீதம் இலங்கையை விட உயர்வாக இருத்தல்
(2) ஐக்கிய அமெரிக்காவின் தேசிய வருமான அதிகரிப்பு இலங்கையை விட உயர்வாக இருத்தல்
(3) இலங்கை உடுபுடைவைகள் மீதான ஐக்கிய அமெரிக்க பிரசைகளின் விருப்பம் அதிகரித்தல்
(4) ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இலங்கைக்குள் வரும் இறக்குமதிகளில் ஏற்படும் ஒரு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி
(5) மெய் வட்டி வீத அதிகரிப்பானது அமெரிக்காவில் இலங்கையை விட உயர்வாக இருத்தல் (.....)

46. பொருளாதார வளர்ச்சி வீதம் பொதுவாக அளவிடப்படுவது,

(1) பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் வருடாந்த சதவீத மாற்றத்தினாலாகும்.
(2) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் வருடாந்த சதவீத மாற்றத்தினாலாகும்.
(3) தலைக்குரிய பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் வருடாந்த சதவீத மாற்றத்தினாலாகும்.
(4) தலைக்குரிய செலவிடத்தக்க தேசிய வருமானத்தில் ஏற்படும் வருடாந்த சதவீத மாற்றத்தினாலாகும்.
(5) தலைக்குரிய கொள்வனவு சக்தி சமமதிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் வருடாந்த சதவீத மாற்றத்தினாலாகும். (.....)

47. கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் வேலையற்றிருப்போராக வகைப்படுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 50 000 ஆகவும் தொழில்புரிவோராக வகைப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 450 000 ஆகவும் இருப்பின் அப்பொருளாதாரத்தின் வேலையின்மை வீதம்

(1) 11.1% ஆகும். (2) 10.0% ஆகும். (3) 9.2% ஆகும்.
(4) 8.0% ஆகும். (5) 7.4% ஆகும். (.....)

48. குறித்த நாடொன்றில் கடந்த 10 வருட காலப்பகுதியில் வருமானப் பங்கீட்டின் கிணி குணகமானது 0.45 இலிருந்து 0.65 ஆக உயர்ந்துள்ளது. பின்வருவனவற்றுள் இம்மாற்றத்திற்கான காரணமாக அமையவல்லது எது ?

(1) காரணிச் சந்தை மற்றும் பொருள் சந்தைகளில் சந்தைச் சக்தி அதிகரித்தமை
(2) ஊழியச் சந்தையின் பாகுபாடுகள் (discrimination) நீக்கப்பட்டமை
(3) செல்வம் மற்றும் சொத்துக்களின் பங்கீடு ஒப்புரவு வாய்ந்ததாக மாறியமை
(4) வயது வந்தவர்களில் மிகப் பெரும்பாலானோர் உயர்தரத்தில் சித்தி பெற்றிருத்தல்
(5) வரிமுறையானது மிகவும் விருத்திமுறைத் தன்மை வாய்ந்ததாக மாறியமை (.....)

49. பின்வருவனவற்றுள் எது நாடொன்றின் வருமானப் பங்கீட்டுச் சமமின்மையை பெரும்பாலும் குறைக்கக் கூடும் ?

(1) சனத்தொகை வளர்ச்சி வீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(2) குறைந்த திறன் கொண்ட ஊழியர்களுக்கான சேவைக்காலத் தொழிற்பயிற்சி
(3) பாதீட்டுக் குறைநிலையில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு
(4) தொழிலற்ற வேலையாட்களைப் பயிற்றுவிப்பதற்கான நிதிகளில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(5) ஓர் ஒடுங்குமுறை வரியை விதித்தல் (.....)

50. கடந்த சில தசாப்தங்களாக உலகளாவிய ரீதியில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளில் ஏற்பட்ட துரித அதிகரிப்புக்கு முதன்மைக் காரணியாக அமைவது

(1) நாடுகள் பலவற்றில் தீர்வையல்லாத் தடைகள் நீக்கப்பட்டமை
(2) நாடுகள் பலவற்றில் பாதுகாப்புவாதத்தின் மீது ஏற்பட்ட அதிகரித்த ஆர்வம்
(3) உலகில் துரிதமாக வீழ்ச்சியடைந்த போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் செலவுகள்
(4) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கூலிமட்டங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி
(5) பெரும்பாலான நாடுகளில் அரசியல் அதிகாரம் மத்திய திட்டமிடலிலிருந்து விலகிச் சென்றமை (.....)

* * *

2.1.3 வினாப்பத்திரம் I இற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

வினா இலக்கம்	விடை	வினா இலக்கம்	விடை
01.	1	26.	2
02.	2	27.	4
03.	2	28.	4
04.	4	29.	5
05.	2	30.	5
06.	5	31.	4
07.	2	32.	3
08.	5	33.	3
09.	5	34.	4
10.	1	35.	3
11.	3	36.	2
12.	5	37.	4
13.	4	38.	2
14.	1	39.	5
15.	1	40.	3
16.	3	41.	1
17.	2	42.	1
18.	5	43.	2
19.	4	44.	1
20.	3	45.	5
21.	5	46.	2
22.	4	47.	2
23.	2	48.	1
24.	5	49.	2
25.	4	50.	3

சரியான ஒரு விடைக்கு **02** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் ஆகும்.

2.1.4 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை பற்றிய அவதானிப்புகள்



மேலுள்ள வரைபின் படி, வினாப்பத்திரம் I ஐக் கவனிக்கும்போது குறைந்த இலகுத்தன்மையைக் கொண்ட வினா 29 ஆகும். அதன் இலகுத்தன்மை 9% ஆகும். அதாவது பரீட்சார்த்திகளில் குறைந்த சதவீத்தினர் 29ஆவது வினாவிற்குச் சரியாக விடையளித்துள்ளனர். அவ்வாறே கூடிய இலகுதன்மையைக் கொண்ட வினாவாக வினா 02 அமைவதுடன், அதன் இலகுதன்மை 94% ஆகும். அதாவது பரீட்சார்த்திகளில் கூடிய சதவீத்தினர் 02 ஆவது வினாவிற்குச் சரியாக விடையளித்துள்ளனர்.

முழு வினாப்பத்திரத்தையும் நோக்கும்போது வினாப்பத்திரம் I இற்கான முழு இலகுதன்மை 29% ஆகும்.

2.1.5 வினாப்பத்திரத்திரம் I இல் ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவுசெய்துள்ள விதம் - சதவீத அடிப்படையில்

வினா இலக்கம்	சரியான தெரிவு	ஒவ்வொரு விடையையும் தெரிவுசெய்துள்ள மாணவர்களின் சதவீதம்					
		1	2	3	4	5	Missing
1	1	80.50	8.00	4.70	2.40	**4.20**	0.20
2	2	1.50	**94.30**	1.30	0.30	2.60	-
3	2	2.90	**43.50**	5.40	44.60	3.40	0.20
4	4	3.60	4.60	3.70	**84.30**	3.60	0.20
5	2	5.00	64.50	9.50	11.30	**9.50**	0.20
6	5	4.10	4.70	4.20	4.00	**82.70**	0.30
7	2	4.90	83.6	4.00	5.80	**1.70**	-
8	5	5.80	1.3	13.80	**3.40**	75.60	0.10
9	5	9.20	14.90	5.20	4.50	**65.80**	0.40
10	1	52.50	**2.00**	1.60	1.60	42.30	-
11	3	4.70	12.3	57.30	**15.60**	9.10	1.00
12	5	21.30	**11.5**	10.30	8.00	48.70	0.20
13	4	**4.60**	7.70	7.10	70.20	9.70	0.70
14	1	**50.20**	5.80	26.80	6.00	11.00	0.20
15	1	62.90	5.70	**11.00**	7.20	2.80	0.40
16	3	10.60	19.00	**53.60**	11.30	4.60	0.90
17	2	8.60	**22.70**	2.40	3.20	2.90	0.20
18	5	4.20	**7.00**	3.90	13.70	70.90	0.20
19	4	4.20	5.40	18.00	64.50	**7.40**	0.50
20	3	17.20	18.20	23.00	6.40	**34.80**	0.40
21	5	10.10	7.00	6.10	**12.10**	64.50	0.20
22	4	27.80	3.40	6.50	**49.10**	13.00	0.20
23	2	6.50	70.10	6.80	12.60	**3.60**	0.40
24	5	**13.20**	8.10	11.50	22.50	44.20	0.50
25	4	2.00	**10.00**	5.70	75.90	5.90	0.50
26	2	3.90	33.60	**8.00**	44.00	9.60	0.90
27	4	1.70	9.60	14.60	**71.50**	1.90	0.70
28	4	18.30	5.50	**16.10**	54.10	5.50	0.50
29	5	14.40	8.70	9.70	57.90	**9.00**	0.20
30	5	4.70	24.60	**7.40**	8.70	54.40	0.20
31	4	13.40	13.00	6.30	**44.50**	22.20	0.70
32	3	**9.40**	24.10	38.70	10.40	16.70	0.70
33	3	**3.50**	23.10	59.30	8.10	5.70	0.40
34	4	16.60	**12.00**	22.50	26.20	21.90	0.80
35	3	30.00	**10.20**	42.20	14.00	2.30	0.70
36	2	6.30	46.30	**14.10**	12.70	20.30	0.30
37	4	9.20	16.80	5.60	63.60	**4.60**	0.20
38	2	17.60	40.00	**9.20**	12.80	19.60	0.80
39	5	1.90	5.10	**7.30**	14.30	71.10	0.40
40	3	13.90	5.00	61.30	**15.32**	4.20	0.40
41	1	74.10	4.30	7.80	**11.30**	2.50	-
42	1	46.50	**21.30**	5.10	22.10	4.70	0.40
43	2	10.50	**71.70**	3.10	10.50	3.60	0.60
44	1	72.00	**6.80**	12.30	3.90	4.50	0.50
45	5	**21.80**	21.60	19.80	20.50	16.00	0.30
46	2	7.10	**68.9**	6.10	6.70	10.80	0.40
47	2	**24.50**	58.50	9.80	4.40	2.50	0.30
48	1	41.90	**13.70**	22.30	7.00	14.50	0.60
49	2	**4.50**	59.90	59.40	8.40	17.50	0.30
50	3	50.00	**13.90**	22.10	2.00	11.80	0.20

- ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான தெரிவை மேற்கொண்ட மாணவர் சதவீதம் நிழற்றப்பட்டுள்ளது.
- வினாவிற்கு விடையைத் தெரிவு செய்யாத அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட தெரிவுகளை மேற்கொண்ட மாணவர்களின் சதவீதம் Missing எனக் காட்டப்பட்டுள்ளது.

2.1.6 வினாப்பத்திரம் I இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்

★ முழுமையாகக் கவனிக்கும் போது பல்தேர்வு வினாக்களைக் கொண்ட I ஆம் வினாப்பத்திரத்தில் இலக்கம் 01, 02, 04, 05, 06, 07, 08, 09, 13, 15, 17, 18, 19, 21, 23, 25, 27, 37, 39, 40, 41, 43, 44, 46 என்ற வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் குறைந்தபட்சம் 60% இற்கு அதிகமானோர் சரியான விடையளித்துள்ளனர்.

★ இலக்கம் 20, 26, 29, 32, 34, 45, 50 என்ற வினாக்களுக்கு மொத்தப் பரீட்சார்த்திகளில் 40% க் குறைந்தோரே சரியான விடையளித்துள்ளனர்.

★ 20 ஆவது வினாவுக்கு சரியான தெரிவைத் தெரிவு செய்தோர் 23% ஆகும். இவ்வினாவில் நிறைபோட்டிச் சந்தையொன்றில் நிறுவனமொன்றின் எல்லை வருமானம், எல்லைச் செலவு வளையிகளை இனங்கண்டு இலாபத்தை உச்சமடையும் வெளியீட்டு மட்டத்தை வழங்கப்பட்ட வரைபடத்தைப் பயன்படுத்தி தீர்மானிக்கும் முறை கேட்கப்பட்டதுடன் எனினும் அது தொடர்பான தேவையான அறிவும் அறிவைப்பயன்படுத்தி விளக்கமளித்து கூடிய ஆற்றலும் பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை என்பது இதன்மூலம் கண்டறியப்பட்டது. எனவே குறிப்பிட்ட தலைப்பு தொடர்பான தேவையான அளவு அறிவையும் வரைபடத்தையும் பயன்படுத்தி விளக்கக் கூடிய திறனையும் மாணவரிடத்தில் வளர்த்தல் வேண்டும்.

★ 29 ஆம் வினாவின மூலம் ஏற்றுமதி சுதந்திரமான தொகுதியொன்றாகவும் இறகுமதியானது மெய்மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சார்பாகும் என்பதை இனங்கண்டுள்ளனரா என்பதை வினவுவதாகும். எனினும் பரீட்சார்த்திகளில் 91% ஆனோருக்கு அது தொடர்பான கோட்பாட்டு அறிவு காணப்படவில்லை என்பது அவர்களால் வழங்கப்பட்ட விடைகள் மூலம் தெளிவாகின்றது. ஏற்றுமதி, தேறிய மொத்த உள்நாட்டு வெளியீட்டால் தீர்மானிக்கப்படுவது இல்லை என்பதும் இறக்குமதி தேறிய மொத்த உள்நாட்டு உறபத்தியின் நேர் சார்பு என்பதும் மாணவர்களுக்குத் தெளிவுபடல் வேண்டும்.

★ 34 ஆவது வினாவின் மூலம் இலங்கையின் M_4 நிதித்தொகுதி பற்றிய அவதானிப்பாகும். எனினும் அது தொடர்பான பிரயோக அறிவு விண்ணப்பதாரிகளுக்கு இல்லை என்பது தென்படுகின்றது. ஏனெனில் இவ்வினாவிற்கு பரீட்சார்த்திகளில் 26% ஆனோர் சரியான விடை அளித்துள்ளனர். இதனால் பண நிரம்பல் M_1, M_2, M_{2b}, M_4 என்ற தொகுதியில் உள்ளடக்கத்தின் விகிதாசார ரீதியான முக்கியத்துவம் தொடர்பான விளக்கத்தை விருத்தி செய்தல் வேண்டும்.

★ 45 வினாவினால் காட்டப்படுவது நெகிழ்வுள்ள நாணயமாற்று வீதம் தீர்மானிக்கப்படும் முறையும் அது மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவை பரசீலனை செய்வதும் நாணயமாற்று வீதம் மாற்றமடையும் முறைபற்றிய பகுப்பாய்வு செய்யும் ஆற்றலைப் பரீட்சிப்பதுமாகும். இவ்வினாவிற்கு சரியான விடையை விண்ணப்பதாரிகளுல் 16% இற்கும் குறைவானவர்கள் அளித்துள்ளனர். எனவே நெகிழ்வுலுள்ள நாணயமாற்று வீதத்தைத் நிர்ணயிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணி. ஒவ்வொரு காரணியும் மாற்றமடையும் போது நாணயமாற்று வீதம் மாற்றமடையும் முறையையும் விளக்கக்கூடிய அறிவையும் திறனையும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

★ 50 ஆம் வினாவினால் சர்வதேச வியாபாரத்தின் இன்றைய போக்கும் அப்போக்கில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றி வினவுவதாகும். அதற்கு விடையளிப்பதில் 78% வரையானோர் தோல்வியடைந்துள்ளமையினால் காட்டப்படுவது குறிப்பிட்ட தலைப்பு பற்றி அறிவு இற்றைப்படுத்தபப்படவில்லை என்பதாகும். இதனால் இதுபற்றி இற்றைநிலைப்படுத்தப்பட்ட கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

2.2. வினாப்பத்திரம் II உம் விடையளிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களும்

2.2.1 வினாப்பத்திரம் II இன் கட்டமைப்பு

நேரம் 03 மணித்தியாலங்கள்.

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

உப பிரிவு 'அ' - கட்டமைப்பு வினாக்கள் 05.

உப பிரிவு 'ஆ' - கட்டமைப்பு வினாக்கள் 05.

குறைந்தது ஒரு பகுதியிலிருந்து 02 வினாக்களையேனும் தெரிவு செய்து 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள்.

இறுதிப் புள்ளிக் கணிப்பிடல்

வினாப்பத்திரம் I இற்கான புள்ளிகள் = 100

வினாப்பத்திரம் II இற்கான புள்ளிகள் = 100

இறுதிப்புள்ளிகள் $200 \div 2 = 100$

2.2.2. வினாப்பத்திரம் II இற்கு எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புக்கள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்

★ வினாப்பத்திரம் II இற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகள் 2, 3, 4.1, 4.2 ஆகிய வரைபுகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன.

பகுதி 'அ'

இப்பகுதியிலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.

வினா இலக்கம் 1

1. (i) உதாரணங்களைப் பயன்படுத்தி ஓர் இலவசப் பொருளுக்கும் ஒரு பொருளாதாரப் பொருளுக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) அமையச் செலவு எண்ணக்கருவை விளக்கி, அருமைப் பிரச்சினையுடன் அமையச் செலவு எவ்வாறு தொடர்புபடுகின்றதென்பதை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) நிகழ்கால நுகர்வை குறைத்துக்கொள்ளத் தயாராயுள்ள நாடுகளின் பொருளாதாரங்கள், துரித வளர்ச்சியை எவ்வாறு அடைய முடியுமென்பதை உற்பத்தி இயல்தகவு வளையிகளைப் பயன்படுத்தி விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) ஓர் உற்பத்தி இயல்தகவு எல்லையின் மீதுள்ள சகல புள்ளிகளும் பொருளாதார வினைத்திறன் தொடர்பில் சமனானவையாய? உமது விடையினை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) சந்தைப் பொருளாதாரங்கள் கட்டாயம் முதலாளித்துவப் பொருளாதாரங்களாகவும், கட்டளைப் பொருளாதாரங்கள் கட்டாயம் சோஷலிசப் பொருளாதாரங்களாகவும் இருக்குமா? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

1. (i) **பொருளாதாரமல்லா பொருள் :**

- பூச்சிய விலையில் எல்லையற்ற நிரம்பலைக் கொண்டுள்ள பொருள் பொருளாதாரமல்லாப் பொருளாகும் (01 புள்ளி)

(மாற்றீடான விடை)

- உற்பத்தியின் போது பொருளாதார வளங்களைப் பயன்படுத்தாத அதாவது அமையச் செலவற்ற வகையில் எல்லையற்ற நிரம்பலைக் கொண்டுள்ள பொருள் பொருளாதாரமல்லாப் பொருளாகும் உதாரணம் :- சூரிய ஒளி, காற்று (01 புள்ளி)
- பொருளாதாரப் பொருள்
- நிரம்பலில் அருமைத்தன்மையைக் கொண்டுள்ள பொருள் பொருளாதாரப் பொருளாகும் (01 புள்ளி)

(மாற்றீடான விடை)

- உற்பத்தியின் போது பொருளாதார வளங்களைப் பயன்படுத்தும் பொருள் பொருளாதாரப் பொருளாகும் எனவே அவற்றுக்கு அமையச் செலவு உண்டு.
- உதாரணம் :- உணவு, உடை, மோட்டார், வாகனங்கள் வீட்டு உபகரணங்கள் (01 புள்ளி)

(ii) - உற்பத்தி மற்றும் நுகர்வுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகும், இவ்வாறு விட்டுக் கொடுக்கப்படும் மிகச் சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதியே அமையச் செலவாகும். (01 புள்ளி)

- அமையச் செலவு தனிநபர்களுடன் தொடர்புபட்டதாகும். இதனால் தான் விட்டுக் கொடுக்கும் மிகச் சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதியினை அத் தெரிவினை மேற்கொள்ளும் நபர் மாத்திரமே மதிப்பிடமுடியும். (01 புள்ளி)

- அமையச் செலவானது அருமைப் பிரச்சினையுடன் தொடர்புபட்டதாகும் வளங்கள் அருமைத்தன்மை வாய்ந்தனவாயும் மாற்றுப் பயன்பாடு உடையனவாகவும் இருப்பதனாலேயே அமையச் செலவு ஏற்படுகிறது. அருமைத்தன்மை என்பது அளவற்ற மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்ய சமூகத்திடமுள்ள வளத்திரட்சி போதியதாக இல்லாமையைக் குறிக்கும். எல்லா மனித விருப்பங்களையும் வரையக்கப்பட்ட வளங்களைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியாத நிலையில் மாற்றுத் தெரிவுகள் மத்தியில் இருந்து தெரிவு செய்ய வேண்டியுள்ளது. (01 புள்ளி)

- இவ்வாறு தெரிவினை மேற்கொள்ளும் போது கட்டாயம் விட்டுக் கொடுப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். அருமைப் பிரச்சினை காணப்படும் நிலையில் உற்பத்தி மற்றும் நுகர்வுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது ஏனைய வாய்ப்புகளை இழக்க நேரிடும். தெரிவை மேற்கொள்ளும் போது விட்டுக் கொடுக்கப்படும் மிகச் சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதியே அமையச் செலவாகும். அருமைத்தன்மை இல்லையெனின் அமையச்செலவும் இல்லை. (01 புள்ளி)

(iii) - பொருளாதாரமொன்று நிகழ்கால மூலதனவாக்கத்தின் பொருட்டு விட்டுக் கொடுக்கும் நிகழ்கால நுகர்வின் அளவிலேயே பெரும்பாலும் அப் பொருளாதாரத்தின் எதிர்கால வளர்ச்சியின் வேகம் தீர்மானிக்கப்படும்

- நிகழ்காலத்தில் பொருளாதாரத்தின் வளங்களின் பெரும்பகுதி சார்பளவில் மூலதனப்பொருள்களின் உற்பத்தியில் பயன்படுத்தப் படுமாயின், பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு விரிவாக்கமடைந்து எதிர்கால சாத்திய வெளியீடு கணிசமானளவு கூடிய வளர்ச்சிவீதத்தை அடைய முடியும். அப் பொருளாதாரத்தின் எதிர்கால உற்பத்தி இயல்தகவு வளையியானது நிகழ்கால உற்பத்தி இயல்தகவு வளையியிலிருந்து வலப்புறமாக மிகப் பெரியளவு தூரத்திற்கு இடம் பெயரும்

- மறுபுறம் நிகழ்காலத்தில் நுகர்வுக்காக வளங்களை அதிகளவு பயன்படுத்துவார்களாயின் அப்பொருளாதாரத்தின் எதிர்கால உற்பத்தி இயல்தகவு வளர்ச்சிவீதம் மிகவும் வரையறுக்கப்பட்டதாக இருக்கும். எதிர்கால உற்பத்தி இயல்தகவு வளையியானது வலப்புறமாக இடம் பெயர்ந்தாலும் மிகச் சிறிய தூரத்திற்கே இடம்பெயரும்.



(அ) நிகழ்காலத்தில்நுகர்வுக்ககாக சார்பளவில் குறைந்தளவு வளங்களை ஒதுக்கீடு செய்யும் பொருளாதாரம்.



(ஆ) நிகழ்காலத்தில்நுகர்வுக்ககாக சார்பளவில் அதிகளவு வளங்களை ஒதுக்கீடு செய்யும் பொருளாதாரம்.

மாற்றீடான வரைபடம்



(சரியான விளக்கத்திற்கு 02 புள்ளிகள் சரியான வரைபடத்திற்கு / வரைபடங்களுக்கு 02 புள்ளிகள்)

(iv) - பொருளாதார வினைத்திறன் என்பதனாற் கருதப்படுவது யாதெனில் பொருளாதாரத்தின் வசமுள்ள வளங்கள் அச்சமூகத்தின் மிக விருப்புக்குரிய பொருள்கள் சேவைகளை உற்பத்தி செய்வதில் வினைத்திறனுடன் பயன்படுத்தப்படும் நிலையினையாகும்.

- பொருளாதார வினைத்திறன் ஏற்பட வேண்டுமாயின் இருவகையான வினைத்திறன்களை ஏக காலத்தில் எய்த வேண்டும் - உற்பத்தி வினைத்திறன், ஒதுக்கீட்டு வினைத்திறன் என்பனவே அவையாகும்

- உற்பத்தி இயல்தகவு வளையின் மீதுள்ள சகல புள்ளிகளும் உற்பத்தி வினைத்திறனைக் (தொழினுட்ப ரீதியில்) கொண்டிருக்கின்ற போதிலும் (அதாவது ஒரு பொருளின் மேலதிக அலகினை உற்பத்தி செய்வது மற்றைய பொருளின் உற்பத்தியைக் குறைக்காமல் சாத்தியமாகாது) பொருளாதார வினைத்திறனுக்கு உற்பத்தி வினைத்திறன் மட்டுமன்றி ஒதுக்கீட்டு வினைத்திறனும் அவசியம். வள ஒதுக்கீட்டு வினைத்திறனை உற்பத்தி இயல்தகவு வளையியின் மீதுள்ள புள்ளிகள் மத்தியில் ஒரு குறிப்பிட்ட சிறப்புப் புள்ளி மாத்திரமே கொண்டிருக்கும். அப்புள்ளி சமூகத்தின் விருப்பத்தெரிவினை சிறப்பாக வெளிப்படுத்தும்.

- ஒதுக்கீட்டு வினைத்திறன் வாய்ந்த அக் குறிப்பிட்ட சிறப்புப் புள்ளி எது என்பதைத் தீர்மானிப்பதில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சேவைகள் பற்றி சமூகம் கொண்டுள்ள விருப்பத்தேர்வுகள் மற்றும் அப்பொருள்கள் சேவைகள் பற்றிய மதிப்பீடுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. வள ஒதுக்கீட்டு வினைத்திறனை பிரதிபலிக்கும் பொருள் சேர்க்கையைத் தெரிவு செய்யும் போது குறிப்பிட்ட பொருள் சேர்க்கையின் எல்லை நன்மைகளை (Marginal benefit) அவற்றின் எல்லைச் செலவுகளோடு (marginal cost) ஒப்பிட்டு அவை ஒன்றுக்கொன்று சமப்படும் பொருள் சேர்க்கையின் அடிப்படையிலேயே தெரிவு செய்ய வேண்டும். எனவே பொருளாதார வினைத்திறனை தீர்மானிப்பதற்காக உற்பத்தி இயல்தகவு வளையியில் காட்டப்படும் எல்லைச் செலவு தொடர்பான தகவல்களுக்கு மேலதிகமாக சமூகத்தின் விருப்பத் தேர்வுகளின் அடிப்படையிலான எல்லை நன்மைகள் பற்றிய தகவல்களையும் இணைத்து நோக்குவது அவசியமாகும். (04 புள்ளிகள்)

(v) - சந்தைப் பொருளாதாரமொன்று கட்டாயமாக முதலாளித்துவ பொருளாதாரமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அதேபோல கட்டளைப் பொருளாதாரமொன்று கட்டாயமாக சோசலிசப் பொருளாதாரமாக இருக்க வேண்டியதில்லை. பொருளாதார முறைமைகளை முதலாளித்துவமென்றும் சமவுடைமை (சோசலிச) பொருளாதாரமென்றும் வேறுபடுத்தும் போது உற்பத்தி வளங்களின் உரிமை எவரிடம் உள்ளது என்பதன் அடிப்படையிலேயே வேறுபடுத்தப்படுகிறது. எல்லா உற்பத்தி வளங்களும் தனியார் உரிமையாகக் காணப்படுமாயின் முதலாளித்துவ பொருளாதாரமென்றும் எல்லா உற்பத்தி வளங்களும் அரசுடைமையாகக் காணப்படுமாயின் சோசலிசப் பொருளாதார முறைமையென்றும் வகைப்படுத்தப்படும்.

- மறுபுறம் சந்தைப் பொருளாதார முறைமையென்றும் கட்டளைப் பொருளாதார முறைமையென்றும் வகைப்படுத்தப்படும்போது அது வள ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் பொறிமுறையின் அடிப்படையிலேயே வகைப்படுத்தப்படுகிறது.

- வள ஒதுக்கீட்டின் பொருட்டு பிரதானமாக விலைப் பொறிமுறையினைப் பயன்படுத்தும் பொருளாதார முறைமைகள் சந்தைப் பொருளாதார முறைமை எனவும் வள ஒதுக்கீட்டை மேற்கொள்ள மத்திய திட்டமிடல் முறையினைப் (கட்டளைகளை) பயன்படுத்தும் பொருளாதார முறைமைகள் கட்டளைப் பொருனாதார முறைமைகளென்றும் வகைப்படுத்தப்படும். இதனடிப்படையில் சந்தை முதலாளித்துவம் மற்றும் கட்டளைச் சோசலிசம் ஆகிய இருதுருவங்களான பொருளாதாரமுறைமைகளை அடையாளப்படுத்தலாம்.

- முதலாளித்துவ பொருளாதார முறைமைகளில் பல விலைப்பொறிமுறையினை அடிப்படையாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரங்களாகவும். சோசலிசப் பொருளாதார முறைமைகளில் பல மத்திய திட்டமிடல் பொறிமுறையினை அடிப்படையாகக் கொண்டதாயும் இயங்குவதைக் காணக்கூடியதாக இருப்பினும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு இருக்க வேண்டியதில்லை என்பதையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். வளங்களின் உரிமை மற்றும் வள ஒதுக்கீட்டுப் பொறிமுறை ஆகிய இரு நிர்ணயிப்பான்களின் பல்வேறு சேர்க்கைகளைக் கொண்ட கலப்புப் பொருளாதார

முறைமைகளை நடைமுறையுலகில் நாம் பொதுவாகக் காணமுடியும். இதன்படி சோசலிச சந்தைப் பொருளாதாரங்களையும் முதலாளித்துவ கட்டளைப் பொருளாதாரங்களையும் காணமுடியும். தூய முதலாளித்துவப் பொருளாதார முறைமையையோ தூய கட்டளைப் பொருளாதார முறைமையினையோ உலகின் எந்த ஒரு நாட்டிலும் காணமுடியாது. (04 புள்ளிகள்)

1 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



01 ஆம் வினாவிற்கு ஏறக்குறைய விண்ணப்பதாரிகளில் 97% ஆனோர் விடையளித்துள்ளனர். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில்,

புள்ளி 0 - 5 ஆயிடையில் 18% மட்டும்

புள்ளி 6 - 10 ஆயிடையில் 41% மட்டும்

புள்ளி 11 - 15 ஆயிடையில் 29% மட்டும்

புள்ளி 16 - 20 ஆயிடையில் 12% மட்டும்

புள்ளிகள் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 05 பகுதிகள் உண்டு. இலகுதன்மை குறைந்த பகுதி (v) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 25% ஆகும். அதேபோல் பகுதி (i) இலகுவான பகுதியாகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 86% ஆகும்.

★ I ஆம் பகுதியின் இலகுதன்மை 86% ஆகும். பொருளாதாரப் பொருள், இலவசப் பொருள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை ஒப்பிடுவதற்கு இவ்வினாவின் மூலம் எதிர்பார்க்கப்பட்டதுடன் பெருமபாலான மாணவர்கள் சரியான விடை அளித்துள்ளதால் குறிப்பிட்ட எண்ணக்கரு தொடர்பாக மாணவர்களுக்கு போதியளவு அறிவு காணப்பட்டது என்பது தெளிவாகியது.

★ II ஆம் பகுதியின் இலகுதன்மை 69% ஆகும். அமயச்செலவு எனற எண்ணக்கருவை விளக்கி அது அருமை என்ற பிரச்சினையுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதை விளக்கும் ஆற்றலைப் பரீட்சிக்கக்கூடிய வினவாகும். ஆமயச்செலவு எண்ணக்கருவை விளக்குவதற்கு பெரும்பாலான மாணவர்களுக்கு அறிவு காணப்பட்டதுடன் அமயச்செலவும் அருமையும் தொடர்புரும் விதத்தை விளக்குவதற்கான ஆற்றல் இன்மை காரணமாக இலகுதன்மை 69% வரை குறைந்துள்ளது. அமயச்செலவை வரைவிலக்கணப்படுத்துவது மட்டுமன்றி அவற்றின் முக்கியத்துவத்தைக் காட்டப்படுவதுடன் முழு அமயச்செலவு உருவாவதற்கும் வளப்பற்றாக்குறையும் அங்கு மாற்றுப்பயன்பாடுகள் மேற்கொள்ளும்போதுதான் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

அருமை காரணமாக வரையறையற்ற தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்ய முடியாது அதனால் மாற்றுப் பயன்பாடியையே தெரிவை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன் அதனால் அமயச்செலவு ஒன்று ஏற்படும் என்பதும் கட்டாயம் விடையில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

★ III ஆவது பிரிவின் இலகுதன்மை 39% ஆகும். நுகர்வுக்கும் மூலதனத்துக்குமிடையே தெரிவை மேற்கொள்வதன் விளைவாக எதிர்காலப் பொருளாதார வளர்ச்சி வேகம் தீர்மானிக்கப்படும் என்பதை உற்பத்திச் சாத்திய எல்லையின் உதவியுன் விளக்குவதற்கு இப்பகுதி உள்ளடக்கப்பட்டது. இப்பிரிவிற்கு விடையளித்த விண்ணப்பதாரிகளில் ஏறக்குறைய 61% ஆனோருக்குக் கடினமாகியுள்ளமையினால் விளங்குவது நுகர்வுக்கும் முதலீட்டுக்குமிடையே தெரிவை மேற்கொள்ளும் தொழிற்பாட்டின் மூலம் எதிர்கால பொருளாதார வளர்ச்சி வேகம் தீர்மானிக்கப்படும் முறை பற்றிய சரியான விளக்கத்தையும் அது உற்பத்திச் சாத்திய எல்லை வளையி மூலம் முன்வைக்கக் கூடிய திறமையையும் மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

உற்பத்தி சாத்திய எல்லை வளையியை வரையும்போது முதலீட்டுப் பண்டம் நுகர்வுப் பண்டம் என்ற அச்சுக்களைக் குறிக்காமல் X உம் Y உம் என அச்சுக்களைப் பெயரிட்டுள்ளதால் புள்ளிகளை இழந்துள்ளனர். எனவே இவ்விடையில் உற்பத்தி சாத்திய எல்லை வளையியை வரையும்போது ஓர் அச்சில் முதலீட்டுப் பண்டம் என்றும் அடுத்த அச்சில் நுகர்வுப் பண்டம் என்றும் பெயரிடல் வேண்டும் என மாணவர்களை அறிவுறுத்தல் வேண்டும்.

★ IV ஆம் பிரிவின் மூலம் பொருளாதாரத்தின வினைத்திறன் அதனைத் தீர்மானிக்கும் காரணிகள், அது உற்பத்தி சாத்திய எல்லைப் புள்ளியில் மட்டும் காட்ட முடியும் என்பது தொடர்பாக மாணவர்களுக்குக் காணப்படும் அறிவைப் பரீட்சிப்பதாகும். எனினும் மாணவர்களுக்கு இப்பிரச்சினையின் கடினத்தன்மை 65% ஆகக் காணப்படுவதால் குறிப்பிடட கற்றல் விளைவு தொடர்பன தேவையான அளவு அறிவு காப்படவில்லை என்பது புலப்படுகின்றது. எனவே பொருளாதார வினைத்திறன் அதன் பிரதான இரு நிபந்தனைகளையும் விளக்குவதுடன், அது உற்பத்திச் சாத்திய எல்லை மூலம் முன்வைக்கக் கூடிய சரியான விளக்கத்தை மாணவர்களுக்குள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

பொருளாதா வினைத்திறன் என்பதன் மூலம் சமூகத்தின் மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சமூகத்தில் வளங்களைத் திறமையாகப் பயன்படுத்தல் மூலமாகும். இதற்கு உற்பத்தியின் வினைத்திறன், வளப்பகிர்வின் வினைத்திறன் என்ற இரு நிபந்தனைகளும் ஒரே நேரத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். வளப்பகிர்வின் வினைத்திறனின் போது சமூகத் தெரிவைக் காட்டும் பண்ட இணைப்பு ஒன்று மட்டுமே காணப்படும். P= mc என்ற அவ் இணைப்பு எல்லைப் பயனும் எல்லைச் செலவு என்பவற்றின் பகுப்பாய்வு மூலமே தீர்மானம் மேற்கொள்ளப்படும் முறை பற்றி மாணவர்களுக்கு அறிவை வழங்கப்பட வேண்டும்.

★ V ஆம் பிரிவின் முதலாம் பிரிவு இலகுதன்மை மிகவும் குறைந்த பிரிவாகும். இப்பிரிவின் மூலம் சந்தைப் பொருளாதாரம் மற்றும் கட்டளைப் பொருளாதாரம் என்பவற்றுடன் முதலாளித்துவ சமவுடமை பொருளாதார இயல்புகளில் கலப்பு ஏறபடும் முறை வினவப்பட்டுள்ளது. பெரும்பாலான மாணவர்கள் பல்வேறு நியதிகளின் கீழ் பொருளாதார முறைமைகளை வரிசைப்படுத்தும் தர்க்க ரீதியான அறிவை வெளிக்காட்டியிருந்தாலும் உண்மை உலகின் பொருளாதார முறைகளை பிரயோக ரீதியில் வகைப்படுத்தலின் போது மேற்படி நியதிகளின் கலப்பினை இனங்காண்பதில் தவறியுள்ளனர். எனவே பொருளாதார முறைமைகளை வகைப்படுத்தலின் போது தர்க்க ரீதியான விளக்கத்துடன் பிரயோக ரீதியான பொருளாதார முறைமைகளை வகைப்படுத்தியுள்ள முறைபற்றிய அறிவை மாணவர்களிடையே விருத்தி செய்தல் வேண்டும்.

பொருளாதார முறைமைகளை வகைப்படுத்தும் அடிப்படை நியதிகளாக சொத்துரிமை அடிப்படையில் வகைப்படுத்தல் மற்றும் வளப்பங்கீட்டு மற்றும் அடிப்படையில் வகைபபடுத்தல் பற்றி மாணவர்கள் தெரிந்திருக்க வேண்டும். சந்தைப் பொருளாதார முறைமையும் மத்திய திட்டமிடல் பொருளாதார முறைமையையும் வகைப்படுத்தும்போது சந்தைப் பொருளாதாரத்தில் தனியார் சொத்துரிமை காணப்படுவது சாதாரணமாகக் காணப்பட்டாலும் அது அத்தியாவசியமான காரணி அல்ல. அதேபோல் மத்திய திட்டமிடல் பொருளாதார முறைமையை இனங்காணும்போது வளப்பகிர்வு முறைமையை அடிப்படையிலேயே இனங்காண வேண்டும். பொதுவாக பொருளாதாரம் ஒன்று மத்திய திட்டமிடல் பொருளாதாரமாக தொழிற்பாடும்போது சொத்துரிமை அரசின் கீழ் காணப்படும். எனினும் அது அவசியமான காரணியொன்றன்று.

வினா இலக்கம் 2

2. (i) சந்தை நிரம்பல் வளையியொன்றை வரையும்போது நிலையாக இருப்பதாக எடுகோள் கொள்ளப்படும் காரணிகள் எவை ? (04 புள்ளிகள்)

(ii) வருமான விளைவும் பதிலீட்டு விளைவும் 'கேள்வி விதியினை' எவ்வாறு விளக்குகின்றன என்பதை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) குறைந்தபட்ச விலையையும் உயர்ந்தபட்ச விலையையும் வேறுபடுத்தி, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக. (04 புள்ளிகள்)

(iv) நிரம்பல் நெகிழ்வற்றதாக இருக்குமாயின் உற்பத்தியாளர் மீது விதிக்கப்படும் சிறப்பு (அலகு) வரியின் சுமையின் பெரும் பகுதியினை யார் செலுத்துவார் ? பொருத்தமான வரைபொன்றைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) பின்வரும் சமன்பாடுகள் பொருளொன்றின் சந்தைக் கேள்வி, நிரம்பல் சார்புகளை விபரிக்கின்றன.

$Q_d = 100 - 4P$ (கேள்வி) $\quad Q_s = -30 + 6P$ (நிரம்பல்)

(அ) சமன்பாடுகளைப் பயன்படுத்தி சந்தைச் சமநிலை விலையையும் சமநிலைத் தொகையையும் கணிப்பிட்டு, அதனை வரைபொன்றில் சரியாக வரைந்து காட்டுக. (02 புள்ளிகள்)

(ஆ) சந்தைச் சமநிலையின்போது உற்பத்தியாளர் மிகையையும் நுகர்வோர் மிகையையும் கணிப்பிட்டு, அதனை வரைபிற் காட்டுக. (02 புள்ளிகள்)

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

2 (i) - உள்ளீடுகளின் விலை ∴ உற்பத்தி செலவு

- தொடர்புடைய பொருள்களின் விலை
- தொழினுட்பம்
- எதிர்பார்க்கப்படும் எதிர்கால விலை
- அரச கொள்கைகள், வரிகளும் மானியங்களும்
- நிரம்பலாளர்களின் எண்ணிக்கை

(ஒரு விடயத்திற்கு 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள் விலைதவிர்ந்த ஏனைய காரணிகள் எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் 01 புள்ளி மாத்திரம் வழங்குக)

(ii) ஏனையன மாறாநிலையில் பொருளின் விலைமாற்றம் காரணமாக மெய்வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தினால் கேள்வித் தொகை மாற்றமடையும் தன்மையே வருமான விளைவு எனக்குறிப்பிடப்படும். ஏனையன மாறா நிலையில் குறித்த பொருளின் விலை அதிகரிக்குமாயின் நுகர்வோனின் மெய்வருமானம் வீழ்ச்சியடைவதனால் கருதப்படும் பொருள் ஒரு சாதாரண பொருளாயின் அப்பொருளின் கேள்வித் தொகை வீழ்ச்சியடையும் மறுபுறம் ஏனையன மாறா நிலையில் குறித்த பொருளின் விலை வீழ்ச்சியடையுமாயின் மெய்வருமான அதிகரிப்பு ஏற்படுவதனால், கருதப்படும் பொருள் சாதாரண பொருளாயின் அப்பொருளின் கேள்வித் தொகை அதிகரிக்கும். வருமான விளைவானது கேள்வி விதியினை உறுதிப்படுத்துகிறது.

(02 புள்ளிகள்)

- பதிலீட்டு விளைவென்பது ஏனையன மாறா நிலையில் சார்பு விலை மாற்றம் காரணமாக கேள்வித்தொகையில் ஏற்படும் மாற்றத்தைக் கருதும். கேள்வியைத் தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாறா நிலையில் குறித்த பொருளின் விலை அதிகரிக்குமாயின் சார்புவிலை உயரும். இதனால் சார்பளவில் விலை கூடிய பொருளின் கேள்வியை குறைத்து சார்பளவில் விலை குறைந்த பொருள் மீதான கேள்வி அதிகரிக்கும். மறுபுறம் ஏனையன மாறா நிலையில் கருதப்படும் பொருளின் விலை வீழ்ச்சியடையுமாயின் சார்பளவில் குறித்த பொருள் மலிவானதாக மாறும். இதனால் சார்பளவில் விலை குறைந்த பொருள் அதிகளவில் கொள்வனவு செய்யப்படும். எனவே பதிலீட்டு விளைவும் கேள்வி விதியினால் காட்டப்படும் விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையிலான எதிர்கணியத் தொடர்பினை உறுதிப்படுத்துகிறது.

(02 புள்ளிகள்)

(iii) குறிப்பிட்ட பொருள்கள் சேவைகளுக்கு சந்தையில் நிலவும் விலை உற்பத்தியாளருக்கும் நிரம்பலாளருக்கும் சாதகமற்றதாகவும், நியாயமற்றதாகவும் இருப்பதாக கருதப்படும் சந்தர்ப்பங்களில். அவர்களுக்கு உதவும் விதத்தில் அரசாங்கம் குறைந்தபட்ச விலையொன்றை சட்டரீதியாக நிர்ணயித்தல் குறைந்தபட்ச விலை எனப்படும். (01 புள்ளி)

உதாரணம்: குறைந்தபட்ச சம்பள நிர்ணயம், விவசாயப் பொருள்களுக்கு உத்தரவாத விலை நிர்ணயம்.

(01 புள்ளி)

- குறிப்பிட்ட சில பொருள்கள் சேவைகளுக்கு சந்தைகளில் நிலவும் விலை கொள்வனவாளர்களுக்கு சாதகமற்றதாகவும் நியாயமற்றதாயும் இருப்பதாகக் கருதப்படும் பட்சத்தில் அரசாங்கத்தினால் உயர்ந்தபட்ச விலையொன்று சட்டரீதியாக நிர்ணயம் செய்யப்படும். (01 புள்ளி)

உதாரணம் :-

அத்தியாவசிய உணவு.ூநுகர்வு பொருள்களுக்கு உச்ச விலை விதித்தல் (அரிசி, சீனி, பாண், பால்மா, மற்றும் எரிவாயு) பயணிகள் போக்கு வரத்துக் கட்டண நிர்ணயம், உயர்ந்தபட்ச வீட்டு வாடகை நிர்ணயம், உயர்ந்தபட்ச வட்டி வீத நிர்ணயம். (01 புள்ளி)

(iv) சந்தையின் இருபக்கங்களாகிய கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றில் எது நெகிழ்வற்றுக் காணப்படுகிறதோ அது வரிச்சுமையின் பெரும்பங்கினைத்தாங்கும் என்பது விதியாகும். இங்கு நிரம்பல் நெகிழ்வற்ற பொருளொன்றின் மீது சிறப்பு (அலகு) வரியொன்று விதிக்கப்படும் போது வரிச்சமையின் பெரும்பங்கினை நிரம்பலாளரே தாங்குவர். கொள்வனவாளர் வரிச்சுமையின் சிறிய அளவினை மட்டுமே தாங்குவர்.

(02 புள்ளிகள்)



(02 புள்ளிகள்)

(v) (ஏ)

Qd	=	QS
100 - 4 P	=	-30 + 6P
100 + 30	=	4P+6P
130	=	10P
13	=	P

Qd	=	100 - 4P	Qs	=	-30 - 6P
	=	100 - 4(13)		=	-30 + 6 (13)
	=	100 - 52		=	-30 + 78
	=	48		=	48

(02 புள்ளிகள்)

சமநிலை வரைபடத்தைக் காட்டல்.



(02 புள்ளிகள்)

(ஆ) உற்பத்தியாளன் மிகை $= \frac{(\text{சமநிலை விலை - குறைந்தபட்ச நிரம்பல் விலை})}{2} \times$ சமநிலைத் தொகை

$= \frac{(13 - 5)}{2} \times 48 \quad = \frac{384}{2} \quad = \underline{\underline{192}}$

நுகர்வோர் மிகை $= \frac{(\text{உயர்ந்தபட்ச கேள்வி விலை - சமநிலை விலை})}{2} \times$ சமநிலைத்தொகை

$= \frac{(25 - 12)}{2} \times 48 \quad = \frac{576}{2} \quad = \underline{\underline{288}}$

(உற்பத்தியாளர் மிகையையும் நுகர்வோர் மிகையையும் வரைபடத்தில் சரியாக காட்டுவதற்கு 01 புள்ளி, கணிப்பீடு செய்வதற்கு 01 புள்ளி)

2ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



02 ஆம் வினாவிற்கு ஏறக்குறைய விண்ணப்பதாரிகள் 92.76% விடையளித்துள்ளனர். (வரைபு 2) இவ்வினாவிற்கு 20 புள்ளிகள் உரித்தாகும்.

அதில்,

புள்ளி 0 - 5 ஆயிடையில் 28% மட்டும்

புள்ளி 6 - 10 ஆயிடையில் 27% மட்டும்

புள்ளி 11 - 15 ஆயிடையில் 26% மட்டும்

புள்ளி 16 - 20 ஆயிடையில் 19% மட்டும்

புள்ளிகள் பெற்றுள்ளனர்.



இவ்வினாவின் 05 பகுதிகள் உண்டு. இலகுதன்மை கூடிய பகுதி V (அ) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 77% ஆகும். அதேபோல் பகுதி V (ஆ) இன் இலகுதன்மை 63% ஆகும்.

★ I ஆம் பிரிவின் இலகுதனமை 57% ஆகும். சந்தை நிரம்பல் வளையியை வரையும்போது மாறும் காரணி, மற்றும் நிலையான காரணி தொடர்பான பிரச்சினை பற்றியதாக இது காணப்பட்டதுடன் விண்ணப்பதாரிகளில் குறிப்பிட்டதொரு வீதத்தினர் குறிப்பிட்ட தலைப்பு தொடர்பாக சரியான அறிவைப் பெற்றிருக்கவில்லை. நிரம்பல் மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் கவனத்தில் கொள்ளப்படும் பண்டத்தின் விலை மாற்றம் தொடர்புபடாது என்பதை உறுதிப்படுத்தி கற்றல் கற்பித்தல் தொழிற்பாட்டைத் தயாரிக்கவும். கேள்வி நிரம்பல் வளையிகளை வரையும்போது விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் நிலையாகக் காணப்படுகின்றது என்ற எடுகோள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தவும்.

★ II ஆம் பிரிவின் இலகுதன்மை 43% ஆகும். கேள்வி விதிக்கான காரணி பற்றி வினவும் இவ்வினாவை பெரும்பாலான விண்ணப்பதாரிகள் சரியாக விளங்கியிருக்கவில்லை. கேள்வி விதிக்கான காரணி, கேள்வியைத் தீர்மானிக்கும் காரணி என பெரும்பாலான விண்ணப்பதாரிகள் தவறாகப் புரிந்துகொண்டுள்ளமை கடினத்தன்மை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது. எனவே விலை மாற்றத்தின்போது வருமான விளைவு, பதிலீட்டு விளைவு என்பவற்றை தெளிவாக விளங்கக் கூடிய விதத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படல் பொருத்தமானதாகும்.

★ III குறைந்தபட்ச விலை உயர்ந்தபட்ச விலை என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டை உதாரணம் மூலம் விளங்கக் கூடிய பிரச்சினைக்கு விண்ணப்பதாரிகளில் இலகுதன்மை 45% ஆகும். குறைந்தபட்ச விலைக்கும் உயர்நதபட்ச விலைக்கும் இடையிலான வேறுபாட்டை வரைவிலக்கணப்படுத்த மாணவர்களிடம் திறமை காணப்படாலும் பிரயோக ரீதியான உதாரணம் காட்டத்தவறிவிட்டமை இப்பிரச்சினையின் கடின தன்மைக்குக் காரணமாகியுள்ளது எனக் காட்டாலாம். குறைந்தபட்ச விலை சமநிலை விலையிலும் உயர்ந்த விலையாகவும் உயர்ந்தபட்ச விலை சமநிலை விலையிலும் கீழுள்ள விலையாகவும் அமையும். அவ்வாறான நிலைமைகளுக்கு பிரயோக ரீதியான உதாரணம் காட்டும் ஆற்றலை வளர்க்கக் கூடியதாக கற்றல்-கற்பித்தல் தொழிற்பாடுகளை ஒழுங்கமைத்தல் அவசியமாகும்.

★ IV ஆம் பிரிவின் இலகுதன்மை 44% ஆகும். நிரம்பல் நெகிழ்ச்சியின் அடிப்படையில் வரிச்சுமை உற்பத்தியாளருக்கும் கொள்வனவாளருக்கும் இடையே எவ்வாறு பங்கிடப்படும் என்ற பிரச்சினை பற்றி கேட்கப்பட்டுள்ளதுடன் பெரும்பாலானோர் அது தொடர்பாக சரியான விளக்கத்தைப் பெற்றிருக்கவில்லை. கேள்வி நிரம்பல் நெகிழ்ச்சிகளில் பல்வேறு நிலைமைகளை சரியாக வரைபடத்தில் காட்டுவதற்கும் அதன்படி வரிச்சுமையை நுகர்வோர் உற்பத்தியாளர்களுக்கிடையில் பங்கிடப்படும் முறையை சரியாக விளக்குவதற்கும் மாணவர்களுக்கிடையேதிறமையை விருத்தி செய்ய வேண்டும்.

★ v (அ) பிரிவின் இலகுதன்மை 77% ஆகும். பெரும்பாலான மாணவர்கள் சமன்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் சமநிலை விலை, தொகையைக் கணிக்கும் திறனைக் காட்டி இருந்தனர். எனினும் கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளை முறையாகவும் சரியாகவும் வரைபின் மூலம் காட்டக்கூடிய திறமையை மாணவர்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும்.

(ஆ) பிரிவின் இலகுதன்மை 63% ஆகும். கேள்வி நிரம்பல் சமன்பாட்டினைப் பயன்படுத்தி நுகர்வோர் மற்றும் உற்பத்தியானர் மிகையை கணிப்பீடு செய்வதற்கும் அம்மிகையை வரைபு மூலம் முன்வைக்கவும் மாணவர்களின் திறமையைப் பரீட்சிக்கும் இவ் உப பிரிவின் கடினத்தன்மைக்கு காரணமாக அமைவது வரைபைப் பயன்படுத்தி உற்பத்தி மற்றும் நுகர்வு மிகையைக் கணிக்க முடியாமல் போனமையும் அம் மிகையைக் காட்டும் பகுதியைச் சரியாக இனங்கண்டு பரப்பளவை கணிப்பிட முடியாமல் போனமையுமாகும். உற்பத்தி மற்றும் நுகர்வு மிகையை இனங்காண்பதற்கும் அவற்றைக் கணிப்பிடுவதற்கும் மாணவரிடத்தில் ஆற்றலை விருத்தி செய்யும் வண்ணம் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

வினா இலக்கம் 3

3. (i) ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தந்து வெளிப்படையான (நேர்) செலவுகளையும் உட்கிடையான (நேரில்) செலவுகளையும் வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) பொருளியலாளர்கள் சாதாரண இலாபத்தை ஒரு செலவாகக் கருதுவதேன் ? (04 புள்ளிகள்)

(iii) **நால்வகைச்** சந்தை அமைப்புகளையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iv) இலாப உச்சப்படுத்தலுக்கான நிபந்தனை என்ன ? விலையை ஏற்கும் ஓர் உற்பத்தி நிறுவனம் தொடர்பில் இந்நிபந்தனை எவ்வாறு அமையும் ? (04 புள்ளிகள்)

(v) தரப்பட்ட குறுகிய காலமொன்றில் விலையை ஏற்கும் உற்பத்தி நிறுவனமொன்று 20 அலகுகளை உற்பத்தி செய்வதாகக் கருதுக. அதன் வெளியீட்டலகொன்றின் சந்தை விலை ரூபா 50 ஆகும். 20 அலகு வெளியீட்டில் சராசரி மொத்தச் செலவு ரூபா 60 ஆகவும் சராசரி மாறுஞ்செலவு ரூபா 40 ஆகவும் உள்ளன.

(அ) இந்த குறுகிய காலப்பகுதியில் நிறுவனம் அடையும் இலாபத்தின் அல்லது நட்டத்தின் அளவு யாது ? (02 புள்ளிகள்)

(ஆ) இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு எவ்வளவு ? (02 புள்ளிகள்)

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(3) (i) - உற்பத்திச் செயன்முறைக்காக நிறுவனம் வெளியிலிருந்து கொள்வனவு செய்யும் உள்ளீடுகள் மீது மேற்கொள்ளப்படும் செலவுகளின் பணரீதியான பெறுமதி நேர் செலவாகும். (01 புள்ளி)

ஜமாற்றீடான விடை :- நேர் செலவென்பது நிறுவனம் வெளியிலிருந்து கொள்வனவு செயயும் உற்பத்தி வளங்களின் அமையச் செலவாகும்ஸ

உதாரணம் : வெளியிலிருந்து பெற்ற உழைப்பின் பொருட்டு மேற்கொள்ளப்படும் சம்பளக் கொடுப்பனவுகள், வெளியிலிருந்து பெற்ற மூலப் பொருள்கள், மின்சாரம், நீர் எரிபொருள் போன்ற உள்ளீடுகளுக்கான கொடுப்பனவுகள்

- உற்பத்தியில் பயன்படுத்தப்படும் நிறுவனத்திற்குச் சொந்தமான உற்பத்தி வளங்களின் அமையச் செலவே உட்கிடையான (நேரில்) செலவாகும். அவற்றுக்கு பணக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் படுவதில்லை. நிறுவனத்திற்கு சொந்தமான வளங்களின் சிறந்த மாற்றுப்பயன்பாட்டின் ஏற்றப்பட்ட பெறுமதியை (ஐிரவநன எயடரந) உட்கிடையான செலவுகள் பிரதிபலிக்கும். (01 புள்ளி)

உதாரணம் :

- நிறுவனமொன்று தனது சொந்த நிதியினை நிறுவனத்தின் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துமாயின் அந் நிதியினை அடுத்த சிறந்த மாற்றுத் தெரிவில் ஈடுபடுத்தி உழைக்கப்படக்கூடிய வட்டி வருவாயை இழத்தல் இங்கு உட்கிடையான செலவாகும்
- நிறுவனம் தன்னிடமுள்ள, நிலம், கட்டடம் போன்றவற்றை உற்பத்தியில் ஈடுபடுத்தும் போது இழக்கும் வாடகை வருமானங்கள் மற்றொரு உதாரணமாகும்.
- நிறுவன உரிமையாளன் முயற்சியில் ஈடுபடுவதன் காரணமாக இழந்த சம்பளங்கள் (01 புள்ளி)

(ii) - சாதாரண இலாபம்: முயற்சியாளரொருவர் நடைமுறையிலுள்ள உற்பத்தி செயன்முறையில் தொடர்ந்து ஈடுபடும் பொருட்டு எதிர்பார்க்கும் குறைந்த பட்சக் கொடுப்பனவு சாதாரண இலாபம் எனப்படுகிறது. (02 புள்ளிள்)

- முயற்சியளரொருவர் முயற்சியாண்மைத் திறன்களை வழங்குகிறார். மூலதனம் உள்ளடங்கலான ஏனைய உற்பத்திக் காரணிகளைப் பொருத்தமாக ஒருங்கிணைந்து வணிகம் தொடர்பான தீர்மானங்களை எடுத்து வணிக இடர்களை எதிர்கொண்டு புத்தாக்கத்தில் ஈடுபட்டு உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வார். இவ்வாறு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் போது அதன் பொருட்டு அவரது முயற்சிக்குப் பொருத்தமான குறைந்தபட்சக் கொடுப்பனவொன்றை எதிர்பார்ப்பார். நடைமுறையிலுள்ள உற்பத்திச் செயன் முறையினுள் அக்குறைந்த பட்சக் கொடுப்பானவையேனும் அவரால் பெற்றுக்கொள்ள முடியவில்லையெனின் குறித்த தொழில் முயற்சியிலிருந்து தமது முயற்சியாண்மையை விலகிக் கொள்வார்
- எனவே முயற்சியாண்மைப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய சாதாரண கொடுப்பனவாகையால் சாதாரண இலாபம் ஒரு உட்கிடையான (நேரில்) செலவாகும். (02 புள்ளிகள்)

(iii) - நிறைபோட்டி தூயபோட்டி
- தனியுரிமைப் போட்டி
- சிலருமை
- தனியுரிமை (ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(iv) - இலாபம் என்பதனாற் கருதப்படுவது யாதெனில் நிறுவனமொன்றின் மொத்த வருவாய் (TR) அதன் மொத்த செலவை (TC) விஞ்சியதாகக் காணப்படும் அளவினையாகும். எதேனும் ஒரு வெளியீட்டு மட்டத்தில் எல்லை வருவாய் (MR) எல்லைச் செலவுக்கு (MC) சமப்படுமாயின் அவ் வெளியீட்டு மட்டமானது இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டமாகக் கருதப்படும். எனவே இலாப உச்சப்படுத்தல் விதியாகக் கருதப்படுவது MC = MR என்னும் நிபந்தனையாகும்
வெளியீடானது அக்குறிப்பிட்ட புள்ளியை அடையும் போது பெறப்படும் இலாபத்தில் மேலதிக அதிகரிப்போ அல்லது வீழ்ச்சியோ ஏற்படாது (02 புள்ளிகள்)

- விலை ஏற்போனாக செயற்படும் உற்பத்தி நிறுவனமொன்றின் எல்லை வருவாய் (MR) அதன் விலைக்கு (P) சமப்படுவதனால் அவ்வாறானதொரு நிறுவனத்தின் இலாப உச்சப்படுத்தல் நிபந்தனை
P = MC எனக் மீளக்குறிப்பிடப்படலாம் அதாவது விலையை ஏற்கும் ஒரு நிறுவனம் தனது இலாபத்தை உச்சப்படுத்த அல்லது நட்டத்தை இழிவுபடுத்த P=MC ஆகும் புள்ளியில் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும். இந்நிபந்தனையானது விலை ஏற்போனாகத் தொழிற்படும் நிறுவனத்துக்கு மட்டுமே ஏற்புடைய ஒரு நிபந்தனையாகும் (03 புள்ளிகள்)

(v) (அ) நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டம்

இலாபம் அல்லது நட்டம் = மொத்த வருவாய் (P x Q) - மொத்த செலவு (ATC x Q)
= (50x 20) – (60x 20)
= 1000 – 1>200
நட்டம் = 200 ரூபா (02 புள்ளிகள்)

(ஆ) மொத்த நிலையான செலவு = சராசரி நிலையான செலவு (AFC) x வெளியீடு (Q)

சராசரி நிலையான செலவு = சராசரி மொத்த செலவு (ATC) - சராசரி மாறுஞ் செலவு (AVC)
= 60 – 40 = 20

மொத்த நிலையான செலவு (TFC) = சராசரி நிலையான செலவு x வெளியீடு
= 20 x 20
= 400 ரூபா
(02 புள்ளிகள்)

[மாற்றீடான விடை :-

மொத்த செலவு (TC) = சராசரி மொத்த செலவு (ATC) x வெளியீடு (Q)
= 60 x 20 = 1200

மொத்த மாறும் செலவு (வுஏஊ) = சராசரி மாறுஞ் செலவு (AVC) x வெளியீடு (Q)
= 40 x 20 = 800

மொத்த நிலையான செலவு (வுகுஊ) = TC - TVC
= 1200 - 800
= 400 ரூபா

3 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



03 ஆம் வினாவிற்கு 64% வரையான விண்ணப்பதாரிகள் விடையளித்துள்ளனர். (வரைபு - 2) இவ்வினாவிற்குரிய புள்ளி 20 ஆகும்.

அதில் புள்ளி 00 - 05 வகுப்பாயிடையில் 21% வரையாகவும்
புள்ளி 06 - 10 வகுப்பாயிடையில் 26% வரையாகவும்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் 28% வரையாகவும்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் 25% வரையாகவும் புள்ளிகள் பெற்றுள்ளனர்.



இவ்வினாவின் 05 பகுதிகள் உண்டு. இலகுதன்மை குறைந்த பகுதி (iv) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 34% ஆகும். அதேபோல் பகுதி (iii) இலகுவான பகுதியாகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 87% ஆகும்.

★ I ஆம் பிரிவின் இலகுதன்மை 66% ஆகும். நேர் செலவு, உட்கிடையான (நேரில்) செலவுகளையும் பற்றி கோட்பாட்டு ரீதியான அறிவையும் பிரயோக ரீதியான உதாரணங்களையும் பிரச்சினை மூலம் வினவப்பட்டுள்ளதுடன் இப்பிரச்சினை கடினமாவதற்கு பிரயோக ரீதியான உதாரணம் காட்டுவதால் காணப்படும் கடின தன்மை காரணமாகும். அப்பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய விதத்தில் கற்றல் - கற்பித்தல் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

★ II பிரிவின் இலகுதன்மை 46% ஆகும். சாதாரண இலாபத்தை செலவொன்றாகக் கவனத்தில் எடுப்பதற்கான காரணியை வினவுதல் இப்பிரிவில் உள்ளடக்கப்படும் சாதாரண இலாபத்தை சரியாக வரைவிலக்கணப்படுத்த முடியாமையும் அது நேரில் செலவில் உள்ளடக்கப்படும் என்பதை விளக்குவதற்கான விளக்கமின்மையும் கடினத்தன்மைக்கான காரணமாகியுள்ளன. எனவே சாதாரண இலாபம் பற்றிய விளக்கம் அளிப்பதற்கும் அது நேரில் செலவு என்பதை முன்வைப்பதற்கும் மாணவர்களிடையே அறிவை விருத்தி செய்தல் வேண்டும்.

★ III ஆம் பிரிவிற்கு பெரும்பாலான விண்ணப்பதாரிகள் சரியான விடை அளித்திருந்ததுடன் அது 3ஆம் வினாவில் கூடிய இலகுதன்மையாகும். அதாவது 87% மாகக் காட்டும் பிரிவாகும்.

★ IV ஆம் பிரிவின் 3 ஆம் வினாவின் கடினதன்மை கூடிய பிரிவாகும். இங்கு கடின தன்மை 66% ஆகும். இலாபத்தை உச்சப்படுத்தல் விதியையும் நிறைபோட்டி நிறுவனமொன்று தொடர்பாக அவ்விதியை வெளிப்படுத்தக்கூடிய முறையும் பரீட்சிக்க இப்பிரச்சினை தயாரிக்கப்பட்டுள்ளது. அதிகளவிலான விண்ணப்பதாரிகளுக்கு இலாபத்தை உச்சப்படுத்தும் விதியைப் பற்றி விளக்கமின்மை காணப்பட்டதுடன் நிறைபோட்டி நிறுவனமொன்று தொடர்பாக அக்கூற்று கூறும் முறை பற்றி சரியான அறிவு காணப்படவில்லை. எனவே எந்தவொரு வியாபார நிறுவனமும் இலாபத்தை உச்சப்படுத்தும் நிபந்தனையும், நிறைபோட்டி தொடர்பாக மிக முக்கிய கூற்றைக் கூறும் முறையையும் தெளிவுபடுத்தக்கூடிய முறையில் கற்றல் கற்பித்தல் தொழிற்பாடுகளைத் தயாரித்தல் வேண்டும்.

எந்தவொரு நிறுவனத்தினதும் இலாபத்தை உச்சப்படுத்தும் விதியானது எல்லை வருமானம் (MR) எல்லைச் செலவுக்கு (MC) சமனாகும் சந்தர்ப்பத்திலாகும். விடையில் இது உள்ளடக்கப்படல் வேண்டும்.

இவ்வினாவில் 'நிறைபோட்டி நிறுவனம்' என்ற சொல்லுக்கு விலையை ஏற்கும் நிறுவனம் எனக் குறிப்பிடப்பட்டுள்து. விலை ஏற்போன் என்பது நிறைபோட்டி நிறுவனமாகும்.

★ V (அ) பிரிவின் இலகுதன்மை 68% ஆகும். நிறைபோட்டி நிறுவனமொன்று குறுங்காலத்தில் காணப்படும் வருமான, செலவு நிலைமையில் இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடும் முறை பற்றிய பிரச்சினை வினவப்பட்டிருந்தாலும் அது தொடர்பான சரியான அறிவு விண்ணப்பதாரிகளில் குறிப்பிட்ட ஒரு பிரிவினரிடையே காணப்படவில்லை என்பது தெளிவு. நிறைபோட்டி நிறுவனமொன்றின் மொத்த வருமானத்தையும் மொத்தச் செலவையும் இனங்கண்டு இலாபத்தைக் கணிப்பீடு செய்யும் அறிவை வழங்க வேண்டும்.

இங்கு (ஆ) பிரிவின் இலகுதன்மை 62% ஆகும். நிறைபோட்டி நிறுவனமொன்று தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் மொத்த நிலையான செலவினைக் கணிப்பீடு செய்யும் அறிவு இப்பிரச்சினையில் அவதானிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட அளவு அபேட்சகர்களுக்கு அந்த அறிவு காணப்படாமையால் செலவினைப் பகுப்பாய்வு செய்யக்கூடிய விதத்தில் கற்பித்தல் தொழிற்பாடு ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

வினா இலக்கம் 4

4. (i) ஒரு நாட்டின் கூட்டு மொத்தப் பொருளாதார நடவடிக்கைகளை அளவிடப் பயன்படும் **மூன்று** அணுகுமுறைகளும் எவை ? அவை மொத்தப் பொருளாதார செயன்முறை தொடர்பில் ஒரே பெறுமதியினைத் தருவதேன் ? (04 புள்ளிகள்)

(ii) இலங்கையின் தேசிய சேமிப்பின் பிரதான மூலாதாரங்கள் எவை ? (04 புள்ளிகள்)

(iii) தேசிய வருமானப் புள்ளிவிபரங்கள் எவ்வழிகளில் பயன்படுகின்றன ? (04 புள்ளிகள்)

(iv) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுவதாகக் கொள்க. (சகல புள்ளிவிபரங்களும் ரூபா மில்லியன்களில்)

வகை	பெறுமதி	வகை	பெறுமதி
மொத்த தனியார் உள்நாட்டு முதலீடு	70	அரசாங்கத்திலிருந்தான வீட்டுத்துறைக்கான மாற்றல்கள்	25
அரசாங்கக் கொள்வனவுகள்	50	அரசாங்கம் வீட்டுத்துறையினருக்கு வழங்கும் வட்டிச் செலுத்தல்கள்	15
சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி	400	வெளிநாட்டிலிருந்தான காரணி வருவாய்கள்	7
சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மீதி	-25	வெளிநாட்டிற்குச் செலுத்தப்படும் காரணி வருவாய் செலுத்தல்கள்	12
வரிகள்	100	தேறிய வெளிநாட்டு நடைமுறை மாற்றல்கள்	10

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) தேறிய ஏற்றுமதிகள் (02 புள்ளிகள்)

(ஆ) தனியார் நுகர்வுச் செலவீடு (02 புள்ளிகள்)

(இ) செலவிடத்தக்க மொத்தத் தேசிய வருமானம் (02 புள்ளிகள்)

(ஈ) அரச சேமிப்புகள் (02 புள்ளிகள்)

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

04. (i) - வெளியீட்டு (உற்பத்தி) அணுகுமுறை
- வருமான அணுகுமுறை
- செலவீட்டு அணுகுமுறை

(மூன்று அணுகுமுறைகளும் குறிப்படப்பட்டிருப்பின் 02 புள்ளிகள் இரண்டு அணுகுமுறைகள் குறிப்பிடப்பட்டிருப்பின் 01 புள்ளி)

- உற்பத்தி, வருமானம் மற்றும் செலவீட்டு அணுகுமுறைகள் மூலம் வெளிப்படுத்தப்படுவது ஒரே பரிமாற்றச் செயன்முறையின் மூன்று பக்கங்களாகும். உற்பத்திச் செயன்முறையின் மூலம் தரப்பட்ட ஆண்டொன்றில் நாட்டினுள் உற்பத்தி செய்யப்பட்ட எல்லா முடிவுப் பொருள்கள் சேவைகளின் பெறுமதி கணிப்பிடப்படுகிறது, வருமான அணுகுமுறையின் மூலம் முடிவுப் பொருள் உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்த உற்பத்திக் காரணிகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகையாகிய மொத்த வருமானத்தின் பெறுமதியே கணிப்பிடப்படுகிறது. உற்பத்தியின் பெறுமதியானது அவ்வுற்பத்தியை மேற்கொள்ளப் பங்களித்த காரணிகளின் பெறுமதிக்கு சமமாக வேண்டுமாகையால் வருமானத்தின் பெறுமதி உற்பத்திப் பெறுமதிக்கு சமமாக இருக்கும். அதேபோல் செலவீட்டு அணுகுமுறையின் மூலம் கணிப்பிடப்படுவது யாதெனில் முடிவுப் பொருள்கள் சேவைகளின் அளவை கொள்வனவு செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய மொத்த செலவுகளின் பெறுமதியாகும். உற்பத்தியின் பெறுமதியானது அவ்வுற்பத்தியைக் கொள்வனவு செய்யத் தேவையான பணப்பெறுமதிக்கு சமமாக இருக்க வேண்டும். இதனால் உற்பத்திப் பெறுமதியும் செலவீட்டுப் பெறுமதியும் ஒன்றுக்கொன்று சமமாகும். இதன் அடிப்படையில் நோக்குமிடத்து உற்பத்தி, வருமானம், செலவீடு ஆகிய அணுகுமுறைகள் மூலம் பெறப்படுவது மொத்த உற்பத்திச் செயன்முறையின் ஒரே பெறுமதியாகும் (02 புள்ளிகள்)

(ii) - உள்நாட்டு சேமிப்பு
- தனியார் சேமிப்பு (வீட்டுத்துறை, மற்றும் நிறுவனங்கள்)
- அரசாங்க சேமிப்பு

- வெளிநாட்டு சேமிப்பு
- வெளிநாட்டு தேறிய காரணி வருவாய்
- வெளிநாட்டு தேறிய தனியார் மாற்றல்கள் (03 புள்ளிகள்)

(உள்நாட்டு சேமிப்புகள் மற்றும் வெளிநாட்டு சேமிப்புக்கள் எனக் குறிப்பிடப்பட்டிருப்பின் 02 புள்ளிகள் மாத்திரம்)

(iii) - பொருளாதார செயலாற்றத்தை மதிப்பிடல்
- பொருளாதார வளர்ச்சியை அளவிடல்
- தலைக்குரிய வருவாய் மட்டங்களை சர்வதேச அடிப்படையில் ஒப்பிடல்
- பொருளாதாரத்தின் கட்டமைப்பு சார் பண்புகளை ஆய்வு செய்தல்.
- மக்களின் வாழ்க்கைத்தரம் நலன் என்பவற்றை மதிப்பீடு செய்தல்
- வருமானத்தின் வினைத்திறனான பங்கீட்டை (சம்பளங்கள், வட்டி, வாடகை மற்றும் இலாபம்) இனங்காணல்.
- பேரினப் பொருளாதாரத்தின் தொழிற்பாட்டு ரீதியான தொடர்புகளை இனங்காணல்
- பொருளாதார மற்றும் சமூக கொள்கை உருவாக்கம் மற்றும் திட்டமிடல்
- பொருளாதாரத்தின் மொத்த வளங்களின் அளவு மற்றும் அவற்றின் பயன்பாடு என்பவற்றை இனங்காணல்.
- பேரினப் பொருளாதார மாறிகளின் நடத்தையினை ஆய்வு செய்து எதிர்வு கூறல்களை மேற்கொள்ளல்.

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(iv) (அ) தேறிய ஏற்றுமதிகள் :

சென்மதி நிலுவையின் = தேறிய ஏற்றுமதிகள் + வெளிநாட்டுத் தேறிய நடைமுறைக் கணக்குமீதி காரணிவருவாய் + தேறிய வெளிநாட்டு மாற்றல்கள்

தேறிய ஏற்றுமதிகள் = நடைமுறைக் கணக்கு மீதி – (வெளிநாட்டு தேறிய காரணிவருவாய் + தேறிய வெளிநாட்டு மாற்றல்கள்)

(01 புள்ளி)

$= - 25 – [(7 -12) +10]$
$= -25 – [-5 + 10]$
$= - 25 - 5$
$= - 30$ மில்லியன் ரூபா (01 புள்ளி)

(M) தனியார் நுகர்வுச் செலவினம் :

$C = Y - [C + I + G + NX]$

(01 புள்ளி)

$= 400 - [70 + 50 + (-30)]$
$= 400 – [120 – 30]$
$= 400 – 90$
$C = 310$ மில்லியன் ரூபா (01 புள்ளி)

(அ) தேறிய ஏற்றுமதிகள் :

சென்மதி நிலுவையின் = தேறிய ஏற்றுமதிகள் + வெளிநாட்டுத் தேறிய நடைமுறைக் கணக்குமீதி காரணிவருவாய் + தேறிய வெளிநாட்டு மாற்றல்கள்

தேறிய ஏற்றுமதிகள் = நடைமுறைக் கணக்கு மீதி – (வெளிநாட்டு தேறிய காரணிவருவாய் + தேறிய வெளிநாட்டு மாற்றல்கள்)

(01 புள்ளி)

= - 25 – [(7 -12) +10]
= -25 – [-5 + 10]
= - 25 - 5
= - 30 மில்லியன் ரூபா

(01 புள்ளி)

(ஆ) தனியார் நுகர்வுச் செலவினம் :

C = Y - [C + I + G + NX]

(01 புள்ளி)

= 400 - [70 + 50+ (-30)]
= 400 – [120 – 30]
= 400 – 90
C = 310 மில்லியன் ரூபா

(01 புள்ளி)

(இ) செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானம்

= மொத்த உள்நாட்டு உற்பத்திதேறிய வெளிநாட்டு காரணிவருவாய் + தேறிய வெளிநாட்டு நடைமுறை மாற்றல்கள்

(01 புள்ளி)

= 400 + (-5) + 10
= 405 மில்லியன் ரூபா

(01 புள்ளி)

(ஈ) அரசாங்க சேமிப்பு (SG)

= அரசாங்கத்தின் தேறிய வரிவருவாய் - அரசாங்கக் கொள்வனவுகள்

(01 புள்ளி)

SG = (T-Tr-1NT) - G
= (100 – 25 -15) - 50
= 60 – 50
SG = 10 மில்லியன் (01 புள்ளி)

4ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



4 ஆம் வினாவிற்கு அபேட்சகர்கள் 22% மானோர் விடையளித்துள்ளனர். (வரைபு - 2) இவ்வினாவிற்கான புள்ளிகள் 20 ஆகும்.

அதில் புள்ளி 00 - 05 வகுப்பாயிடையில் 45% வரையாகவும்
புள்ளி 06 - 10 வகுப்பாயிடையில் 27% வரையாகவும்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் 19% வரையாகவும்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் 9% வரையாகவும்
புள்ளிகள் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 4 பிரிவுகள் உள்ளன. இலகுதன்மை மிகவும் குறைந்த பிரிவு (iv) (D) ஆவதுடன் அதன் இலகுதன்மை 13% ஆகும். இலகுதன்மை கூடிய பிரிவு (i) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 61% ஆகும்.

★ (i) ஆவது பகுதியின் இலகுதன்மை 61% ஆகும். ஒரு நாட்டின் மொத்தப் பொருளாதார தொழிற்பாடுகளை அளவிடுவதற்கு பயன்படும் வழிமுறைகளை வினவுவதற்கான இவ்வினா கேட்கப்பட்டுள்ளதுடன் அபேட்சகர்களில் குறிப்பிட்டதொரு சதவீதத்தினர் பிரச்சினையை விளங்கிக் கொள்ள முடியாமைக்கு முகங்கொடுத்துள்ளதால் இலகுதன்மை வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே தேசிய கணக்கீட்டை தயாரிக்கும் வழிமுறைகள் பல்வேறு பெயர்களால் அறிமுகப்படுத்தபடுவதாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தல் அவசியம் என்பதுடன் மூன்று வழிமுறைகளும் மூலம் ஒன்றே அளவிடப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தி கற்றல் கற்பித்தல் தொழிற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும்.

★ (ii) ஆவது பிரிவில் இலகுதன்மை 34% ஆகும். இலங்கையின் தேசிய சேமிப்பின் மூலாதாரம் பற்றி வினவும் பிரச்சினை தொடர்பாக பெரும்பான்மையான அபேட்சகர்கள் சரியான விடையை அளிக்கத் தவறியுள்ளமை தேசிய சேமிப்பைத் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் பற்றியும் அவற்றின் உப பிரிவுகள் தொடர்பாக உறுதியான விளக்கமின்மையும் ஆகும். எனவே இலங்கையின் சேமிப்பு வகைகள் அவற்றின் மூலாதாரங்கள் பற்றிய இற்றைப்படுத்திய அறிவு மாணவர்களுக்கு அளிக்கப்படல் வேண்டும். மாதிரி விடையில் கொடுக்கப்பட்டுள்ளதன்படி சேமிப்பு உள்ளடக்கம் எது என்பதை விடையில் உள்ளடக்கப்படல்

★ (iii) ஆவது பிரிவின் இலகுதன்மை 51% ஆகும். பிரச்சினையானது தேசிய வருமானப் புள்ளி விப அட்டவணையின் பயன்களைப் பற்றிக் கேட்பதாகும். அபேட்சகர்களில் அரைவாசிப்பேர் வரை சரியான விடையை அளிக்கத் தவறியுள்ளமையால் இத்தலைப்பு தொடர்பாக போதியளவு அறிந்திருக்கவில்லை என்பது புலனாகின்றது. தேசிய கணக்கீட்டின் முக்கியத்துவத்தை விளங்குவதற்கு மாணவர்களிடையே அறிவை விருத்தி செய்தல் வேண்டும்.

★ (iv) ஆவது பிரிவின் அ, ஆ, இ, ஈ மூலம் கேட்கப்பட்டிருந்தது கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய கணிப்பீடு தொடர்பான அளவீடுகளைக் கணிப்பிடுவதாகும். எனினும் அதன் இலகுதன்மை முறையே 33%, 31%, 22%, மற்றும் 13% என குறைந்த மட்டத்தில் காணப்படுவதன் மூலம் பெரும்பாலான அபேட்சகர்களுக்கு அத்திறமையைப் பெற்றிருக்கவில்லை என்பது புலனாகின்றது. எனவே கொடுக்கப்பட்ட புள்ளி விபரங்களைப் பயன்படுத்தி மூன்று வழிமுறைகளிலும் தேசிய கணக்கீட்டு எண்ணக்கருவை மட்டுமன்றி அது தொடர்பான உப பிரிவுகளையும் அளவிடும் திறனை அபேட்சகர்களிடம் விருத்தி செய்தல் வேண்டும்.

(அ) வினாவில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின்படி தேறிய ஏற்றுமதியை சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கு மீதியின் மூலமே இனங்காண முடியும். நடைமுறைக் கணக்கில் பின்வரும் வகுதிகள் உள்ளடக்கப்படும்.

1. தேறிய ஏற்றுமதி
3. வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானம்
2. வெளிநாட்டு தேறிய நடைமுறை மாற்றல்.

எனவே சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு மீதியின் மூலம் வெளிநாட்டு தேறிய காரணி வருமானத்தையும் வெளிநாட்டு தேறிய நடைமுறை மாற்றலையும் கழித்தால் தேறிய ஏற்றுமதியைப் பெறலாம்.

கவனிக்க : புதிய சென்மதி நிலுவை அட்டவணை மாதிரியின்படி தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானத்துக்குப் பதிலாக ஆரம்ப வருமானக் கணக்கின் மீதியும், வெளிநாட்டு தேறிய நடைமுறை மாற்றலுக்கும் பதிலாக இரண்டாம்நிலை வருமானக் கணக்கின் மீதியையும் இணைப்புச் செய்தல் வேண்டும்.

(ஆ) ஒரு நாட்டின் மொத்த உற்நாட்டு உற்பத்தியானது பின்வரும் தொழிற்பாடுகளுக்குப் பயன்படும்.

- தனியார் நுகர்வு (C)
- மொத்த உள்நாட்டு முதலீடு (I)
- அரச கொள்வனவு (G)
- தேறிய ஏற்றுமதி (NX)

இதன்படி வருமானத்தில் (Y)/ மொத்த தேசிய உற்பத்தியில் I +G + NX என்ற பகுதிகளைக் கழிப்பதன் மூலம் தனியார் நுகர்வைப் பெறலாம்.

(இ) பொருளாதாரமொன்றிற்கு செலவிடமுடிவது மொத்தத் தேசிய உற்பத்தி / வருமானம் மட்டுமல்ல வெளிநாட்டு தேறிய காரணி வருமானத்தையும் நடைமுறை மாற்றலையும் வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் வருமானத்தையும் செலவிட முடியும். எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடும்போது வெளிநாட்டு தேறிய காரணி வருமானமும் வெளிநாட்டு மாற்றலும் உள்ளடக்கப்படமாட்டாது. எனவே உள்நாட்டு உற்பத்தியுடன் அவற்றைக் கூட்டுவதன் மூலம் செலவிடத்தக்க தேசிய வருமானம் பெறப்படும். உள்நாட்டு உற்பத்திக்கு / வருமானத்திற்கு வெளிநாட்டு தேறிய காரணி வருமானத்தைக் கூட்டுவதன் மூலம் மொத்த தேசிய உற்பத்தி / வருமானம் பெறப்படுவதுடன் அதனுடன் வெளிநாட்டு நடைமுறை மாற்றலைக் கூட்டுவதன் மூலம் செலவிடத்தக்க தேசிய வருமானம் பெறப்படும்.

(ஈ) இங்கு புள்ளிகள் குறைவதற்கான காரணம் தேறிய வரி வருமானத்தை இனங்காண முடியாமல் போனமையாகும். அரச தேறிய வரி வருமானத்திலிருந்து அரச கொள்வனவைக் கழித்த பின் அரச சேமிப்பு பெறப்படும். தேறிய வரி வருமானம் எனக் கருதப்படுவது அரச வருமானத்தில் இருந்து அரசினால் வழங்கப்படும் மாற்றல்களையும் குடித்தன மாற்றல்களையும் கழித்த பின் பெறப்படும் பெறுமதியாகும்.

வினா இலக்கம் 5

5. (i) பின்வரும் மொத்த நுகர்வுச் சார்பினைக் கருத்திற் கொள்க.

$$C = a + bY_d$$

இச்சமன்பாட்டில் C என்பது மொத்த நுகர்வுச் செலவீட்டையும் Y_d என்பது செலவிடத்தக்க தேசிய வருமான மட்டத்தையும் குறிக்கும். **a** மற்றும் **b** ஆகிய குணகங்கள் பற்றி நீர் எவ்வாறு கருத்துரைப்பீரென விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) சமநிலைத் தேசிய வருமான மட்டம் என்பதனாற் கருதப்படுவதென்ன ? திறந்த பொருளாதாரமொன்றின் தேசிய வருமானச் சமநிலை மட்டத்தை அடையத் தேவையான நிபந்தனைகள் யாவை ? (04 புள்ளிகள்)

(iii) மூடிய பொருளாதாரமொன்றில் திட்டமிட்ட சேமிப்புகள் திட்டமிட்ட முதலீட்டை விஞ்சியுள்ளதாகக் கருதுக. இவ்வாறான நிலைமையில் இப்பொருளாதாரம் எவ்வாறு சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை அடையுமென விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) மூடிய பொருளாதாரமொன்றின் பின்வரும் பேரினப் பொருளாதாரத் தரவுகள் தரப்பட்டுள்ளன. (சகல தரவுகளும் ரூபா மில்லியன்களில்)

நுகர்வு (C)	= 50 + 0.8 Yd
முதலீடு (I)	= 120
அரசாங்கக் கொள்வனவுகள் (G)	= 100
வரிகள் (T)	= 80
அரசாங்கத்திலிருந்தான வீட்டுத்துறைக்கான மாற்றல்கள் (Tr.)	= 55

(அ) இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை நிர்ணயிக்குக. (02 புள்ளிகள்)

(ஆ) அரசாங்கக் கொள்வனவுகள் ரூபா 200 மில்லியன் ஆக அதிகரிக்குமாயின், புதிய சமநிலைத் தேசிய வருமான மட்டம் என்ன ? (02 புள்ளிகள்)

(இ) அரசாங்க செலவீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது ? (02 புள்ளிகள்)

(ஈ) அரசாங்கம் ரூபா 2 000 மில்லியன் தேசிய வருமான மட்டத்தை அடைவதனை இலக்காகக் கொண்டுள்ளதாயின் அதற்கெனத் தேவைப்படும் மொத்த அரசாங்கக் கொள்வனவுகள் எவ்வளவாக இருக்க வேண்டும் ? (02 புள்ளிகள்)

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(5) (i) - நுகர்வுச் சமன்பாட்டில் 'a' என்னும் குணகம் வாழ்க்கையைக் கொண்டு செல்லத்தேவையான மிகக் குறைந்தமட்ட நுகர்வுச் செலவீட்டின் அளவைக் குறிக்கும். இது நடைமுறை வருமான மட்டத்துடன் எவ்விதமான தொடர்களையும் கொண்டிருப்பதில்லை. நிகழ்கால வருமான மட்டம் பூச்சியமாக இருப்பினும் வாழ்க்கையை கொண்டுசெல்ல இக்குறைந்த பட்ச நுகர்வுச் செலவீட்டைக் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும்.

(02 புள்ளிகள்)

[மேற்படி விளக்கம் இன்றி 'a' என்பது தன்னிச்சையான / சுயாதீன நுகர்வு செலவீடு என்றோ அல்லது நுகர்வுச் சார்பின் இடைவெட்டுப்புள்ளி ஏன்றோ குறிப்பிடப்பட்டிருப்பின் 01 புள்ளி வழங்குக.]

- நுகர்வு சமன்பாட்டில் 'b' என்னும் குணகத்தால் காட்டப்படுவது எல்லை நுகர்வு நாட்டமாகும். செலவிடத்தக்க வருமானத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் நுகர்வு செலவீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையிலான விகிதம் எல்லை நுகர்வு நாட்டமாகும்.

அதாவது = MPC ஆகும்

[மேற்படி விளக்கமின்றி 'b' என்பது நுகர்வு சமன்பாட்டின் சாய்வாகும்.'.சரிவாகும் எனக்குறிப்பிடப்படின் 01 புள்ளி வழங்குக]

(ii) - யாதேனும் ஒரு தேசிய வருமான மட்டமானது அதன் பெறுமதியிலிருந்து மேல்நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ மாற்றமடையும் போக்கினைக் கொண்டிருக்காதாயின் அத்தேசிய வருமான மட்டமானது சமநிலை தேசிய வருமான மட்டமெனக் கருதப்படும்.

(02 புள்ளிகள்)

திறந்த பொருளாதாரமொன்றில் மொத்த வெளியீடானது மொத்த செலவீட்டிற்குச் சமப்பட வேண்டும் (01 புள்ளி)

- $Y = E$
  $Y = C + I + G + (X - M)$
  (01 புள்ளி)

- $W = J$
  $S + T + M = I + G + X$
  (01 புள்ளி)

(iii) - மூடிய பொருளாதாரமொன்றில் திட்டமிட்ட முதலீட்டை விட திட்டமிட்ட சேமிப்பு அதிக பெறுமதியினை எடுக்குமாயின் (அதாவது ளூ,1) பொருளாதாரத்தின் திட்டமிட்ட மொத்த செலவீடானது (நு) மொத்த வெளியீட்டை விட (லு) குறைவான பெறுமதியைக் கொண்டிருக்கும். (அதாவது லு,நு). இது சமநிலையற்ற ஒரு நிலையாகும். இதன் விளைவாக குறைவடைந்த மொத்த செலவீட்டிற்கு ஏற்ப வெளியீட்டு மட்டமும் சுருக்கமடையும். (02 புள்ளிகள்)

- மொத்த செலவீட்டை விட மொத்த வெளியீடு அதிகமாகும் போது இருப்புகள் அதிகரிக்கத் தொடங்கும். நிறுவனங்களின் திட்டமிடப்பட்ட இருப்புகளின் அளவை விட கூடுதலாக நிகழ்கால இருப்புகள் அதிகரிக்கும் போது நிறுவனங்கள் வெளியீட்டை குறைப்பதன் மூலம் திட்டமிட்ட இருப்பு மட்டங்களை பேண முயற்சி செய்யும். திட்டமிட்ட சேமிப்புக்கு திட்டமிட்ட முதலீடுகள் சமப்படும் வரை வெளியீடு சுருக்கமடையும் செயன்முறை தொடரும். சேமிப்பு முதலீட்டுக்கு சமமாகும் போது (ளுஹீஜ) வருமான மட்டமானது மீண்டும் சமநிலையை அடையும். இதன்போது திட்டமிடப்படாத இருப்பு மாற்றங்களெதுவும் காணப்படமாட்டாது. மொத்த வெளியீடு மொத்த செலவீட்டுக்கு சமமாகும். (02 புள்ளிகள்)

(iv) (அ) சமநிலைத் தேசிய வருமான மட்டம்

$$Y = C + I + G$$
$$Y = 50 + 0.8Yd + 120 + 100$$
$$Y = 50 + 0.8(Y - T + Tr) + 220$$
$$Y = 50 + 0.8(Y - 80 + 55) + 220$$
$$Y = 50 + 0.8Y - 64 + 44 + 220$$
$$Y = 270 + 0.8Y - 20$$
$$Y = 250 + 0.8Y$$
$$Y - 0.8Y = 250$$
$$0.2Y = 250$$
$$Y = 1250 \text{ மில்லியன்}$$

(01 புள்ளி)

(ஆ) அரசாங்கக் கொள்வனவுகள் 200 மில்லியனாக அதிகரிக்குமாயின் சமநிலைத் தேசிய வருமான மட்டம்

$$Y = 50 + 0.8Y_d + 120 + 200$$
$$Y = 50 + 0.8(Y - 80 + 55) + 320$$
$$= 50 + 0.8Y - 64 + 44 + 320$$
$$= 350 + 0.8Y$$

(01 புள்ளி)

$Y - 0.8Y = 350$

$0.2Y = 350$

$Y = 1{,}750$ மில்லியன் (01 புள்ளி)

மாற்றீடான விடை :

$K_G = \frac{1}{1 - b} = \frac{1}{1 - 0.8} = 5$ (அரசாங்க செலவீட்டுப் பெருக்கி)

$\Delta G = 100 \longrightarrow \Delta Y = 100 \times 5 = 500$

புதிய சமநிலைத் தேசிய வருமான மட்டம் $= 1{,}250 + 500 = 1750$ மில்லியனாகும்.]

(இ) அரசாங்க லெவீட்டுப் பெருக்கி

$K_G = \frac{1}{1 - MPC} = \frac{1}{1 - 0.8} = \frac{1}{0.2} = 5$ (02 புள்ளிகள்)

(ஈ) ரூபா 2000 மில்லியன் தேசிய வருமான மட்டத்தை இலக்காகக் கொண்டால் அதனை அடையத் தேவையான அரசாங்கக் கொள்வனவின் பெறுமதி

தற்போதைய வருமானமட்டம் = 1750 மில்லியன்

இலக்கிடப்பட்ட வருமானமட்டம் = 2000 மில்லியன்

வருமானம் அதிகரிக்க வேண்டியளவு மில்லியன்

அரசாங்க செலவீட்டுப் பெருக்கி KG = 5

எனவே வருமான மட்டத்தை 250 ஆல் அதிகரிக்க வேண்டுமாயின்

$(\Delta G) = \frac{(\Delta Y)}{K_G} = \Delta G = \frac{250}{5} = 50$

$= 200 + 50 + = 250$

$= 250$ மில்லியன்

மாற்றீடான விடை :

$Y = C + I + G$

$2{,}000 = 50 + 0.8Y_d\ 120 + G$ (02 புள்ளிகள்)

$2{,}000 = 50 + 0.8(Y - T + Tr) + 120 + G$

$2{,}000 = 50 + 0.8(Y - 80 + 55) + 120 + G$

$2{,}000 = 50 + 0.8Y - 64 + 44 + 120 + G$

$2{,}000 = 150 + 0.8\ (2{,}000) + G$

$2{,}000 = 150 + 16{,}00 + G$

$2{,}000 - 1{,}750 = G$

$250 = G]$

5 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



5 ஆம் வினாவிற்கு விண்ணப்பதாரிகள் 29% மானோர் விடையளித்துள்ளனர். (வரைபு - 2) இவ்வினாவிற்கான புள்ளிகள் 20 ஆகும்.

அதில் புள்ளி 00 - 05 வகுப்பாயிடையில் 24% வரையாகவும்
புள்ளி 06 - 10 வகுப்பாயிடையில் 30% வரையாகவும்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் 31% வரையாகவும்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் 15% வரையாகவும்
புள்ளிகள் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 4 பிரிவுகள் காணப்படுவதுடன் (iv) பிரிவு (அ), (ஆ), (இ), (ஈ) என 4 உபபிரிவுகளைக் கொண்டது. இவ்வினாவில் கூடிய இலகுதன்மை (iv) இ உபபிரிவுக்கு உரித்தாவதுடன் இங்கு இலகுதன்மை 70% ஆகும். மிகவும் குறைந்த இலகுதன்மை (iii) பிரிவில் காணப்படுவதுடன் இங்கு இலகுதன்மை 16% ஆகும்.

★ (i) பிரிவின் இலகுதன்மை 60%ஆகும். எளிய நுகர்வுச் சார்பில் அடங்கும் விடயங்கள் பற்றிய அறிவைப் பரிசீலிக்க இவ்வினா கேட்கப்பட்டுள்ளது. பிரச்சினை தொடர்பாக அபேட்சகர்களில் 40% ஆனோர் திருப்திகரமற்ற பதிலைக் காட்டியுள்ளதால் அது தொடர்பாக மாணவர்களுக்கு அறிவு வழங்கப்பட வேண்டும் என்பது புலனாகின்றது.

★ (ii) பிரிவின் மூலம் சமநிலைத் தேசிய வருமானத்தை வரைவிலக்கணப் படுத்தலும் திறந்த பொருளாதாரத்தில் தேசிய வருமான மட்டத்தில் சமநிலைக்குத் தேவையான நிபந்தனைகளும் கேட்கப்பட்டுள்ளது. 49% அபேட்சகர்களுக்கு கடினத்தன்மை காணப்படுவதன் மூலம் தேசிய வருமானம் பற்றிய சரியான வரைவிலக்கணப்படுத்தும் அறிவும், தேசிய வருமான சமநிலையைத் தீர்மானிக்கத் (ஒவ்வொரு மாதிரியும்) தேவையான நிபந்தனைகளை விளக்குவதற்கான விளக்கமும் காணப்படாமை புலப்படுகின்றது. இத்திறமையை விருத்தி செய்யும் வகையில் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

★ (iii) பிரிவு வினாவின் 84% மேலாக கடினத்தன்மை காணப்பட்ட பிரிவாகும். மூடிய பொருளாதாரத்தில் உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல்களை இனங்கண்டு முதலீட்டை விட சேமிப்பு அதிகமாகக் காணப்படும் நிலைமையில் தேசிய வருமான மட்டத்திற்கு அண்மிக்கும் முறையைப் பற்றிக் கேட்கப்படும் வினாவாகும். எனினும் பெரும்பாலான அபேட்சகர்கள் வெளிப்பாய்யல், உட்பாய்ச்சல் மாற்றத்துக்கு ஏற்ப சமநிலைத் தேசிய வருமானம் தீர்மானிக்கப்படும் முறையை விளக்கும் திறமைகாணப்படவில்லை என்பது தெளிவாகியது. எனவே இத்திறமையை விருத்தி செய்யக்கூடிய வகையில் அட்டவணை, வரைபுகள் மட்டுமன்றி சமன்பாடுகள் மூலமும் வெளிப்பாய்ச்சல், உட்பாய்ச்சல் மாற்றத்துக்கு ஏற்ப சமநிலை வருமானம் தீர்மானிக்கப்படும் முறையை விளகக வேண்டும்.

பேரினப் பொருளாதாரத்தில் சமநிலை தீர்மானிக்கப்படுவது தொடர்பாக கென்சிய கோட்பாட்டின்படி வெளிப்பாய்ச்சல், உட்பாச்சல் (W = J) சுற்றோட்டத்தின்படி சமநிலையின்போது எதிர்பாறாத இருப்புத் தொகையொன்று அல்லது பற்றாக்குறை நிலையை இருக்கக் கூடாது. திட்டமிட்ட சேமிப்பும் திட்டமிட்ட முதலீடும் ஒன்றுகொன்று சமனடைந்தால் எதிர்பாராத இருப்பு பூச்சியமாகும். திட்டமிட்ட முதலீட்டை விட திட்டமிட்ட சேமிப்பு அதிகமாகக் காணப்பட்டால் எதிர்பாராத இருப்புத் தொகுதியொன்று ஏற்படுவதால் நிறுவனம் இருப்பைக் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கும். இத்தொழிற்பாடு சமநிலை வெளியீட்டு மட்டம் வரை நடைபெறும். இம்முறையில் S இற்கும் I இற்கும் இடையில் மாற்றம் காணப்படும்போது இருப்பு மாற்றம் என்ன பெறுமதியைப் பெறும் என்பதும் சமநிலையை நோக்கிப் பயணிக்கும்போதும் இருப்பு மாற்றத்துக்கு என்ன நடைபெறும் என்பது பற்றிய சரியான விளக்கத்தை பெற்றுக்கொடுத்தல் அவசியமாகும்.

★ (iv) (அ) பிரிவின் இலகுதன்மை 60% ஆகும். கொடுக்கப்பட்ட தகவல்களின்படி சமநிலைத் தேசிய வருமானத்தைக் கணிப்பிடுவதற்கு இப்பிரிவு உள்ளடக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க அளவு அபேட்சகர்கள் இத்திறமையை காட்டாததால் இது குறித்த அறிவும், திறனும் வளர்க்கப்படல் வேண்டும்.

(ஆ) பிரிவின் இலகுதன்மை 51% ஆகும். பிரச்சினையானது சுயாதீன செலவு பெருக்கியை கணித்து அதனடிப்படையில் சுயாதீன செலவின் மாற்றத்திற்கு ஏற்ப சமநிலை வருமானம் மாற்றமடையும் அளவை அளவிடுவது தொடர்புடையதாகும். அபேட்சகர்களில் அரைவாசிப்பேர் வரை இத்திறமையைப் பெற்றிருக்கவில்லை. சுயாதீன செலவு மாற்றத்துக்கு ஏற்ப சமநிலை வருமானத்தின் மாற்றத்தைக் கணிக்கும்போது பெருக்கியைப் பயன்படுத்தப் பயிற்றுவிக்கவும்.

(இ) பிரிவின் மூலம் அரசின் செலவு பெருக்கியை கணிக்கும் திறன் பரீட்சிக்கப்படுகின்றது. அப்பிரிவின் இலகுதன்மை 70% ஆகும். இதன் மூலம் பெருக்கியைக் கணிக்கும் திறன் மாணவர்களிடம் காணப்படுகின்றது என்பது புலனாகின்றது.

(ஈ) அரச செலவின் மாற்றத்திற்கும் சமநிலை மாற்றத்திற்கும் இடையிலான தொடர்பு பெருக்கியின் மூலம் கணிப்பிடும் திறமை பெரும்பாலான அபேட்சகர்களுக்கிடையில் காணப்படவில்லை என்பது ஈ பிரவின் கடினத்தன்மை 63% இன் மூலம் காட்டப்பட்டுள்ளது. பெருக்கியின் அடிப்படையில் சுயாதீன செலவு மாற்றத்தின் மூலம் சமநிலை வருமானத்தை மதிப்பிடும் திறனை மாணவர்களிடத்தில் வளர்த்தல் வேண்டும்.

அரச நிதிக் கொள்கையின் கீழ் அரச செலவை கூட்டுவதன் மூலம் வெளியீட்டு மட்டத்தில் செல்வாக்குச் செலுத்த முடியும். இங்கு அரச செலவு பெருக்கிக்கும் வெளியீட்டை மாற்றமடையச் செய்ய வேண்டிய அளவுகளிடையே தொடர்பு காணப்படுகின்றது. அத்தொடர்பின் தன்மையை சரியாக விளங்கிக் கொள்வது முக்கியமாகும். எனவே எதிர்பார்க்கும் விடையை நன்கு கற்கவும்.

உப பிரிவு 'ஆ'

வினா இலக்கம் 6

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க.)

6. (i) 'பணம்' என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, பண்டமாற்று முறையின் குறைபாடுகளை பணம் எவ்வாறு நிவர்த்தி செய்ததெனச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) கடன் அட்டைகள் பணமாகக் **கருதப்படாதது** ஏன் என்பதை விளக்குக. (02 புள்ளிகள்)

(iii) பொருளாதாரமொன்றில் பணத்திற்கான கேள்வியை நிர்ணயிக்கும் பேரினப் பொருளியல் மாறிகளைப் பட்டியற்படுத்தி, இம்மாறிகள் பணத்திற்கான கேள்வியை எவ்வாறு பாதிக்குமென்பதைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) **கேள்வித்தூண்டல் பணவீக்கத்தையும் செலவுத்தூண்டல் பணவீக்கத்தையும் நீர் எவ்வாறு** வேறுபடுத்துவீர் ? அவசியமான வரைபடங்களைப் பயன்படுத்தி உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) தற்போது இலங்கையின் உள்நாட்டுப் பணச்சந்தையில் அதி உயர்மட்டத்திலான மிகைத் திரவத்தன்மை நிலவுவதேன் ? வங்கி முறைமையின் மிகைத் திரவத்தன்மையை உறிஞ்சும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை ? (06 புள்ளிகள்)

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(6) (i)

- பொருள்கள் மற்றும் சேவைகளைப் பரிமாற்றம் செய்யும் போது செலுத்தல்களின் (பரிமாற்ற) ஊடகமாகப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் எதுவும் பணமாகக் கருதப்படும். (02 புள்ளிகள்)

- நேரடிப் பரிமாற்றல்களுடன் தொடர்புடைய பண்டமாற்று முறையின் கீழ் பரிமாற்றமொன்று இடம்பெற வேண்டுமாயின் பரிமாற்றத்தில் ஈடுபடும் இரு தரப்பினரதும் விருப்பங்கள் பரஸ்பரம் பொருத்தப்பாடுடையதாக இருக்க வேண்டும். அதாவது இரட்டைப் பொருந்துகையுடையதாக இருக்க வேண்டும். இந்த நிபந்தனையை பூர்த்தி செய்வதென்பது மிகவும் சிரமமான ஒன்றாகும். பணப்பிரயோகம் இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறது. (01 புள்ளிகள்)

- போக்குவரத்துச் சிரமங்கள் (தூரப்பிரதேசங்களுடன் கொண்டு செல்லவேண்டும் அதன் பொருட்டு பரிமாறப்படும் பொருள்களை மீளக்கொண்டுவருதல் மிகக் கடினமானதும் செலவுகூடியதுமாகும்)

- பரிமாற்றத்தின் பொருட்டு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு நீண்டகாலமெடுத்தல்

- பரிமாற்றத்திற்கு தயாராக பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தலில் எதிர் நோக்கப்படும் சிக்கல்கள் மற்றொரு பிரச்சினையாகும்

- சிறு அலகுகளாகப் பிரித்து பரிமாற்றம் செய்வதில் காணப்பட்ட அசௌகரியங்கள் இன்னுமொரு இடர்பாடாகும். (ஏதேனும் ஒரு விடயத்திற்கு 01 புள்ளி)

(ii)

- கடன் அட்டைகள் பணமாகக் கருதப் படாமைக்கு காரணம் பணத்திற்கு இருக்க வேண்டிய பண்புகள் கடன் அட்டைகளில் இல்லாமையாகும். கடன் அட்டைகள் பெறுமானத் திரட்டாகத் தொழிற்படுவதில்லை மாறாக தற்காலிகமாக ஒரு பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்படும் பணியினை மட்டுமே ஆற்றுகிறது. (01 புள்ளி)

- கடனட்டைகள் ஒரு கம்பனியிடமிருந்து அல்லது நிதி நிறுவனமொன்றிடமிருந்து குறுங்காலக் கடனைப் பெற்றுக் கொள்ளும் ஒரு வழிமுறையாகும். குறுங்கால அடிப்படையில் கடனட்டை பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்பட்ட போதிலும் கடனட்டைக் கணக்கைத் தீர்ப்பதற்கு அதன் உரிமையாளன் பணத்தையே பயன்படுத்த வேண்டும். கடனட்டை மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல் அக்கணக்குக்கு பணத்தை வைப்பு செய்வதன் மூலம் தீர்க்கப்பட்ட பின்னரே பூரணமடையும். (01 புள்ளி)

(iii)

- மெய்வருமானம்
- வட்டிவீதம்
- விலைமட்டம்
- எதிர்பார்க்கப்படும் பணவீக்க வீதம்

(ஏதேனும் 2 காரணங்களுக்கு 02 புள்ளிகள்)

- கொடுக்கல் வாங்கல்களின் அளவைத் தீர்மானிக்கும் மிக முக்கிய காரணியாக அமைவது மெய்வருமானத்தின் அளவாகும். மெய்வருமானம் அதிகரிக்கும்போது கொடுக்கல் வாங்கல் செய்வதற்கான பரிமாற்ற நோக்கப் பணக்கேள்வியின் அளவும் அதிகரிக்கும்.

- வட்டிவீதமானது பண மீதிகளை கைவசம் வைத்திருப்பதற்கான அமையச் செலவினைக் காட்டும். வட்டி வீதம் அதிகரித்தால் பண இருப்புக்களை கைவசம் வைத்திருப்பதற்கான அமையச் செலவு அதிகரிக்கும். இதனால் பணத்திற்கான கேள்வி குறைவடையும் அதேவேளை அதற்குப் பதிலாக மாற்றீடான சொத்துகளில் அவை முதலீடு செய்யப்படும்.

- வட்டி வீதமானது உத்தேச நோக்கத்தின் ஊடாகவும் பணக்கையிருப்புகள் மீதான கேள்வியில் செல்வாக்கு செலுத்துகிறது. வட்டி வீதம் எதிர்காலத்தில் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுமாயின் அதன் மூலம் ஏற்படும் மூலதன அநுகூலங்களை அடையும் பொருட்டு பணக்கையிருப்புகள் மீதான கேள்வி குறைவடைந்து உண்டியல்கள், பிணையங்கள் போன்றவற்றின் மீதான முதலீடு அதிகரிக்கும்.

- விலைமட்டம் உயரும் போது கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதிகள் அதிகரிப்பதனால் பணக்கையிருப்புகளை அதிகளவில் வைத்திருக்க நேரிடும்.

- எதிர்கால பணவீக்க வீதம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுமாயின் பணக்கையிருப்புகளின் மெய்பெறுமதி குறைவடையக்கூடுமாகையால் பணத்தை வைத்திருப்பதற்கான கேள்வி குறைவடையும். பணத்திற்குப் பதிலாக மெய்ச் சொத்துகள் மீதான கேள்வி அதிகரிக்கும்.

(ஏதேனும் இரு விடயங்களுக்கு 02 புள்ளிகள்)

(iv) - மொத்த நிரம்பலுடன் ஒப்பிடுகையில் மொத்தக் கேள்வி அதிகம் விரிவடைவதால், பொருள்கள் சேவைகளின் விலைகள் உயர்வதனால் பொது விலை மட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பு கேள்வித் தூண்டல் பணவீக்கம் எனப்படும் (01 புள்ளி)

- வரைபட ரீதியில்





(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி)

- செலவுத்தூண்டல் பணவீக்கத்தால் கருதப்படுவது உள்ளீடுகளின் விலை அல்லது உற்பத்திச்செலவு அதிகரிப்பதனால் மொத்த நிரம்பல் குறைவடைந்து பொருள்கள் சேவைகளின் விலை உயர்வினால் பொதுவிலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரிக்கும் நிலையாகும். மொத்த நிரம்பல் வளையியின் இடப்புற நகர்வின் மூலம் இது காட்டப்படும் (01 புள்ளி)

வரைபடத்தில் காட்டல் : செலவுத்தூண்டல் பணவீக்கம்.



(சரியான வரைபடத்திற்கு 01 புள்ளி)

(v) **உள்நாட்டு சந்தையில் மிகைத்திரவத்தன்மை நிலவக் காரணம்.**

- மத்திய வங்கியானது உரிமம் பெற்ற வங்கிகளுடன் (இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி) வெளிநாட்டு நாணயப் பரிமாற்று உடன்படிக்கைகளில் (SWAP arrangements) ஈடுபடுவதன் மூலம் அவ் வங்கிகள் மூலம் பெற்ற வெளிநாட்டு நாணயங்களை மத்திய வங்கி கொள்வனவு செய்தல்

- உள்நாட்டு நாணயச் சந்தையில் மத்தியவங்கி வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்தமை

- தனியார் துறையின் கம்பனி கடன்பத்திரங்கள் மற்றும் பங்குகளை வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வழங்குவதன் மூலம் பெற்ற வெளிநாட்டு நாணயங்களை மத்திய வங்கி கொள்வனவு செய்தல்

- மத்திய வங்கியானது முதனிலைச் சந்தையில் திறைச்சேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்தல்.

- மத்திய வங்கியின் இலாபத்தின் ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு வழங்குதல்.

- 2013 ஆண்டு ஜூலை மாத முதலாந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மத்திய வங்கியின் நியதி ஒதுக்கு வீதத்தை 200 அடிப்படைப் புள்ளிகளால் குறைத்தமை.

- வங்கிக்கட்டமைப்பிலிருந்து வேறு தனியார் துறை நிறுவனங்கள் பெற்ற கடன்களினளவு வீழ்ச்சியடைந்தமை. (ஏதேனும் மூன்று விடயங்களுக்கு 03 புள்ளிகள்)

மிகைத் திரவத்தன்மையை உறிஞ்சுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

- நாளாந்த திறந்த சந்தை நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல்.

- திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் மத்திய வங்கியிடமுள்ள அரச பிணையங்களின் அளவு போதாமையினால் மேலதிக திரவத் தன்மையை உறிஞ்சும் நோக்கில் ஏனைய நிறுவனங்களிடமிருந்து (உதாரணமாக ஊழியர்சேமலாப நிதி) கடனாகப் பெற்ற திறைசேரி உண்டியல்களைப் பயன்படுத்தல்

- தயார் நிலை வைப்பு வசதிகளை (Standing Deposit Facility) அறிமுகஞ்செய்தல்.

- ஓரிரவு மீள் கொள்வனவு ஏலங்களை நடத்தல்.

- வணிகவங்கிகளிடமுள்ள மிகைத் திரவத் தன்மையை தனியார் துறைக்கு கடன்வழங்குவதன் மூலம் உற்பத்தி நடவடிக்கைகளை நோக்கி திருப்பி விடுவதை ஊக்குவித்தல்.

- திறந்த சந்தை நடவடிக்கையில் பங்குபற்றுவோர் மேற்கொள்ளும் ளுனுகு பரிமாற்றங்கள் மாதமொன்றிற்கு 03 தடவைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தல்

(ஏதேனும் 03 விடயங்களுக்கு 03 புள்ளிகள்)

6 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



06 ஆம் வினாவிற்கு அபேட்சகர்களில் ஏறக்குறைய 83% மானோர் விடையளித்துள்ளனர். (வரைபு - 2) இவ்வினாவிற்கான புள்ளிகள் 20 ஆகும்.

அதில் புள்ளி 00 - 05 வகுப்பாயிடையில் 42% வரையாகவும்
புள்ளி 06 - 10 வகுப்பாயிடையில் 34% வரையாகவும்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் 20% வரையாகவும்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் 4% வரையாகவும்
புள்ளிகள் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 5 பிரிவுகள் காணப்படுவதுடன் (i) ஆம் பிரிவின் இலகுதன்மை உச்சமாகக் காணப்பட்டாலும் அதன் இலகுதன்மை 72% இற்கு வரையறுத்துள்ளது. இலகுதன்மை மிகவும் குறைந்த பிரிவு (v) (அ), ஆகவும் அதன் இலகுதன்மை 15% மட்டுமே. (ii), (iii), (iv), (v) பிரிவுகள் 4 இனதும் இலகுதன்மை பொதுவாகக் கொண்டால் 42% ஐ விட குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

★ 1 ம் பிரிவு 72% இலகுதன்மையைக் காட்டுகின்றது. இப்பிரிவில் பணத்தை வரைவிலக்கணப்படுத்தி எவ்வாறு பிபாடர் திட்டத்தின் கடினத்தன்மையை நிவர்த்தி செய்ய முடியும் என்பது தொடர்பானதாகும். இவ்வினா கடினமாவதற்கான காரணமாக அமைவது பணத்தை வரைவிலக்கணப்படுத்தக்கூடிய ஆற்றல் காணப்பட்டாலும் அது பாடர் முறையின் கடுமையான கடினத்தன்மையை எவ்வாறு நீக்க முடிந்தது என்பது பற்றி விளக்கமளிக்க முடியாமையினாலாகும். அதனால் பணப்பாவணையில் பாடர் திட்டத்தின் கடினத்தன்மையை நீக்கிய முறையை பற்றிய அறிவை மாணவருக்கு வழங்குக.

★ பிரிவின் கடினத்தன்மை 59% ஆகும். உயர்ந்த கடினத்தன்மைக்கான காரணம் இப்பிரச்சினை மூலம் கடன் அட்டை ஏன் பணமாகக் கொள்ளப்படுவதில்லை என்பது கேட்கப்படுகின்றது. இங்கு உயர் கடின தன்மைக்கான காரணமாக அமைவது கடன் அட்டை என்றால் என்பதும் கடன் அட்டை எக்காரணத்தினாலும் பணமாக கொள்ளப்படுவதில்லை என்பதை அறியாது காணப்பட்டமையினாலாகும். எனவே கடன் அட்டை உள்ளிட்ட பணப்பதிலீடுகளின் பண்புகளும் பணத்தின் பண்புகளையும் விளங்கி கடன் அட்டை பணமாக கருதப்படாமைக்கான காரணத்தை தெளிவுபடுத்த வேண்டும்.

★ (iii) பிரிவின் இலகுதன்மை 26% ஆகும். இப்பிரிவின் மூலம் பணத்திற்கான கேள்வியைத் தீர்மானிக்கும் பேரின பொருளாதார மாறிகளையும் அம்மாறிகளின் மாற்றம் பணத்தின் கேள்வியல் செலுத்தும் செல்வாக்கினையும் புற்றி கேட்கப்படுகின்றது. பெரும்பாலான மாணவர்கள் பணத்திற்கான கேள்வி ஏற்படுவதற்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் அதாவது கொடுக்கல் வாங்கல், பாதுகாப்பு, உத்தேச நோக்கம் போன்ற பண மீதியை கையில் வைத்திருக்க செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என தவறாக புரிந்துள்ளமை. இதனால் பேரின பொருளாதார மாறிகளும் அவற்றுள் பணக் கேள்வியைத் தீர்மானிக்கும் மாறிகளையும் அம்மாறிகளில் ஏற்படும் மாற்றமும் பணக் கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் முறை பற்றிய அறிவையும் பகுப்பாய்வுத் திறனையும் மாணவர்களிடையே வளர்த்தல் வேண்டும். விடையை நன்கு கற்று குறிப்பிட்ட பேரினப் பொருளாதார மாறியை இனங்காண்க.

★ (iv) பிரிவின் கேள்வித் தூண்டப்பட்ட பண வீச்சத்திற்கும் செலவுத்துண்டல் பண வீச்சத்திற்கும் இடையிலான வேறுபாட்டையும் அந் நிலைமைகளை வரைபட ரீதியாகக் காட்டுதல் தொடர்பான அறிவையும் திறனையும் பரீட்சித்தலுக்கென கொடுக்கப்பட்ட வினாவாகும். இங்கு கடினத்தன்மை 63% ஆகக் காணப்படுவதன் மூலம் பெரும்பாலான அபேட்சகர்கள் இது தொடர்பான அறிவும் திறனும் பெறவில்லை என்பது புலனாகின்றது. எனவே குறிப்பிட்ட தலைப்பு தொடர்பான அறிவையும் வரைபடம் மூலம் விளக்கக்கூடிய திறனையும் விருத்தி செய்யக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் தொழிற்பாடுகளை ஒழுங்கமைத்தல் வேண்டும். வரைபடத்தின் மூலம் விடையை முன்வைக்கும்போது சரியாக அச்சுகளைப் பெயரிடாமை புள்ளிகள் குறையக் காணரமாகும்.

★ (v) பிரிவு வினா 85% இற்கு மேற்பட்ட கடினத்தன்மையைக் காட்டுகின்றது. இப்பிரிவின் மூலம் இலங்கையின் பணச்சந்தையின் அதி உயர் திரவத்தன்மைக்கான காரணமும் அவ் உயர் திரவத் தன்மையைக் குறைக்க மத்திய வங்கி மேற்கொண்டுள்ள வழிமுறைகள் பற்றிக் கேட்கப்பட்டதாகும். பெரும்பாலான அபேட்சகர்களுக்கு இப்பிரச்சினை கடினமாகக் காணப்படுவது குறிப்பிட்ட பிரச்சினைப் பற்றி சரியான அறிவு இன்மையினாலாகும். எனவே இலங்கையின் பணச் சந்தையில் அதி திரவத்தன்மைக்கு அல்லது குறை திரவத்தன்மைக்கு செல்வாக்குச் செலுத்தும் நடைமுறைக் காரணிகளும் அந்நிலைமையின் மத்தியில் மத்திய வங்கி மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய அறிவை இற்றை நிலைப்படுத்தல்வேண்டும். மத்திய வங்கி அறிக்கையில் விசேட குறிப்புக்களை வாசிப்பதற்கு மாணவர் நாடுவாராயின் நடைமுறைத் தகவல்கள் உள்ளடக்கிய இவ்வாறான வினாக்களுக்கு வெற்றிகரமாக பதில் அளிக்கலாம்.

வினா இலக்கம் 7

7. (i) 'தூய பொதுப் பொருள்களையும்', 'மேன்மைப் பொருள்களையும்' வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

(ii) பொருள்களின் உற்பத்தியில் வெளிவாரிச் செலவுகள் காணப்படுகையில் சந்தை முறையானது வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்ய முடியாமற் போவது எவ்வாறு என்பதனை பொருத்தமானதொரு வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) விகிதசம வரி, விருத்திமுறை வரி, ஒடுங்குமுறை வரி என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (03 புள்ளிகள்)

(iv) 'வரியின் மிகைச் சுமை' (excess burden of taxation) என்பதனாற் கருதப்படுவதென்ன ? பொருளொன்றின் உற்பத்தியாளர் மீது அலகு வரியொன்று விதிக்கப்படும்போது ஏற்படும் வரியின் மிகைச் சுமையினை வரைபடமொன்றின் மூலம் காட்டுக. (05 புள்ளிகள்)

(v) "அரசாங்க வருவாயுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பொதுப் படுகடன் நிலை மிகக் கவலைக்கிடமானதாகத் தோன்றுகிறது." இக்கூற்றினை விளக்குக. (03 புள்ளிகள்)

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(07) (i)

- தூய பொதுப் பொருளொன்றின் நுகர்வை கட்டுப்படுத்த முடியாது. அவ்வாறான பொருளொன்றை நிரம்பல் செய்தால் . அப்பொருளிலிருந்து கிடைக்கும் நன்மைகளை நுகர்வோர் மத்தியில் கட்டுப்படுத்த முடியாது. பொதுப் பொருள்களில் காணப்படும் முக்கியமான பண்பு அவை கூட்டாக நுகரப்படுவதாகும். (01 புள்ளி)

- தூயப் பொதுப் பொருளொன்றின் நுகர்வில் போட்டித் தன்மை கிடையாது. ஒரு நபர் மேற்கொள்ளும் நுகர்வு காரணமாக மற்றொரு நபருக்கு அப்பொருளின் மூலம் கிடைக்கும் நன்மையில் குறைவேதும் ஏற்படாது. (01 புள்ளி)

- மேன்மைப்பொருள் என்பதனாற் கருதப்படுவது யாதெனில் ஏதேனும் ஒரு பொருளை அல்லது சேவையை நுகரும் போது அந்நுகர்வின் நன்மையை அப்பொருளை அல்லது சேவையை நுகர்வு செய்த நபருக்கு மட்டுமன்றி வெளியிலுள்ள தரப்பினருக்கும் அனுபவிக்கக் கூடியதாக இருப்பதாகும். அவ்வாறான பொருளொன்றின் நுகர்வின் தனியார் நன்மையை விட சமூகநன்மை கூடுதலாக காணப்படும்.
  மேன்மைப் பொருள்களை சந்தையூடாக நிரம்பல் செய்யும் போது அப்பொருள்கள் குறை நுகர்வுக்கு உட்படக்கூடிய நிலைமை ஏற்படலாம்.
  உதாரணம் : கல்வி, சுகாதார சேவைகள் (02 புள்ளிகள்)

(ii)

- உற்பத்தி செயன்முறையில் வெளிவாரிச் செலவுகள் ஏற்படும் போது வளங்களை வினைத்திறனான விதத்தில் ஒதுக்கீடு செய்வதில் சந்தை முறைமையானது தோல்வியடையக் காரணம் சந்தைகளில் தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் வெளிவாரிச் செலவுகளை உள்ளடக்காத படியினாலாகும்.

- உற்பத்திச் செயன்முறையில் வெளிவாரிச் செலவொன்று ஏற்படும் போது உற்பத்தியின் சமூக செலவு தனியார் செலவை விஞ்சியதாகக் காணப்படும். ஆயினும் சந்தையில் தீர்மானங்கள் எடுக்கப்படுவது தனியார் நன்மை மற்றும் தனியார் செலவு என்பவற்றை மட்டும் கருத்தில் கொள்வதன் மூலமாகும்.

- வெளிவாரிச் செலவுகளைக் கருத்தில் கொள்ளாதவிடத்து உற்பத்தியின் உண்மையான செலவு குறைமதிப்பீட்டிற்கு உட்படும் அதேவேளை, சந்தையில் தீர்மானிக்கப்படும் சமநிலை வெளியீடு சமூகரீதியில் உத்தமமான வெளியீட்டு மட்டத்தை விட உயர்வாக காணப்படும். அறவிடப்படும் விலை மிகக் குறைவாகக் காணப்படும். இதன் போது அருமையான வளங்கள் மிகைப் பயன்பாட்டிற்கு உட்படும். இது வளங்கள் வினைத்திறனற்ற விதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதைக் காட்டும். (03 புள்ளிகள்)

பொருத்தமான வரைப்படம்



- வெளிவாரிச் செலவினைக் கருத்திற் கொள்ளாவிடத்து சந்தையின் சமநிலை வெளியீடு ஞஅ ஆகும். வெளிவாரிச் செலவைக் கருத்திற் கொள்ளுமிடத்து சமூகரீதியில் உத்தமமான வெளியீட்டு மட்டம் ஞள ஆகும். (சரியான வரைப்படத்திற்கு 02 புள்ளிகள்)

(iii) - விகிதசம வரி :
வரி அடிப்படை விரிவாக்கமடையும் போது அறவிடப்படும் வரி வீதம் மாறாதிருக்குமாயின் அது விகித சம வரியாகும். வருமானத்தில் நிலையான ஒரு வீதம் வரியாக அறவிடப்படும். (01 புள்ளி)

- விருத்தி முறைவரி :
வரி அடிப்படை விரிவாக்கமடையும் போது அறவிடப்படும் வரி வீதம் படிப்படியாக அதிகரிக்குமாயின் அது விருத்தி முறை வரியாகும். இதன் போது பொருளாதார ரீதியில் வலுவான நிலையில் உள்ளோர் வலுக்குறைந்த நிலையில் உள்ளோரை விட அதிக சதவீதத்தை வரியாகச் செலுத்துகின்றனர். (01 புள்ளி)

- ஒடுங்கு முறை வரி :
வரி அடிப்படை விரிவாக்கமடையும் போது அறவிடப்படும் வரிவீதம் படிப்படியாக குறைவடைந்து செல்லுமாயின் அது ஒடுங்கு முறை வரியாகும். வருமானம் அதிகரிக்கும் போது வரிவீதம் குறைவடைந்தாலும் வரிச் செலுத்தலின் முழு அளவு அதிகரிக்க இடமுண்டு. (01 புள்ளி)

(iv) - வரியொன்று விதிக்கப்படும் போது சந்தையில், வீட்டுத்துறை மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் தீர்மானமெடுத்தல் செயன்முறை பிறழ்வுகளுக்கு உட்படுவதனால் வரியின் காரணமாக சுமக்க நேரிடும் பணரீதியான வரிச்சுமைக்கு மேலதிகமாக மற்றுமொரு மேலதிக சுமையொன்று பொருளாதாரத்தின் மீது ஏற்படுமாயின் அது வரிஅறவீட்டின் மிகைச் சுமை என அழைக்கப்படும்.

- வரியின் தாக்கம் காரணமாக உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வீட்டுத்துறையினர் மேற்கொள்ளும் உற்பத்தி மற்றும் நுகர்வு பற்றிய தெரிவுகளை மாற்றியமைக்க வேண்டியேற்படும். உதாரணமாக பொருளொன்றின் மீது வரிவிதிக்கப்படும் போது விலை அதிகரிப்பதனால் வீட்டுத்துறையினர் கொள்வனவு செய்யும் அளவும் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் அளவும் குறைவடையலாம், உழைப்பு வருமானங்கள் (சம்பளங்கள்) மீது வரிவிதிக்கப்படும் போது நிரம்பல் செய்யப்படும் உழைப்பின் அளவை மாற்றியமைப்பதற்கான போக்கு காணப்படும்.

- வரிவிதிப்பின் காரணமாக இவ்வாறு தீர்மானமெடுக்கும் செயன்முறை பிறழ்வடைவதனால் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் பொருளாதார மிகையில் ஏற்படும் வீழ்ச்சியின் அளவு மிகைச் சுமையாக காட்டப்படலாம். இது பணரீதியில் ஏற்படும் வரிச்சுமைக்கு மேலதிகமாக ஏற்படும் ஒரு சுமையாகும். (03 புள்ளிகள்)

- வரியின் மிகைச் சுமையினை வரைப்பட ரீதியில் காட்டல்



(சரியான வரைபடத்திற்கு 02 புள்ளிகள்)

(v) - எழுச்சி பெற்றுவரும் நாடுகள் மத்தியில் பொதுப்படு கடன் சுமை அதிகமுள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். பொதுப்படு கடன் சுமையின் பருமனை பெரும்பாலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகவே காட்டுவதுண்டு. வரிச்சுமையின் உண்மை நிலையினை அதன் மூலம் காட்ட முடியாது. உதாரணமாக இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரிச்சுமை பின்வருமாறு அமைந்தது.

2010 - 81.9%
2011 - 78.5%
2012 - 79.2%
2013 - 78.3%

இத்தரவுகளை நோக்கும் போது இலங்கையின் பொதுப்படுகடன் சாதகமான போக்கினைக் கொண்டிருப்பதாக எவரும் இலகுவில் முடிவு செய்யலாம்.

- ஆயினும் உண்மையில் இலங்கை மிக மோசமான விதத்தில் பொதுப் படுகடன் சேவைப் பிரச்சினையால் பீடிக்கப்பட்டுள்ளது. இதன் பாதிப்பின் அளவை சரியாக புரிந்து கொள்ள வேண்டுமாயின் கடன் அளவை மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுவதை விட பொருளாதாரத்தின் கடன் சேவை இயலளவை காட்டும் அரசாங்க வருவாயுடன் ஒப்பிட வேண்டும்.

அரசாங்கத்தின் கடன் அளவை அரசாங்கத்தின் மொத்த வருவாயின் சதவீதமாக காட்டுவோமாயின் அதன் அளவு துரிதமாக அதிகரித்து வருவதைக் காணலாம்.

2011 - 530%
2013 - 597%
2012 - 571%
2014 - 618%

கடன் சேவைக் கொடுப்பனவுகளை அரசாங்க வருவாயின் சதவீதமாகக் காட்டும் போதும் கவலைக்கிடமான நிலையே காணப்படுகிறது. 2011 -92.5% 2012 – 96.8% 2013 - 102.2% ஆகக் காணப்பட்டது. இது மிகவும் மோசமானதொரு நிலைமையாகும். அரசாங்கம் ஏனைய செலவுகளை பூர்த்தி செய்வது ஒரு புறமிருக்க பெற்றக் கடனை மீளச் செலுத்தவும் மீண்டும் கடன் பெறவேண்டிய நிலையில் உள்ளமை தெளிவானதாகும். இலங்கை ஏற்கனவே கடன் பொறிக்குள் சிக்கியுள்ளமையை இது உறுதிப்படுத்துகிறது. இந்நிலையிலிருந்து மீள உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளாவிடின் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாமல் போகும் நெருக்கடியை இலங்கை எதிர் கொள்ள வேண்டி ஏற்படலாம். (03 புள்ளிகள்)

7 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



07 ஆம் வினாவிற்கு அபேட்சகர்களில் ஏறக்குறைய 69% மானோர் விடையளித்துள்ளனர். (வரைபு - 2) இவ்வினாவிற்கான புள்ளிகள் 20 ஆகும்.

அதில் புள்ளி 00 - 05 வகுப்பாயிடையில் 34% வரையாகவும்
புள்ளி 06 - 10 வகுப்பாயிடையில் 32% வரையாகவும்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் 26% வரையாகவும்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் 8% வரையாகவும்
புள்ளிகள் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 5 பிரிவுகள் காணப்படுவதுடன் (iii) பிரிவு இலகுவான வினாவாக உள்ளது. அதன் இலகுதன்மை 69% ஆகும். இலகுதன்மை மிகவும் குறைந்த பிரிவு (v) ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 14% ஆகும். (i), (ii), (iv) பிரிவுகளுள் இலகுதன்மை முறையே 67%, 40%, 31% ஆகும்.

★ (i) பிரிவு 67% இலகுதன்மையைக் காட்டுகின்றது. பெரும்பாலானோரில் தூய பொது பொருள்களையும் மேன்மைப் பொருள்களையும் விளக்குவதற்கு முடிந்துள்ளது. மென்மேலும் இவ் எண்ணகருக்களையும் அதற்குப் பொருத்தமான உதாரணங்களையும் விளக்கக்கூடிய அறிவை வழங்க வேண்டும்.

★ (ii) பிரிவில் காட்டப்படுவது உற்பத்தித் தொழிற்பாட்டில் வெளிவாரிச் செலவுகள் ஏற்படுவதால் வளப்பகிர்வின்போது சந்தைத் தோல்வி எவ்வாறு ஏற்படுவது என்பதாகும். இப்பிரச்சினை தொடர்பாக அபேட்சகர்கள் 60% மானோர் கடினத்தன்மையைக் காட்டுவது உற்பத்தித் தொழிற்பாட்டில் வெளிவாரிச் செலவு காணப்படும்போது சந்தையில் மிகை உற்பத்தி ஏற்பாடு தொடர்பான அறிவையும் அதனை வரைபடத்தில் காட்டும் திறமையும் காணப்படாமையாகும்.

★ (iii) பிரிவின் இலகுதன்மை 69% ஆகும். இப்பிரிவின் மூலம் வரி விகிதக் கட்டமைப்புக்கு ஏற்ப வரி வகையின் வரைவிலக்கணப்படுத்தல் வினவப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில வீதமான அபேட்சகர்கள் இவ் ஆற்றலைக் காட்டவில்லை. அதனால் விருத்தி முறை, ஒடுக்கு முறை, விகிதசம வரிக்கான வரைவிலக்கணப்படுத்தல். உதாரணம் வழங்கல் தொடர்பான திறன்களை விருத்திசெய்தல் வேண்டும்.

★ (iv) பிரிவால் வரி அறவீட்டின் மிகைச் சுமையும் அதனை வரைபடமாகக் காட்டும் முறை பற்றியும் பரீட்சிக்கப்படுகின்றது. இங்கு இலகுதன்மை 31% ஆகும். பெரும்பாலான அபேட்சகர்களுக்கு இப்பிரச்சினை மிகவும் கடினமாகக் காணப்படுவது இதனால் காட்டப்படுகின்றது. அதிக வரிச் சுமை எண்ணக்கருவை விளக்க முடியாமை இதற்கான காரணமாகும். இத்திறன் விருத்தி செய்யக் கூடிய மட்டத்தில் காணப்படுகின்றது.

வரி அறவீட்டின் மிகை சுமை அல்லது அறவீட்டின் வரிச்சுமை என்ற எண்ணக்கருவை விளக்கும்போது மாணவர்கள் வரைபடம் மூலம் இந்த எண்ணக்கருவை முன்வைப்பதற்கு முடிந்தாலும் மிகை வரிச் சுமை எண்ணக்கருவை விளக்குவதற்கு முடியாமல் போயுள்ளது. அதனால் வரியின் மிகை வரிச் சுமையை சரியாக வரைவிலக்கணப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்காக புள்ளியிடல் திட்டத்தில் காணப்பட்டுள்ள விடைகளைக் கற்பதன் மூலம் சாதகமான பதிலைக் கட்டியெழுப்பக்கூடிய ஆற்றலைப் பெறலாம்.

★ கூடிய கடின நிலை இப்பிரிவில் காட்டப்படடும். இப்பிரிவின் கடினத்தன்மை 86% ஆகும். இவ்வினாவில் கேட்கப்படுவது இலங்கையின் அரச கடன், முழு, மற்றும் சார்பு அளவு தொடர்பாக அறிவும், அது பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கதினையும் பற்றிய விளக்கமுமாகும். மாணவர்கள் காட்டியுள்ள ஆர்வம் மகிழ்ச்சிகரமான மட்டத்தில் காணப்படாமையால் அரச கடன் தொடர்பான போக்கும் அதன் எதிர் விளைவுகள் தொடர்பான அறிவை இற்றை நிலைப்படுத்தல் வேண்டும். அரச வருமானம்,கடனின் அளவு பற்றிய தரவுகளை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

வினா இலக்கம் 8

8. (i) சர்வதேச வர்த்தகத்தின் மூலம் நாடுகள் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் எவை ? (04 புள்ளிகள்)

(ii) வர்த்தகப் பாதுகாப்புவாதத்துக்குச் சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள பிரதான பொருளியல் வாதங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) நாடொன்றின் சர்வதேச போட்டித்தன்மையை நிர்ணயிக்கும் காரணிகள் எவை ? (04 புள்ளிகள்)

(iv) கருதுகோள் ரீதியிலான பொருளாதாரமொன்றின் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்குப் பரிமாற்றல்களின் சுருக்கம் பின்வரும் அட்டவணையிற் தரப்பட்டுள்ளது. (சகல இலக்கங்களும் ரூபா மில்லியனில்)

வகை	பெறுகைகள்	செலுத்தல்கள்	வகை	பெறுகைகள்	செலுத்தல்கள்
வணிகப் பொருள்கள்	800	1 200	கடற் போக்குவரத்து	180	150
ஊழியர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்	5	10	வட்டி வருவாய்கள்	-	35
நிதிச் சேவைகள்	25	30	தொழிலாளர் பணவனுப்பல்கள்	285	50
பங்கிலாபங்கள்	10	70	பயணம்	140	100
விமானப் போக்குவரத்து	100	60	தொலைத்தொடர்புகள்	75	30
அரச மாற்றல்கள்	15	-	நாணயமல்லாத் தங்கம்	5	55

மேலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(அ) வர்த்தக நிலுவை (01 புள்ளி)

(ஆ) பொருள்கள் சேவைகள் கணக்கு நிலுவை (01 புள்ளி)

(இ) முதனிலை வருமானக் கணக்கு நிலுவை (01 புள்ளி)

(ஈ) இரண்டாம் நிலை வருமானக் கணக்கு நிலுவை (01 புள்ளி)

(v) மிதக்கும் நாணய மாற்றுவீத முறையின் கீழ் பின்வரும் உள்நாட்டுக் காரணிகள் எவ்வாறு நாணய மாற்றுவீதத்தைப் பாதிக்குமென விளக்குக.

(அ) மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு (02 புள்ளிகள்)

(ஆ) பணவீக்க வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி (02 புள்ளிகள்)

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(08) (i)

- சிறப்புத் தேர்ச்சியடைந்த துறையில் உற்பத்தியை மேற்கொள்ளும் போது வினைத்திறன் அதிகரிக்கும் அதேவேளை அது பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் ஏதுவாகும்.
- சர்வதேச போட்டித் தன்மை மற்றும் குறைந்த செலவில் இறக்குமதி செய்யக் கூடியதாக இருப்பதால் பணவீக்க அழுத்தங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் வெகுவாகக் குறைவடையும்.
- திறந்த பொருளாதாரத்தின் மூலம் தொழில்நுட்பம் வளர்ச்சியடையவும், புத்தாக்கங்கள் ஊக்குவிக்கப்படவும், புதிய கருத்துக்கள், மற்றும் புதிய மனோபாவங்கள் நாட்டில் உள்வாங்கப்படவும் வாய்ப்பேற்படும்.
- ஏற்றுமதி நோக்கிய துறையில் வேலைவாய்ப்பில் உள்ளோர் உயர்ந்த சம்பளங்களையும் வருமானங்களையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பேற்படும்.
- வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது விதிக்கப்படும் வரிகள் மூலம் அரசாங்க வருவாய்கள் அதிகரிக்கும்.
- நாட்டினுள் உற்பத்தி செய்ய முடியாத பண்டங்களை நுகர வழியேற்படும்.
- ஏற்றுமதித்துறை விரிவாக்கம் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்கு உதவியாக இருக்கும்.

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(ii) **பாதுகாப்பு வாதத்திற்கு சார்பான பொருளாதார வாதங்கள்**

- இளநிலைக் கைத்தொழில்களைப் பாதுகாத்தல்
- குவித்தலைத் தடைசெய்தல்
- தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவம் மிக்க உற்பத்தி துறைகளை பாதுகாத்தல்
- தொழில் வாய்ப்புகளைப் பாதுகாத்தல்
- உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்தும் தேவை
- அரசாங்க வருவாயின் ஒரு மூலாதாரமாக இருத்தல்
- சென்மதி நிலுவையை உறுதிப்படுத்தல்
- சுயதேவைப் பூர்த்தியடைந்த தேசியப் பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்பல்

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(iii)

- விளைதிறன்
- பேரினப் பொருளாதார உறுதிப்பாடு
- உட்கட்டமைப்பு வசதிகள்
- ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீதான முதலீடு
- வரிக் கட்டமைப்பு
- நாணய மாற்று வீத உறுதிப்பாடு
- உலக சந்தைக்கு தேவையான மனித முலதனத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறைமை
- வணிகஞ் செய்வதில் காணப்படும் செலவுகள் (ஊழளவ ழுக னுழபைெ டீரளநைெளள)
- நிர்வாக முறையின் தன்மை
- ஊழியச் சந்தையின் நெகிழ்தன்மை
- அரசாங்க நிர்வாகத்தின் வினைத்திறன்
- தனியார் சொத்துரிமைப் பாதுகாப்பு
- சட்ட வாதிக்கம்
- நல்லாட்சி

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(iv) (அ) வர்த்தக நிலுவை = வணிகப் பொருள்கள் + நாணயமல்லாத தங்கம்

= (800 – 1200) + (5 – 55)

= – 400 + (–50)

= – 450 மில்லியன் ரூபாய் (01 புள்ளி)

(ஆ) பொருள்கள் சேவைகள் கணக்கு நிலுவை

பொருள்கள் + சேவைகள் = – 450 + சேவைகள்

சேவைகள் = கடற்போக்குவரத்து + விமானப் போக்குவரத்து + பயணம் + நிதி சேவைகள் + தொலைத் தொடர்புகள்

= [30 + 40 + 40 + (– 5) + 45]

சேவைகள் = 150

பொருள்கள் மற்றும் சேவைகள் கணக்கு நிலுவை

= – 450 + 150

= – 300 மில்லியன் ரூபாய் (01 புள்ளி)

(இ). முதனிலை வருமானக் கணக்கு நிலுவை

ஊழியர்களுக்கான இழப்பீட்டு கொடுப்பனவுகள் + பங்கிலாபங்கள் + வட்டி வருவாய்கள்

= – 5 + (-60) + (– 35)

= – 100 மில்லியன் ரூபாய் (01 புள்ளி)

(ஈ). இரண்டாம் நிலை வருமானக் கணக்கு நிலுவை

அரச மாற்றல்கள் + தொழிலாளர் பணவனுப்பல்கள்

= 15 + 235

= 250 மில்லியன் ரூபாய் (01 புள்ளி)

(v) (அ). மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் போது இறக்குமதி உள்ளடங்கலாக பொருள்கள் சேவைகள் மீது எழுப்பப்படும் மக்களின் கேள்வியும் அதிகரிக்கும். இறக்குமதி மீதான கேள்வி அதிகரிக்கும் போது வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு செய்ய நிரம்பல் செய்யப்படும் உள்நாட்டு நாணயத்தின் அளவு அதிகரிக்கும். வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு செய்ய நிரம்பல் செய்யப்படும் உள்நாட்டு நாணயத்தின் அளவு அதிகரிக்கும் போது வெளிநாட்டு நாணயத்திற்கு சார்பாக உள்நாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடையும். நாணயப் பெறுமதி தேய்வடைதல் என இது கூறப்படும். (02 புள்ளிகள்)

(ஆ). பணவீக்க வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

ஒரு நாட்டின் பணவீக்க வீதம் வீழ்ச்சியடையும் போது அந்நாட்டின் ஏற்றுமதி விலைகள் போட்டித் தன்மை வாய்ந்ததாக மாறும். ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டவர்களின் கேள்வி அதிகரிக்கும் போது உள்நாட்டு நாணய அலகின் மீதான வெளிநாட்டவர்களின் கேள்வி அதிகரிக்கும். இதனால் வெளிநாட்டு நாணயத்திற்கு சார்பாக உள்நாட்டு நாணய அலகின் பெறுமதி அதிகரிக்கும். நாணய மாற்றுவீத பெறுமதி அதிகரிப்பென இது கூறப்படும்.

(02 புள்ளிகள்)

8ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



08 ஆம் வினாவிற்கு விண்ணப்பதாரிகளில் ஏறக்குறைய 31% மானோர் விடையளித்துள்ளனர். (வரைபு - 2) இவ்வினாவிற்கான புள்ளிகள் 20 ஆகும்.

அதில் புள்ளி 00 - 05 வகுப்பாயிடையில் 50% வரையாகவும்
புள்ளி 06 - 10 வகுப்பாயிடையில் 37% வரையாகவும்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் 11% வரையாகவும்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் 2% வரையாகவும்
புள்ளிகள் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 5 பிரிவுகள் காணப்படுவதுடன் பிரிவு (i) மிகவும் இலகுவாக உள்ளது. அங்கு இலகுதன்மை 63% ஆகும். இலகுதன்மை அதிகம் குறைந்த பிரிவு (iv) ஆகும். அத்துடன் (அ), (ஆ), (இ), (ஈ) என அங்கு 4 பிரிவுகள் உள்ளன. அவற்றில் இலகுதன்மை முறையே 10%, 10%, 16%, 20% ஆகும். பிரிவு v இன் 'அ' இனதும் 'ஆ' இனதும் இலகுதன்மை குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. அது முறையே 12%, 20% ஆகும்.

- ★ (i) பிரிவின் இலகுதன்மை 63% ஆகும். குறிப்பிட்ட பிரச்சினையால் கேட்டிருப்பது சர்வதேச வர்த்தகத்தினால் நாடுகள் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் பற்றியதாகும். குறிப்பிட்ட சில மாணவர்களுக்கு இப்பிரச்சினை கஷ்டமாகக் காணப்பட்டமைக்கு சர்வதேச வர்த்தகத்தினால் நாடுகள் பெறும் நன்மைகளும் அதனால் ஏற்படும் தீமைகளும் பற்றிய அறிவு போதியளவு காணப்படாமையினாலாகும்.

- ★ (ii) பிரிவின் மூலம் கேட்கப்படுவது வர்த்தகப் பாதுகாப்பு வாதத்துக்குச் சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள வாதங்கள் பற்றியதாகும். இப்பிரச்சினையின் இலகுதன்மை 55% ஆகும். 45% ஆகக் காணப்படும் கடினத்தன்மைக்கு பாதுகாப்பு வாதத்துக்குச் சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள வாதம் பற்றய போதிய அறிவின்மை காரணமாக அமைந்துள்ளது.

- ★ (iii) பிரிவு சர்வதேச வர்த்தகத்தில் போட்டித்தன்மையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றியதாகும். இவ்விரிவின் கடினத்தன்மை 83% இற்கு காரணமாக அமைவது சர்வதேச வர்த்தகத்தில் போட்டித்தன்மையும் அதற்கான காரணிகளையும் பற்றிய சரியான விளக்கக்கூடிய அறிவின்மையாகும். பிரயோக ரீதியான காரணிகளுடன் சர்வதேச வர்த்தகத்தின் போட்டித்தன்மையை விளக்கக்கூடிய அறிவை விருத்தி செய்தல் வேண்டும்.

- ★ (iv) பிரிவின் மூலம் எதிர்பார்ப்பது கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சென்மதி நிலுவை அட்டவணையின் பல்வேறு கணக்கு மீதிகளைக் கணிப்பீடுகளை மேற்கொள்ளும் திறனை பரீட்சித்தலாகும். இப்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) உபபிரிவுகளின் இலகுதன்மை வரிசை முறையில் 10%, 10%, 16%, 20% என்ற தாழ்ந்த மட்டத்தில் காணப்படுவதன் மூலம் எதிர்பார்த்த திறன் பெரும்பாலான மாணவர்களிடம் காணப்படாமை புலனாகின்றது. எனவே சென்மதி நிலுவையின் உப கணக்கு வகுதிகளை முக்கிமாக நாணயமல்லாத் தங்கம் வர்த்தகக் கணக்கின் ஒரு தொகுதியாகக் கொண்டு அக்கணக்கின் மீதியை தயாரிக்கும் திறனை வளர்க்க வேண்டும்.

- ★ (v) பிரிவின் (அ) மற்றும் (ஆ) உபபிரிவுகளின் மூலம் பல்வெறு காரணிகளின் அடிப்படைடயில் நெகிழும் நாணயமாற்று வீதம் மாற்றமடையும் முறை பற்றி கேட்கப்படுகின்றது. இப்பிரிவுகளின் கடினத்தன்மை முறையே 88%, 80% ஆக உயர் மட்டத்தில் காணப்படுவதன் மூலம் மேல் கற்றல் விளைவு பற்றிய மாணவர்களிடம் சரியான அறிவு காணப்படாமை புலப்படுகின்றது. எனவே கொடுக்கப்பட்ட காரணிகள் மாற்றமடையும்போது நெகிழும் நாணயமாற்று வீதம் எவ்வாறு மாற்றமடையும் என்பதை விளக்கும் திறனை மாணவர்களிடையே

வினா இலக்கம் 9

9. (i) அபிவிருத்தியின் ஓர் அளவை என்ற வகையில் தலைக்குரிய வருமானம் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது ? (04 புள்ளிகள்)

(ii) உலக வங்கியானது நாடுகளை அவற்றின் தலைக்குரிய வருமான மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு வகைப்படுத்துகிறது ? (04 புள்ளிகள்)

(iii) பொருளாதார வளர்ச்சியும் பேண்தகு அபிவிருத்தியும் ஒன்றோடொன்று பொருந்தாத தன்மை கொண்டவையா ? உமது விடையை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) புத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் இலங்கை எந்தத் துறைகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கண்டுள்ளது ? (04 புள்ளிகள்)

(v) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வேலையின்மை வீதத்தைக் குறைவடையச் செய்வதில் பங்களிப்புச் செய்துள்ள முக்கிய காரணிகள் யாவை ? (04 புள்ளிகள்)

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(09) (i) அபிவிருத்தியின் ஓர் அளவையென்ற வகையில் தலைக்குரிய வருமானத்தின் முக்கியத்துவம்.

- தலைக்குரிய வருமானம் நாடொன்றின் பௌதீக ரீதியிலான பொருள்கள் சேவைகளின் கிடைப்பனவைக் காட்டும் ஒரு குறிகாட்டியாகும் அபிவிருத்தியுடன் தொடர்புடைய தரத்திலேற்படும் பண்புசார் மாற்றங்களை அது பிரதிபலிப்பதில்லை.

- தலைக்குரிய வருமானங்கள் நாடொன்றின் வருமானப் பரம்பலின் தன்மையை சரியாகக் காட்டுவதில்லை தலைக்குரிய வருமானம் சமமாகக் காணப்படும் இரு நாடுகளில் வருமானப்பரம்பல் ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்டதாக அமைந்திருக்கலாம்.

- தலைக்குரிய வருமானம் அபிவிருத்தியுடன் தொடர்புடைய பேண்தகு அபிவிருத்தி பற்றிய அம்சங்களை முற்றிலும் கவனத்திற் கொள்வதில்லை, சூழல் மாசடைதல் இயற்கை மூலதனத் தேய்வு பற்றிய தகவல்களை தலைக்குரிய வருமானம் பற்றிய தரவுகளிலிருந்து பெறமுடியாது.

- சுதந்திரம், சுகாதாரம், மனித உரிமை போன்ற வருமானம் சாராத அபிவிருத்தியின் ஏனைய பண்புகள் குறித்து தலைகுரிய வருமானம் கவனஞ் செலுத்துவதில்லை.

- முறைசாரா துறையின் உற்பத்தி பெறுமதிகள் சரியாகப் பிரதிபலிக்காத படியினால் நாட்டின் உற்பத்தி மட்டமும் கூட குறை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கலாம்.

- சர்வதேச ஒப்பீட்டின் பொருட்டு தலைக்குரிய வருமானத்தைப் பயன்படுத்தும்போது அமெரிக்க டொலர்களில் அது வெளிப்படுத்தப்படுகிறது. இதன் பொருட்டு நாடுகளின் பெயரளவு நாணய மாற்று வீதம் பயன்படுத்தப்படுகிறது. பெயரளவு நாணயமாற்று வீதம் நாடுகளிடையே நிலவும் பணவீக்க வேறுபாடுகளை சரியாகப் பிரதிபலிக்காத காரணத்தினால் நாடுகளின் வாழ்க்கைத்தர வேறுபாடுகளை இனங்காண முடியாதுள்ளது.

- அபிவிருத்தியுடன் தொடர்புடைய வறுமை , வேலையின்மை போன்ற சமூக பொருளாதார மாறிகளின் நடத்தைகளை தலைக்குரிய வருமானம் பற்றிய தரவுகள் பிரதிபலிப்பதில்லை.

- தலைக்குரிய வருமானம் பற்றிய பல்வேறு விமர்சனங்கள் மற்றும் குறைபாடுகள் இருந்தபோதிலும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை அளவிட இன்றும் பெருமளவில் அது பயன்படுத்தப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியாகிய பொருளாதார வளர்ச்சி வீதமானது நாடொன்றின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமானதொரு மாறியாகும். அபிவிருத்தியுடன் தொடர்புடைய எழுத்தறிவு, சுகாதார வசதிகள், கல்வி போன்ற முக்கியமான மாறிகள் தலைக்குரிய வருமான மட்டத்துடன் தொடர்புபட்டுள்ளன.

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(ii)
- குறைந்த வருமானம் பெறும் நாடுகள்
- கீழ்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடுகள்
- மேல்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடுகள்
- உயர் வருமானம் பெறும் நாடுகள்

(ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளி வீதம் 04 புள்ளிகள்)

(iii)
- பொருளாதார வளர்ச்சியின் காரணமாக வருமான மட்டம் அதிகரிப்பதனாலும் பௌதீக வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உயர் வருமானமட்டமொன்று அத்தியாவசியமானதென்பதாலும் பொருளாதார வளர்ச்சியானது பேண்தகு அபிவிருத்திக்கு அத்தியாவசியமானதொரு காரணியாகக் கொள்ளப்படுகிறது.

- எவ்வாறாயினும் பொருளாதார வளர்ச்சிச் செயன் முறையின் காரணமாக பொருளாதாரத்தின் அருமையான வளங்களின் பயன்பாடு துரிதமாக அதிகரிக்கவும் இயற்கை வளங்கள் தேய்வடையவும் சமூக ஏற்றத் தாழ்வுகள் ஏற்படவும் கூடும். நிகழ்காலத்தில் வருமான மட்டம் துரிதமாக அதிகரிப்பது எதிர் கால வருமானச் சாத்தியங்கள் குறைவடைவதற்கும் காரணமாகலாம்.

- பொருளாதார வளர்ச்சிக்கும் வேண்தகு அபிவிருத்திக்கும் இடையில் முரண்பாட்டினை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் காணமுடியாது. பொருளாதார வளர்ச்சியானது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சூழல் பாதிப்புக்கு இட்டுக் செல்வதில்லை, பொருளாதார வளர்ச்சிச் செயன்முறையின் ஆரம்பக் கட்டங்களில் சூழல் பாதிப்புக்கள் ஏற்பட இடமுண்டாயினும், தலைக்குரிய வருமானம் துரிதமாக அதிகரிக்கும் போது இந்நிலையினைக் காணமுடியாது. மாறாக சுற்றாடலின் தர அதிகரிப்புக்கு அது இட்டுச் செல்லும்.

- சூழல் பாதிப்பானது பெரும்பாலும் சனத்தொகையுடன் தொடர்பு பட்டுள்ளது. ஆனால் சனத்தொகையானது பொருளாதார வளர்ச்சியுடன் எதிர்க்கணிய ரீதியில் தொடர்புபட்டுள்ளது. இதன்படி உயர் பொருளாதார வளர்ச்சியானது சூழலுக்கு சிநேகபூர்வமானது எனக்கருதலாம்.

- மேலும் பொருளாதார வளர்ச்சி செயன்முறையின் காரணமாக சமூகத்தின் வருமான மட்டம் அதிகரிப்பதாலும் நபர்களின் அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதாலும் சமூகத்தின் விழுமியங்கள் மதிப்பீடுகள் மற்றும் எண்ணங்கள் மாற்றமடையலாம். சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் சுற்றுச் சூழற் பிரச்சினைகள் தொடர்பில் அதிக கவனஞ் செலுத்தப்படும். சூழற் சிநேகபூர்வமான பண்டங்களின் நுகர்வுக்கு மக்கள் மென்மேலும் பழக்கப்படுவர். மேலும் சூழலுக்கு சிநேகபூர்வமான உற்பத்தி நுட்ப முறைகளும் பயன்படுத்தப்படும்.

- பொருளாதார வளர்ச்சியுடன் வருமான மட்டமும் அதிகரிக்கும் போது, தொழில் நுட்பம், ஆய்வு மற்றும் அபிவிருத்தி போன்ற துறைகளில் அதிகளவு முதலீடுகள் மேற்கொள்ளப்படும். தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாக மீளுருவாக்க முடியாத வளங்களின் பயன்பாட்டைக் கட்டுப் படுத்தி, சுற்றாடலின் மீது ஏற்படும் பாதிப்புக்களை மிகவும் முறைந்த மட்டத்தில் வைத்திருக்க முடியும்.

(ஏதேனும் 04 விடங்களுக்கு 04 புள்ளிகள்)

(iv)
- 2015 ஆண்டுக்கு முன் வருமான வறுமையை அரைவாசியாகக் குறைத்தல்
  - சனத்தொகையில் வறியவர்களின் சதவீதத்தை குறைத்தல்
  - வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் சதவீதத்தை குறைத்தல்.
- 99.7% ஆகவுள்ள ஆரம்பக்கல்வியில் பிரவேசிக்கும் சதவீதத்தை 100% வரை அதிகரித்தல்
- முதலாம் வகுப்பில் பிரவேசிக்கும் மாணவர்களில் 5ஆம் ஆண்டு வரையில் கல்விகற்கும் மாணவர் சதவீதத்தை 100% ஆக அதிகரித்தல்.
- 15 – 24 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருவாலாரினதும் எழுத்தறிவினை 100 % வரை அதிகரித்தல்.
- முதனிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை கல்வியில் ஈடுபடும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பெண் பிள்ளைகளின் சதவீதங்களை 100% வரை அதிகரித்தல்.
- குழந்தை மரணங்களின் எண்ணிக்கையை குறைத்தல்

- 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மரண சதவீதத்தை குறைத்தல்
- சிசு மரண வீதத்தை குறைத்தல்
- சின்னம்மை நோய்த்தடுப்பூசி பெற்ற 1 வயதாகும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- தாய் சுகாதார நிலையினை மேம்படுத்தல்
- தாய் மரணவீதத்தை குறைத்தல்
- சுகாதார சேவை உதவியாளரின் மேற்பார்வையின் கீழ் இடம் பெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை 100% ஆக அதிகரித்தல்.
- மலேரியா நோய்த்தாக்கத்தினால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக் கையை பூச்சியமாக்குதல் சயரோகத்தினால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையை குறைத்தல்.

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

(v)
- சார்பளவில் உயர் பொருளாதார வளர்ச்சி வீதத்தைப் பேணியமை
- சேவைத்துறையில் ஏற்பட்ட துரிதமான விரிவாக்கம்
- கட்டுமானக் கைத்தொழிற்துறையின் துரித வளர்ச்சி
- இராணுவ சேவைக்கும் அரசாங்க சேவைக்கும் ஆட்சேர்ப்புக்கள் அதிகரித்தமை
- வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின் பொருட்டு ஊழியர் குடியகல்வு அதிகரித்தமை.
- சுயதொழில் வாய்ப்புக்களை ஊக்குவிக்கும் பொருட்டு பல்வேறு கடன் வசதிகளை அறிமுகப்படுத்தியமை.

(ஏதேனும் 04 விடயங்களுக்கு 04 புள்ளிகள்)

9 ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



09 ஆம் வினாவிற்கு விண்ணப்பதாரிகளில் சுமார் 21% வரை விடையளித்துள்ளனர். (வரைபு - 2) இவ்வினாவிற்கான புள்ளிகள் 20 ஆகும்.

அதில் புள்ளி 00 - 05 வகுப்பாயிடையில் 25% வரையாகவும்
புள்ளி 06 - 10 வகுப்பாயிடையில் 30% வரையாகவும்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் 31% வரையாகவும்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் 15% வரையாகவும்
புள்ளிகள் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 5 பிரிவுகள் உள்ளடங்கியுள்ளதுடன் (ii) உம் (iv) உம் ஒப்பீட்டு ரீதியில் இலகுவான வினாக்களாகும். எனினும் அதன் இலகுதன்மை 41% ஆகும். இலகுதன்மை மிகவும் குறைந்த பிரிவு (i) ஆகக் காண்படுவதுடன் அதன் இலகுதன்மை 15% வரை மொத்தமாக நோக்கின் இவ்வினா விண்ணப்பதாரிகளில் குறைந்த அடைவு மட்டத்தைக் காட்டிய வினாவாகும்.

III ஆம் V ஆம் பிரிவுகள் குறைந்த இலகுதன்மையுடைய பிரிவுகளாகும்.

- ⋆ (i) பிரிவின் இலகுதன்மை 15% என்ற தாழ்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இப்பிரச்சினையைத் தேர்ந்தெடுக்க விண்ணப்பதாரிகளுக்கு மிகவும் கஷ்டமாக அமைந்ததற்கு தலைக்குரிய வருமானம் அபிவிருத்தியை அளவிடும் ஒரு நியதியென்பதை கருதும் ஆற்றலின்மையாகும். அது தொடர்பான அறிவு விருத்தி செய்தல் வேவ்டும்.

- ⋆ (ii) பிரிவின் இலகுதன்மை 41% ஆகும். உலக வங்கி ஒவ்வொரு நாடுகளையும் அவற்றின் கலைக்குரிய வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகளை வகைப்படுத்தியுள்ள விதம் தொடர்பாக சேட்கப்பட்டுள்ள பிரச்சினையை மாணவர்களுக்கு கடினத்தன்மை ஏற்படுவதற்கான காரணம் பல்வேறு நியதிகளின் அடிப்படையில் நாடுகளை வகைப்படுத்தக்கூடிய அறிவை இற்றை நிலைப்படுத்தாமையாகும்.

- ⋆ (iii) பிரிவிற்கு அடிப்படையாக அமைவது பொருளாதார வளர்ச்சியும் பேண்தகு அபிவிருத்தியும் என்ற எண்ணக்கருக்களை விளங்கி அவற்றுக்கிடையிலான தொடர்பை முன்வைத்தல் தொடர்பானதாகும். இப்பிவிரின் இலகுதன்மை 27% ஆகக் காணப்படுவதன் மூலம் விண்ணப்பதாரிகளில் பெரும்பாலானோருக்கு இது தொடர்பான அறிவும் பகுப்பாய்வு ஆற்றலும் போதியளவில் காணப்படவில்லை என்பது புலனாகின்றது.

- ⋆ (iv) பிரிவின் இலகுதன்மை 41% ஆகும். இப்பிரிவின் மூலம் புத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுவதுடன் அவற்றுள் இலங்கை எந்தத் துறைகளில் முன்னேற்றம் ஏற்படுத்தலாம் எனக் காட்டுவதாகும். பெரும்பாலான விண்ணப்பதாரிகள் குறித்த கற்றல் விளைவை போதியளவு பூர்த்தி செய்தில்லை. எனவே புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளை பெயரிடவும், இலங்கை தொடர்பாக அதன் முன்னேற்றத்தை விளக்கவும் அறவிவை வழங்க வேண்டும்.

- ⋆ (v) பிரிவு இலங்கையின் வேலையின்மை வீதம் குறைவடையச் செய்வதில் பங்களிப்புச் செய்துள்ள காரணிகள் பற்றி கேட்கப்பட்டதாகும். பிரச்சினையில் கடினத்தன்மை 67% ஆகக் காணப்படுவதன் மூலம் குறித்த

வினா இலக்கம் 10

10. (i) "அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் மூலாதாரங்கள் பெருமளவில் வர்த்தகம் சாராத உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் (domestic non-tradable economic activities) செல்வாக்குக்கு உட்பட்டிருந்தன." இந்நடவடிக்கைகளை இனங்காண்க. (05 புள்ளிகள்)

(ii) "அண்மைய தசாப்தங்களில் இலங்கையில் பெண்கள் தொழிற்படை பங்குபற்றல் வீதம் சர்பளவில் கீழ்மட்டத்தில் தேங்கிய நிலையிலுள்ளது." தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றல் வீதம் குறைவாக இருப்பதற்கான காரணங்கள் எவை ? (05 புள்ளிகள்)

(iii) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரி வருவாய்கள் குறைவடைந்து வருவதற்கான காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) நடுத்தரகால அடிப்படையிலும் நீண்டகால அடிப்படையிலும் உயர் வளர்ச்சி வீதத்தை அடைவதற்கான தடைகளாக இலங்கைப் பொருளாதாரத்தில் கர்ணக்கூடிய அடிப்படைப் பலவீனங்களை இனங்காண்க. (05 புள்ளிகள்)

எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

(10) (i) வர்த்தகம் சாரா வெளிநாட்டு நடவடிக்கைகள்

- கட்டுமானம் (உட்கட்டமைப்பு அபிவிருத்தி)
- போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு
- உள்நாட்டு வர்த்தகம் (மொத்த சில்லறை வர்த்தகம்)
- ஹோட்டல்களும், உணவகங்களும்
- அரச பொதுநிர்வாகம் (ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி மொத்தம் 5 புள்ளிகள்)

(ii)
- குடும்பப் பொறுப்புக்களை ஏற்கும் நோக்கில் பெண்கள் தொழிற்படையிலிருந்து விலகியமை (குழந்தைகளையும் முதியோரையும் பராமரித்தற்பொருட்டு)
- வினைத்திறனான குழந்தைப் பராமரிப்பு முறையொன்று இல்லாமை
- பாதுகாப்பான தங்குமிட வசதியின்மை
- வேலைத் தளத்திற்கு சென்று வருவதற்கு போக்குவரத்து வசதியின்மை
- வேலை நேரத்துடன் ஒத்து போவதில் ஏற்படும் வசதியீனங்கள்.
- தற்காலிகமாக வேலையிலிருந்து விலகிய பின்னர் மீண்டும் ஒரு தொழிலைப் பெறமுடியாமை
- பெண்களுக்கான வேலை வாய்ப்புக்கள் குறிப்பிட்ட சில துறைகளில் மாத்திரம் வரையறுக்கப்பட்டமை. குறிப்பாக தனியார் துறையில் ஆண் பெண்களின் சமூக தராதரங்களை அடிப்படையாக கொண்டு சம்பளவேறுபாடுகள் நிலவுகின்றது. தனியார் துறையில் இச்சம்பள இடைவெளி 2009 ஆண்டில் 35மூ ஆக இருந்துள்ளது
- பாரம்பரியம் சம்பிரதாயங்கள் சார்ந்த மனப்போக்குகள் - ஆண்கள் உழைக்கப் பிறந்தவர்கள் பெண்கள் குடும்பப் பொறுப்பைச் சுமக்கப் பிறந்தவர்கள் என்ற மனோபாவம்

(ஏதேனும் 5 விடங்களுக்கு 05 புள்ளிகள்)

(iii)
- வெளிநாட்டு வர்த்தகத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வைகள் பொருளாதாரத் தாராளமயமாக்கலைத் தொடர்ந்து நீக்கப்பட்டமை.
- உலக வர்த்தக நிறுவனத்தின் ஓர் அங்கத்தவரென்ற வகையில் தீர்வைக் கட்டுப்பாடுகள் பல தளர்த்தப்பட்டமை.
- வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவரும் பொருட்டு வரி விடுதலைகளையும் வரிச்சலுகைகளையும் வழங்கியமை
- வரி அடித்தளத்தை விரிவாக்கம் செய்யாமல் வரி வீதங்களை குறைத்தமை
- அரசாங்கத்தின் குறுங்கால நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வரிக்கட்டமைப்பில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் காரணமாக வரிக்கட்டமைப்பின் நிச்சயத்தன்மை பாதிக்கப்படுவதுடன் சிக்கல் தன்மை வாய்ந்ததாக மாறுகின்றமை.
- பெரியதொரு முறைச்சாராத் துறை இருப்பதன் காரணமாக வரி ஏய்ப்பு மற்றும் வரிப்புறக்கணிப்பு என்பவற்றுக்கான வாய்ப்பு அதிகமாகும்.
- வரி முகாமைத்துவத்தில் நிலவும் வினைத்திறனின்மை
- வரி செலுத்தலுக்கு எதிரான பொது மக்கள் மற்றும் கம்பனிகள் மத்தியில் காணப்படும் மனோபாவங்கள்.
- இணையத்தின் ஊடான பொருள் கொள்வனவு அதிகரித்துள்ளமை

(ஏதேனும் 5 விடயங்களுக்கு 05 புள்ளிகள்)

(iv)
- அரசாங்கக் கடன் சுமை உயர் மட்டத்தில் உள்ளமை
- பாதீட்டுக் குறைநிலை உயர் மட்டத்தில் உள்ளமை
- வர்த்தக நிலுவைக் குறைநிலை விரிவடைந்து செல்கின்றமை
- அரசாங்க வருவாய்களின் மந்த கதியிலான வளர்ச்சி
- உள்நாட்டுச் சேமிப்புக்கள் குறைந்த மட்டத்தில் உள்ளமை
- பொருளாதார கொள்கைகள் பற்றிய நிச்சயமற்ற தன்மை
- மனித வள அபிவிருத்திக்கு வாய்ப்பான கல்விக் கொள்கையொன்று காணப்படாமை
- அரசாங்க நிர்வாக கட்டமைப்பு வினைத்திறனற்றுக் காணப்படல்
- நல்லாட்சி நிலவாமை (ஏதேனும் 5 விடயங்களுக்கு 05 புள்ளிகள்)

10ஆம் வினாவிற்கு விடையளிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முழுமையான அவதானிப்புகளும் முடிவுகளும் ஆலோசனைகளும்



அபேட்சகர்களில் ஏறக்குறைய 18% மானோர் விடையளித்துள்ளனர். (வரைபு - 2) இவ்வினாவிற்கான புள்ளிகள் 20 ஆகும்.

அதில்
புள்ளி 00 - 05 வகுப்பாயிடையில் 69% வரையாகவும்
புள்ளி 06 - 10 வகுப்பாயிடையில் 26% வரையாகவும்
புள்ளி 11 - 15 வகுப்பாயிடையில் 4% வரையாகவும்
புள்ளி 16 - 20 வகுப்பாயிடையில் 1% வரையாகவும்
புள்ளிகள் பெற்றுள்ளனர்.



இவ்வினாவில் 4 பிரிவுகள் உள்ளடங்கியுள்ளதுடன் (i) ஆம் பிரிவு மிகவும் கடினதன்மையுள்ளதாகும். அதன் இலகுதன்மை 8% ஆகும். இலகுதன்மை மிகவும் கூடிய பிரிவு (ii) ஆகக் காண்படுவதுடன் அதன் இலகுதன்மை 32% ஆகும். (iii) ஆம் (iv) ஆம் பகுதிகள் குறைந்த இலகுதன்மையாவதுடன் அவற்றின் இலகுதன்மை முறையே 26%, 24% ஆகும். மொத்தமாக நோக்கின் இவ்வினா விண்ணப்பதாரிகளில் குறைந்த அடைவு மட்டத்தைக் காட்டிய வினாவாகும்.

- ★ I ஆம் பிரிவு இவ்வினாவின் மிகவும் கூடிய கடினத்தன்மையுள்ள பிரிவாகும். அது 92% என்ற உயர் பெறுமதி கொண்டது. இப்பிரச்சினையின் மூலம் இலங்கைப் பொருளாதார வளர்ச்சியின் மூலாதாரங்களும் அண்மைய ஆண்டுகளில் வளர்ச்சியில் பெருமளவில் பங்களிப்புச் செய்த துறையாக வர்த்தகம் சாராத உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளும் பொருளாதார வளர்ச்சியில் அதன் பங்களிப்பும் பற்றிய அறிவை விருத்தி செய்தல் வேண்டும்.

- ★ II ஆம் பிரிவின் இலகுதன்மை 32% ஆகும். குறிப்பிட்ட பிரச்சினையில் இலங்கையில் பெண்கள் தொழிற்படை பங்குபற்றல் வீதம் கீழ் மட்டத்தில் காணப்படுவதற்கான காரணங்களைப் பற்றியதாகும். அக்காரணிகள் பற்றி பெரும்பாலான மாணவர்கள் அறிந்திருக்காமையால் இப்பிரச்சினையின் கடினத்தன்மை உயர் மட்டத்தை அடைந்துள்ளது.

- ★ அண்மைய ஆண்டுகளில் இலங்கையில் வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாகக் குறைவடைந்து வருவதற்கான காரணிகளை III ஆவது பிரிவின் மூலம் கேட்கப்படுகின்றது. இப்பிரிவின் கடினத்தன்மை 74% ஆகும் என்ற உயர் மட்டத்தில் காணப்படுவதன் காரணமாக இலங்கையின் அரச வருமானக் கட்டமைப்பும் அவற்றின் இற்றைநிலைப்படுத்தப்பட்ட மாற்றமும் அதற்கான காரணமும் பற்றிப் போதியளவு அறிவு காணப்படாமை.

- ★ IV பிரிவின் இலகுதன்மை 24% ஆகும். அப்பிரிவின் மூலம் நடத்தர, நீண்டகால உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு தடைகளாக இலங்கைப் பொருளாதாரத்தில் காணக்கூடிய அடிப்படைப் பலவீனங்களை இனங்காண்பதாகும். பெரும்பாலான விண்ணப்பதாரிகள் சரியான விடையை அளிக்கத் தவறியுள்ளதால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி விகிதம் உயர்வடைவதற்குத் தடைகள் பற்றிய அறிவினை மாணவர்களிடையே வளரக்க வேண்டும்.

  இவ்வினாவுக்கு அளிக்கப்பட்டுள்ள விடை தொடர்பாக மாணவர்களின் மேலதிக வாசிப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவது புலனாகின்றது. பொதுவான தகவல்களின் படி இத்தலைப்பைக் கற்பதற்கு மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை என்பதும் காரணமாகும். அதே போல் மாணவர்கள் மத்திய வங்கி ஆண்டறிக்கையை பயன்படுத்துவதும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை மற்றொரு காரணமாகும். இலங்கைப் பொருளாதாரம் தொடர்பான தற்காலத் தகவல்களைத் திரட்டுவதற்கு மாணவர்கள் இதைவிட முயற்சி செய்தல் வேண்டும்.

2.2.3 வினாப்பத்திரம் II இற்கு விடையளித்தல் தொடர்பான முழு அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் ஆலோசனைகள்

இம் மதிப்பீட்டறிக்கையைத் தயாரிக்கும்போது பயன்படத்தப்பட்ட தகவல்களை ஒழுங்கமைத்தலில், II ஆம் வினாத்தாளின் ஒவ்வொரு வினாக்களையும் தெரிவு செய்த சதவீதமும் இலகுதன்மையும் பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளது.



வினா இலக்கம்	1	2	3	4	5	6	7	8	9	10
தெரிவு செய்தோர் வீதம்	97	93	64	22	29	83	69	31	21	18
இலகுதன்மை %	51	52	60	40	49	37	45	36	32	23

இவ் II ஆம் வினாத்தாள் "அ", "ஆ" என இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. இலக்கம் 1 இலிருந்து 5 வரையான வினாக்கள் "அ" பகுதிக்கும் 6 தொடக்கம் 10 வரையான வினாக்கள் "ஆ" பகுதிக்கும் உரித்தாகும். அபேட்சகர்கள் "அ" பகுதியிலிருந்து குறைந்தது இரு வினாக்களையும் "ஆ" பகுதியிலிருந்து குறைந்தது இரண்டு வினாக்களுமாக தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

"அ" பகுதியின் ஐந்து வினாக்களுள் கூடுதலாக தெரிவு செய்யப்பட்ட வினா 1 , 2 ஆகக் காணப்படுவதுடன் "ஆ" பகுதியில் உள்ள ஐந்து வினாக்களும் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்ட வினாக்கள் 6 உம் 7 உம் ஆகும். அவை தெரிவு செய்யப்பட்ட சதவீதம் முறையே 97%, 93%, 83% , 69% ஆகும். அதற்கடுத்த கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டது 3 ஆம் வினாவாகும். மாற்று வினாக்கள் ஆறிலும் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்ட வினாக்களுக்கு விண்ணப்பதாரிகளில் அரைவாசிக்கு மேலானோர் 69% விடையளித்துள்ளனர். பாடத்திட்த்தில் இவ்வினாக்களுக்கு அடிப்படையான தலைப்பும் பாடப்பரப்பும், கற்றல்-கற்பித்தல் தொழிற்பாடுகளில் கூடிய கவனத்திற்கு உட்பட்ட மாணவர்களிடையே மிகவும் பிரபல்யமானவையாகும். அதனால் அவ்வினாக்களின் இலகுதன்மை சார்பளவில் கூடிய பெறுமதியைப் பெறும். வினாக்களைத் தெரிவுசெய்யும் முறை ஏறுவரிசைப்படி முதல் காணப்படும் வினாக்களில் ஒழுங்குவரிசைப்படி இலக்கம் 1, 2, 7, 6 உம் 3 உம் ஆகும். எனினும் இலகுதன்மையில் அவ்வொழுங்கு முறையில் முதலில் காணப்படும் வினாக்கள் முறையே 2, 7, 3, 5 மற்றும் 4 ஆகும். இலக்கம் 1 உம் 6 உம் கூடுதலாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் அவற்றுக்கு அளிக்கப்பட்ட விடைகள் அவ்வளவு தூரம் திருப்திகரமான மட்டத்தில் காண்பபடாமையால் கூடிய புள்ளிகளைப் பெற முடியாமல் போயுள்ளமையும் இத்தகவல்களின் மூலம் புலப்படுகின்றது.

எனவே மாணவர்களின் கூடிய கவனத்தை ஈர்க்கக் கூடிய இவ்வாறான வினாக்களுக்கு கூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளின் போது மாணவர்களுக்கு வழிகாட்டுவது சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு பேருதவியாக அமையும்.

கூடிய இலகுதன்மை காணப்படும் 1 ஆம் வினாவினதும் இலகுதன்மை 51% ஆக வரையறுக்கப்பட்டுள்ளமை பொருளியல் பாடத்தின் முன்னேற்றத்தை எதிர்பார்ப்போரின் கவனத்தில் எடுக்கக் கூடிய ஒரு காரணியாகும். சுய விருப்பத்தின்படி வினாக்களுக்கு விடையளிக்கும் ஒருவருக்கு ஒரு பொதுவான வினாவுக்குரிய முழுப்புள்ளியிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தமது விடைகளை சரியாக விடயப்பரப்புடன் ஒழுங்கமைத்து முன்வைப்பதற்கு வழிகாட்ட வேண்டும்.

குறைவாகத் தெரிவு செய்யப்பட்ட வினா 10 ஆகக் காணப்படுவதுடன் அதன் இலகுதன்மை 23% என்ற குறைந்த பெறுமதிக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. அதற்கு அடிப்படையான காரணி தொடர்பான வகுப்பறை கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளில் போதியளவு கவனத்தைச் செலுத்தாமை புலப்படுகின்றது.

II ஆம் வினாத்தாளில் ஒவ்வொரு வினாக்களையும் கவனத்தில் எடுக்கும் போது இலகுவான வினாவின் இலகுதன்மை 60% இற்கு வரையறுக்கப்பட்டுள்ளதுடன் வினா 1, 2 , 3 தவிர ஏனைய ஏழு வினாக்களினதும் இலகுதன்மை 50% ஐ விட குறைவாக உள்ளமையும் இப்பாடம் தொடர்பான சகல துறையினரினதும் கவனத்தை ஈரக்க வேண்டிய காரணியாகும். அதேபோல் II ஆம் வினாத்தாளில் மொத்த இலகுதன்மை 42.5% வரை வரையறுக்கப்பட்டுள்ளது. இத்தகவல்களின் மூலம் புலப்படுவது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் கண்டாய்வுப் பரீட்சைகளில் ஈடுபடுத்தவும் இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட பரிகாரக் கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் உடனடியாகச் செயற்டுத்துவதும் முக்கிய தேவையுமாகும்.

பகுதி III

3.0 விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

3.1. விடையளித்தலின்போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்

பொதுவான அறிவுறுத்தல்கள்

* வினாப்பத்திரத்திலுள்ள பிரதான அறிவுறுத்தல்களை நன்றாக வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு பகுதியிலுமிருந்து எத்தனை வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும், எந்த வினா கட்டாயமானது, எவ்வளவு காலம் வழங்கப்பட்டுள்ளது, போன்றன பற்றியும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதுடன் வினாக்களை நன்கு வாசித்து சரியான தெளிவைப் பெற்று வினாக்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். ஒரே வினா இரு பிரிவுகளாக ஒன்றாகக் எழுதிக் காணப்படும் சந்தர்பபத்தில் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அவ்விரு பிரிவுகளுக்கும் விடையளிப்பதில் நீங்கள் அவதானத்தைச் செலுத்தல் வேண்டும்.

* வினாப் பத்திரம் I இன் வினாக்களுக:கு விடையளிக்கும்போது மிகச் சரியான ஒரு விடையை மட்டுமே தெரிவுசெய்ய வேண்டும். அத்தோடு தெளிவான ஒரு புள்ளடியினை மாத்திரம் விடைத்தாளில் இடுதல் வேண்டும்.

* வினாப்பத்திரம் II இன் (அ) மற்றும் (ஆ) பகுதிகளின் வினாக்களுக்கு விடையளிக்கும்போது எல்லா பிரதான வினாக்களையும் புதிய பக்கத்தில் எழுதத் தொடங்க வேண்டும்.

* விடைகள் சரியானதும் தெளிவானதுமான கையெழுத்தில் எழுதப்படல் வேண்டும்.

* பரீட்சார்த்திகள் விடைத்தாளின் எல்லாப் பக்கங்களிலும் உரிய இடங்களில் தமது சுட்டெண்ணை எழுதுதல் வேண்டும்.

* வினா இலக்கம், உபபிரிவுகளின் இலக்கங்கள் சரியாக எழுதப்பட வேண்டும்.

* சரியான சுருக்க விடையளிக்கத் தேவையான சந்தர்ப்பத்தில் விரிவாக விடையளிப்பதை தவிர்ப்பதோடு, விரிவாக விடையளிக்கத் தேவையான சந்தர்ப்பத்தில் சுருக்கமாக விடையளித்தலையும் தவிர்த்தல் வேண்டும்.

* வினாவில் கேட்கப்பட்டுள்ளவாறு விடைகள் தர்க்கரீதியாகவும், பகுப்பாய்வு முறையிலும் காரணிகளை முன்வைத்தல் வேண்டும்.

* விடையெழுதும்போது சிவப்பு, பச்சை நிற மை பேனாக்களை பாவித்தலைத் தவிர்க்கவும்.

* விடைக்குரிய புள்ளிகளின் அளவு, நேரம் என்பவற்றுக்கிடையில் காணப்படும் தொடர்புகளுக்கேற்ப நேரத்தை முகாமை செய்தல் வேண்டும்.

விசேட அறிவுறுத்தல்கள்

* பொருளியல் பாடத்தில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.
  உதாரணம் - நுகர்வு

* தேவையான இடங்களில் புள்ளிவிபர ரீதியான அட்டவணைகள், வரைபுகள், சமன்பாடுகள் மூலமாக விடைகள் விளக்கமளிக்கப்பட வேண்டும். வரைபுகளை சரியான அளவுத்திட்டத்திற்கேற்ப வரைவதிலும் அச்சுகளைச் சரியாகப் பெயரிடுவதிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

* கணித்தல்களின்போது ஒவ்வொரு படிமுறையையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் சரியான அலகுகளைக் குறிப்பிடல் வேண்டும்.

* தேவையான இடங்களில் சரியான குறியீடுகளைப் பயன்படுத்த வேண்டும்.

* உரிய வரைபடங்களை வரையும்போது கோடுகளைச் சரியாகப் பெயரிடவும் அதன் பெயர்ச்சிகளின் திசைகளை சரியாகக் குறிப்பிட வேண்டும்.

வரைபு தொடர்பான ஆலோசனைகள்:

* தரவுகளுக்கேற்ப வரைபுகள் வரையும்போது வரைபு தாள் பயன்படுத்துவது மிக முக்கியமாகும். வரைபுதாள் பயன்படுத்தாததால் சரியாக கணிப்பீடு மேற்கொள்ளப்படாமையை விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகள் இழக்கப்படுவதாக புள்ளியிடலின்போது புலப்படுகின்றது.

* அச்சுகளைச் சரியாக பெயரிடாமையும் வரைபுகளைப் பெயரிடாமையும் புள்ளிகள் குறையக் காரணமாகும்.
  உதாரணம் : உற்பத்தி சாத்திய எல்லை வளையியை பெயரிடும்போது X உம் Y உம் எனப் பெயரிடுவதற்குப் புள்ளி வழங்க முடியாது. அது X பண்டம் Y பண்டம் எனப் பெயரிடல் வேண்டும்.

* வரைபை வரையும்போது இடைவெட்டைச் சரியாகப் பெயரிடாமை புள்ளிகள் குறையக் காரணமாகும்.
  உதாரணம் : நிரம்பல் கோட்டை வரையும்போது அங்கு எதிர்கணிய இடைவெட்டுப் புள்ளி ஆரம்பிக்குமாயின் அதன்படி வரைபை வரைய வேண்டும்.

  உதாரணம் :



  மொத்தச் செலவு வளையிலும் சுயாதீன செலவின் அளவினை வரைபில் சரியாகக் காட்ட வேண்டும்.

  உதாரணம் :



* அச்சுக்களில் பதியும்போது அளவுத்திட்டத்தின்படி புள்ளியிடுவது முக்கியமாகும். தூரத்தை சுருக்கி பெயரிடல் பொருளியல் வரைபுகளின்போது சரியன்று.

  உதாரணம் :



* பேரினப் பொருளாதார சமநிலையைக் காட்டும்போது வருமானம், செலவுகளைக் குறிக்கும்போது இரு அச்சுகளிலும் தரவுகளைச் சமனாகும்படி புள்ளியிட்டு சமவருமானச் செலவுக்கோடுகளை வரைய வேண்டும். அதேபோல சுய மாற்றமும் வருமான கிடையச்சில் குறிப்பிடல் வேண்டும்.

  உதாரணம் :



* பேரின பொருளாதார சமநிலையைச் காட்டும்போது வெளிப்பாய்ச்சலைக் காட்டும் எதிர்க்கணிய இடைவெட்டினால் ஆரம்பிக்கப்படுமாயின் அதனை சரியாகக் காட்டப்படல் வேண்டும்.

உதாரணம்



* குறிப்பு : வளையியை வரையும்போது இரு அச்சுக்களையும் தொடும் வகையில் வரைவது மிக முக்கியமாகும். அப்படி அமையாவிட்டால் அது உற்பத்திச் சாத்திய எல்லையாக மாட்டாது.

3.2. கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான கருத்துகளும் ஆலோசனைகளும்

* எண்ணக்கருக்கள் தொடர்பான சரியானதும் உறுதியானதுமான அறிவு இருக்க வேண்டியதுடன், எண்ணக்கருக்கள் தொடர்பான பிரயோகப் பயன்பாடுகளை மேம்படுத்த வேண்டும்.

* பொருளாதார மற்றும் சமூகக் காரணிகள் தொடர்பாக காலத்துக்குக் காலம் ஏற்படுகின்ற மாற்றங்கள், போக்குகள் தொடர்பாக திருப்திகரமான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

* இதற்காக இலங்கை மத்திய வங்கி, குடிசன தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், நிதியமைச்சு ஆகிய நிறுவனங்களால் வெளியிடப்படும் அறிக்கைகள், பிரசுரங்கள் என்பவற்றை பரீட்சிப்பதற்கும் பழக்கப்பட வேண்டும். அதன் மூலம் தமது அறிவை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும்